புத்தம் புதியது என்றும் இனிப்பது

# ரமணிசந்திரன்








அன்றாடம் தினசரி காலண்டரில் முந்தைய தேதியைக் கிழிப்பது, சிறு வயதில் இருந்தே, சுசித்திராவின் வேலைதான்.

ரொம்பச் சின்ன வயதில் "நானும் கிழிப்பேன்" என்று அடம் பிடித்து, இன்னொரு நாளைக் கிழித்தாளாம்.

அன்று பார்த்து வீட்டுக்கு ஏகப்பட்ட விருந்தினர் வந்து 'என்ன, முன்கூட்டியே கிழித்துவிட்டீர்கள்? 'நாளைய தேதி உடனே வராதா என்று, அப்படி என்ன ஏக்கம்?' 'இரண்டு தேதித்தாட்கள் ஒட்டிக் கொண்டு வந்துவிட்டனவா? அப்படி என்ன அவசரம்?' என்று ஏகப்பட்ட கேள்விகள் கேட்டார்களாம்.

ஏதாவது உரையாடலுக்கு விஷயம் தேடியவர்கள், கிண்டலடிப்பவர்கள், சிறு தவறுகளையும் கண்டுபிடித்து, அதற்கொரு விளக்கத்தையும், தானாகவே தந்து இடிப்பவர்கள்! இப்படிப் பலருக்கும் பதில் சொல்லிச் சொல்லி, தனத்துக்கும் சுதர்சனத்துக்கும் அலுத்துப் போயிற்று.

இதில், அனியாயம் என்னவென்றால், பெற்றோராய், அவர்கள் பெருமையாகச் சொன்ன உண்மைப் பதிலைப் பலர் நம்பவுமில்லை.

இரண்டு வயதுக் குழந்தைக்கு காலண்டரில் தேதி கிழிக்கத் தெரியுமா? அதுவும், கோணல் மாணலாக இல்லாமல் ஓரமாக ஓர் இணுக்குக் காகிதம் கூட ஒட்டிக் கொண்டிராமல் அழகாக?

அதிலும், கடைசியாக வந்த பெரிய நாத்தனார் "உனக்குத்தான் எப்போதுமே கை நிதானமே கிடையாதே! முதல் நாள் ராத்திரியே, அபசகுனமாகப் பாலைக் கொட்டிவிட்டு துடைக்கத் துணி கேட்டவளாயிற்றே! இப்போதும் அவசரத்தில் இரண்டாகக் கிழித்தாய் போல! உன் தப்புக்குப் பெற்ற பிள்ளை மேல் பழி போடுகிறாயே! ஆனாலும் அனியாயம்டி!" என்று குத்திப் பேசவும், தனத்தின் பொறுமை தீர்ந்தது.

"ஏய், சின்ன விஷயம்ப்பா. இதற்குப் போய் கண் கலங்குகிறாயே. பெரியக்கா சுபாவம் தெரியாதா? அதே சமயம் சின்னக்கா வந்து, தரையைத் துடைத்துவிட்டு 'கெட்ட சகுனம் என்று யாராவது சொன்னால் காதில் வாங்காதே. உங்கள் இருவரின் பொருத்தம் பார்த்து கண் பட்ட திருஷ்டி கழிந்ததாக, நிம்மதியாக இரு' என்று வேறு பாத்திரத்தில் பாலும் கொண்டு வந்து தந்துவிட்டுப் போகவில்லையா? எந்த விஷயத்தையும் இரண்டு விதமாகப் பார்க்கிறவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். நல்லதை எடுத்துக்கொண்டு, மற்றதை மறப்பா" என்று சுதர்சனம் மனைவியிடம் சொல்லிப் பார்த்தார்.

"இருக்கலாம். ஆனால் இன்னொரு தடவை இப்படி நடப்பதைப் பார்த்தால், எப்போதுமே, இங்கே இப்படித்தான் என்று, உங்கள் பெரியக்கா, ஊர் முழுக்கப் பரப்பி விடுவார்கள். அதனால் கவனத்துடன்தான் இருக்க வேண்டும்" என்றாள் தனம்.

மகளும் லேசுப்பட்டவள் அல்ல. தானே காலண்டரில் தாள் கிழிப்பதாக தினமும் வந்து நின்றாள். வேண்டாம் என்றால் சுதியை ஏற்றி, ராகம் பாடினாள்.

கடைசியாக இரண்டு வயதுக் குழந்தை சுசித்ராவுக்கு ஒழுங்காகக்



காலண்டரில் தேதியைக் கிழிக்கக் கற்றுக் கொடுத்து, அந்த வேலையை அவளது பொறுப்பாகவும் ஆக்கினார்கள்.

அன்றிலிருந்து, இன்றுவரை, அந்த கடமையிலிருந்து, சுசித்ரா வழுவியதே இல்லை எனலாம்.

பள்ளி, கல்லூரிகளில் எங்கேனும் சுற்றுலாப் பயணங்கள் அழைத்துச் செல்லும்போதும், பெற்றோரிடம் நினைவு சொல்லிவிட்டுத்தான் கிளம்புவாள். சென்ற பின்னும், தினம் ஒருதரம், ஞாபகப்படுத்துவாள்! தன் பொறுப்பு என்று ஏற்றுவிட்டால், அதை மறவாது செய்து முடிப்பது, அவளது சுபாவம்.

சின்ன வேலைதானே என்று அலட்சியமும் இராது. பெரிய பணி என்று மலைப்பதும் கிடையாது.

ஆனால் அப்போதெல்லாம் பல்தேய்த்துக் குளிப்பது போல தினக் கடமைகளுள் ஒன்றாக தனிப்பட்ட எந்த உணர்ச்சியும் இல்லாமல் செய்தது. இப்போது அப்படியின்றி, ஒவ்வொரு நாள் தேதித்தாளை கிழிக்கும்போதும், சொர்க்கத்தை நோக்கி, ஓர் அடி எடுத்து வைப்பது போல அவளது உள்ளம் துள்ளியது.

இன்னம் முப்பது நாட்கள் இருக்கின்றன. இருபத்தொன்பது நாட்கள், இன்னும்.... என்று நாட்கள் குறையக் குறைய உற்சாகத்தில் குதித்துக் கொண்டிருந்த பெண்ணைப் பாராதது போலப் பார்த்து பெற்றோரும் ரசித்துக்கொண்டிருந்தனர்.

ஆராய்ந்து, தேர்ந்து இரு குடும்பங்களும் மனமொப்பி, அவனும் அவளும் சந்தித்து 'செம்புலப் பெயல் நீர் போல நெஞ்சம் கலந்து' என்பார்களே. அதுபோலப் பார்த்த கணத்திலேயே இருவருக்கும் பிடித்துப் போய் நடக்கும் திருமணம் அல்லவா?

மணநாள் நெருங்க நெருங்க மகிழ்ச்சி பெருகுவது இயல்புதானே?

அன்றைய தேதித்தாளைக் கிழித்த சுசித்ரா, விரல் விட்டு எண்ணிப் பார்த்தாள்.

இன்னும் பதினைந்தே நாட்கள்! ஊகூம், பதினை...ந்து நாட்கள்! விபாகரனின் சொந்த ஊரில், கோயிலில் பூஜை செய்து,

அம்மனுக்குப் பத்திரிகை வைத்த பிறகுதான், திருமண அழைப்பிதழை, மற்றவர்களுக்குக் கொடுக்கத் தொடங்குவார்களாம்.

அதற்காக அவனுடைய குடும்பத்தார் எல்லோருமாகச் சொந்த ஊருக்குப் போயிருந்தார்கள். நாளைக் காலையில் வந்து விடுவார்கள்.

"அப்புறமாக, அக்கா கடைசி நேரத்து ஷாப்பிங், கொஞ்சம் வைத்திருக்கிறாள். அத்தோடு, இங்கே சென்னையிலும் நேரில் போய் அழைப்புக் கொடுக்கத் தொடங்கினால், நாட்கள் பறந்துவிடும். திடுமெனக் கண் சிமிட்டும் நேரத்தில் நம் திருமணமே முடிந்து, நீ என்னவளாகியிருப்பாய். ஒரு வகையில், இது போன்ற வேலைகளும் நல்லதுதான். மற்றபடி, எப்போது எப்போது என்ற தவிப்பை அடக்கிக்கொண்டு பொழுதை விரட்டித் தள்ளுவது எவ்வளவு கடினமாக இருக்கிறது, தெரியுமா?" என்று இரண்டு தினம் முன்னதாகக் கிளம்புமுன், ஏக்கமாகச் சொன்னவனை, அப்போதே பார்க்க வேண்டும் போலச் சுசித்ராவின் மனம் துடித்தது.

காதால், அவன் குரலையாவது கேட்க காதல் மனம் ஆசைப்பட்டது.

ஆனால், ஊருக்குப் போய்வரும் வரை, எந்த நேரம் கோயிலில் இருப்பானோ, எந்த நேரம் காரை ஓட்டிக் கொண்டிருப்பானோ, அதை விடவும், அருகில் எந்த மாதிரி உறவினர் இருக்கக் கூடுமோ என்பதால், அவனோடு செல்லில் தொடர்பு கொள்ள வேண்டாம்என்று, விபாகர் அவளிடம் கேட்டிருந்தான்.

விபாகரனுடைய தமக்கை காதல் திருமணம் செய்தவள். அது ஒரு காரணம் என்றாலும், சிறு வயதிலேயே தந்தையை இழந்தபோது, உறவு முறைக்காரர்கள் நடந்துகொண்ட விதமே, உறவுக்காரர்களோடு பெரும் பிரிவை ஏற்படுத்தி விட்டதாகவும், அதனாலேயே ஊரில் உள்ள சொந்த பந்தங்களோடு, அவனுக்கு ஓர் அன்னியத் தன்மை ஏற்பட்டு போயிருந்தது என்றும் தெரிவித்திருந்தான்.

பார்த்தாலே யாரையும் அடையாளம் தெரியாது எனும்போது,



குணத்தைப் பற்றி என்ன சொல்வது?

பட்டணத்து நாகரீகம் என்று, யாரேனும் ஏதாவது சொல்லி, இவன் ஆத்திரப்பட்டுப் பதில் பேசி... ரசாபாசம் ஆகிவிடக் கூடுமாம்! அதனால், வெறும் பேச்சுக்கு கூடத் தடா போட்டுவிட்டான். எரிச்சலோடுதான்!

ஆனாலும் கிராம தேவதை, குல தேவதை, இஷ்ட தேவதை என்று மூன்று வகையில் கடவுளை வணங்க வேண்டும் என்று, காஞ்சிப் பெரியவர் சொல்லியிருப்பது போல, அந்த வரிசையில் முதலில் சொந்த ஊர் கோயிலில் பத்திரிகை வைக்க வேண்டும் என்பது, அவனுடைய தமக்கையின் விருப்பம்!

இப்போது இருப்பவர்கள் எப்படியோ போகட்டும். தலைமுறை தலைமுறையாக அங்கே வாழ்ந்திருந்த மூதாதையரின் ஆசியும் தம்பிக்குக் கிடைக்கும் என்பது அவளது வாதம்.

சுசித்ராவுடைய பெற்றோரும் அந்தக் கருத்தை ஆதரித்தனர். ஆண்டுதோறும் அவர்களது ஊர்க் கோயில் திருவிழாவுக்கு தவறாமல், குடும்பத்தோடு சென்று அம்மனை வழிபட்டு வருகிறவர்கள் ஆயிற்றே!

அவர்களுமே, அப்படி ஊருக்குச் சென்று, கோயிலுக்குப் பத்திரிகை வைத்துவிட்டுச் சென்ற வாரம்தான் திரும்பி வந்திருந்தனர்.

அதேபோல, மணமகன் வீட்டாரும் செய்ய வேண்டும்என்று, அவர்களுக்கும் ஆசையே!

அதன்படியே விபாகரனும், அவனுடைய அக்கா குடும்பமும், இப்போது சொந்த ஊருக்குப் பயணம் சென்றிருந்தார்கள். கிளம்பிச் சென்ற முதல் நாள் இரவில் வெகுநேரம், அவளோடு பேசிக் கொண்டிருந்த விபாகரன், அதற்கு மேல் அவளை அழைத்துப் பேசவே இல்லை.

அவளைப் போலவே, அவனுக்கும் ஆவல் இருக்கும்தானே? அவளாகக் கூப்பிடும்வரை, வேளை கெட்ட வேளையில் அழைத்து, அவளைச் சங்கடத்தில் ஆழ்த்தி விடக் கூடாது என்று, மிகவும்

சிரமத்துடன் பொறுமையைக் கடைபிடித்துக் கொண்டிருந்தாள் சுசித்ரா.

அவளை எப்போது கூப்பிடுவான்?

கைவிலேயே வைத்துக்கொண்டு, குட்டிபோட்ட செல்லைக் கையிலேயே வைத்துக்கொண்டு, குட்டிபோட்ட பூனை மாதிரி ஹாலிலேயே சுற்றிக் கொண்டிருந்தாள் 'லான்ட் லைன்' மணியடித்துக் கூப்பிட்டது.

யாராக இருக்கும் என்று எட்டிப் பார்க்கக் கூட அவளுக்கு மனமில்லை.

'போயேன்' என்பது போலத் தலையை மட்டும் சிலுப்பிவிட்டு கையில் இருந்த செல்ஃபோனை ஆராய்ந்தாள். தெரியாமல் கை பட்டு 'சைலன்ட் மோடு'க்குப் போயிருக்குமோ?

அப்படியில்லை என்று அவள் கண்டுபிடித்தபோது, மணியடித்துக் கொண்டிருந்த டெலிஃபோனை எடுக்க வந்த தனம், கைகளைப் பலமாக அசைத்து, மகளைக் கூப்பிட்டாள்.

கையில் டெலிஃபோன் கருவியை எடுக்கக் கூட இல்லை. அந்தப் பக்கம் கேட்காது எனும்போது, யார் என்று வாய் திறந்து சொல்வதுதானே?

'என்ன'என்பது போலத் தாயைப் பார்த்தவளிடம், காலர் ஐடியை காட்டி, உனக்குத்தான் என்று புன்னகைத்தவாறே, விலகிப் போய்விட்டாள்.

அம்மா அப்படி அசடு வழிய விலகிப் போவதானால், அழைப்பது விபாகரனாகத்தான் இருக்க வேண்டும்!

கையில் செல்லிருக்க, ஏன் அதில்?

கையில் இருந்த செல்லை, சோஃபாவில் போட்டவாறே, ஒரெட்டில் அணுகி, டெலிபோனை எடுத்து "ஹலோ!" என்றாள் ஆவலாக.

ஒருகணம் தயங்கிவிட்டு "ஓ! நீயேதான் எடுத்தாயா?" என்றான் அவன், வறண்ட குரலில்.

"விபா, நீங்களா? செல்லில் தொடர்பு கொள்ளாமல், ஏன் இந்த எண்ணில் கூப்பிடுகிறீர்கள்? 'டவர்' இல்லாத இடமா?



அதிருக்கட்டும். ஏன் குரல் ஒரு மாதிரி இருக்கிறது? தொடர்பு சரியாக இல்லையா?..." என்று கேள்வி மழை பொழிந்தாள், சுசித்ரா.

உள்ளிருந்து எட்டிப் பார்த்த தனம் "கொஞ்சம் மூச்சு விட்டுக் கொண்டு பேசேன்" என்று சைகையும் உதட்டசைவுமாக முறுவலோடு கூறினாள்.

ஆனால் எதிர் முனையில் சத்தமே இல்லாது போகவும், தாயின் செயலை முழுதாக அலட்சியம் செய்து "விபா, நீங்கள் அங்கே இருக்கிறீர்கள்தானே? நான் பேசுவது கேட்கிறதுதானே? நீங்கள் ஏதாவது பேசினீர்களா? எனக்கு ஒன்றுமே கேட்கவில்லையே?" என்று படபடத்தாள் பெண்.

பெருமூச்சு விடுவது மாதிரி ஏதோ கேட்டது.

'என்ன' என்று கேட்க அவள் வாயெடுக்குமுன் "இனிமேல் கேட்கும்" என்றான் விபாகரன்.

"ஓ! அப்பாடி! இப்போது கேட்கிறதா? சொல்லுங்கள், விபா, ஊர் எப்படி இருந்தது? கோயிலில் பூஜையெல்லாம் நன்றாக நடந்ததா? உறவுக்காரர்களுக்கு அழைப்புக் கொடுத்து விட்டீர்களா? இரண்டு நாட்களாக எனக்கு..."

பாம்பின் சீறல் போல, ஒரு வேக மூச்சு சத்தத்தில் சுசித்ராவின் பேச்சு நின்றது.

என்ன இது என்று அவள் யோசிக்கும்போதே, அவன் பேசினான் "தயவு பண்ணி குறுக்கிடாமல் நான் சொல்வதைப் பொறுமையாகக் கேள், சுசித்ரா"

'சுசித்ரா'வா? அவனுடைய 'சித்து' என்ன ஆயிற்று?

"...உன்னால் அது முடியாது என்றால், நான் உன் தந்தையிடம்தான் பேச வேண்டியிருக்கும்" என்று அவள் அதுவரையிலும் அறிந்திராத அன்னியக் குரலில், அழுத்தம் திருத்தமாக கூறி முடித்தான் விபாகரன்.

அவளுடைய தந்தையிடமா? இப்படி எழுத்துக் கூட்டித் தெளிவாகப் பேசுவதற்கு, அப்படி என்ன பெரிய விஷயம் இருக்கக்கூடும்?

ஊரில்... ஊரில் உள்ள உறவினர் பற்றி, விபாகரனுக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது.

ஒருவேளை, ஊர் பக்கத்து உறவினர்கள், ரொக்கம், நகை ஒன்றும் கேளாமல், என்ன திருமணம்? அப்பன், ஆயி இல்லாதவன், இவனுக்கு இது போதாதா என்று பிச்சை போடுகிற மாதிரிப் பெண்ணைக் கொடுக்கிறார்களா என்று, ஏதேனும் புரளி பேசி விட்டார்களா?

அந்தப் பாதிப்பில் பணம்பொருள் என்னவேனும் கேட்கப் போகிறானா?

"உங்கள் பெண்ணுக்கு, நீங்கள் என்ன செய்வதும், உங்கள் விருப்பம். அது என்னவானாலும், சுசித்ராவிடம்தான் இருக்கும். எதுவுமே செய்யாவிட்டாலும், நாங்கள் எதுவும் கேட்கமாட்டோம். நீங்கள் பெண்ணை மட்டும் என் தம்பிக்குத் தந்தால் போதும்" என்று அவனுடைய அக்கா சாருமதி அவ்வளவு தெளிவாகச் சொன்னாளே!

இப்போது, அதை மாற்றப் போவதால், இந்தக் குரலில், இப்படிக் கடுமையாகப் பேசுகிறானா? பேச்சு மாறுகிற குற்ற மனப்பான்மையில் வருகிற கோபமோ?

ஐயோ, தேவையே கிடையாதே! அவளது என்று இருப்பவை எல்லாம் இனி அவனவைதானே? இன்றே வேண்டுமானாலும் எழுதிக் கொடுப்பாளே!

"என்ன சொல்லுகிறாய்?"

உள்ளம் உருகி நின்ற சுசித்ராவின் எண்ண ஓட்டத்தில் விபாகரனின் கடுமையான குரல் குறுக்கிட்டது. அவன் எதைப் பற்றி கேட்கிறான் என்றே புரியாமல், சுசித்ரா சில கணங்கள் திகைத்து நின்றாள்.

இவன் என்னத்தைக் கேட்டான்?

அவசரமாக யோசித்து நினைவுபடுத்திக் கொண்டு "என்ன விபா? வந்து... அது என்னவென்று என்னிடமே சொல்லுங்கள். நான் குறுக்கே பேசாமலே கேட்கிறேன்" என்றாள் குழப்பத்துடன்.

மறுபடியும் பெருமூச்சு விடும் சத்தம்!



என்ன ஆயிற்று? அவனுக்கு உடம்பு ஏதும் சரியில்லையா? அதைச் சாதாரணமாகவே சொல்லலாமே!

பெரிய வியாதி எதுவும் இருக்க வழியில்லை. எதையும் திட்டமிட்டு, நியாயப்படியும் செய்யும், அவனுடைய அக்கா சாருமதியின் ஆலோசனைப்படி இருவருக்குமே, பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் நடத்தி, அதற்கு பிறகுதானே, திருமண நிச்சயமே நடந்தது!

அவனது பெருமூச்சும் மௌனமும் தாங்க முடியாமல், "உடம்பு ஏதும் சரியில்லையா, விபா? நான் வேண்டுமானால், அம்மாவிடம் சொல்லிவிட்டு அங்கே வரட்டுமா?" என்ற அவளது கரிசனக் கேள்விக்குப் பதிலாக "உன்னைப் பேச வேண்டாம் என்று சொல்லவில்லை?" என்று சினம் காட்டினான் விபாகரன்.

மீண்டும் சீறல்! என்ன கோபமாக இருக்கும்? சரி, எதுவானாலும் அதைச் சொல்லத்தானே கூப்பிட்டிருக்கிறான்? சட்டென்று சொல்ல முடியாமல் ஏதோ தடை. தடையை ஒதுக்கி, அவனே முன்வந்து சொல்லட்டும்! பிரச்சினை என்னவானாலும், அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்! முதலில் விஷயம் வெளிவரட்டும். அது எவ்வளவு பெரியதாக இருந்தாலும் சேர்ந்து சமாளிக்கலாம்!

"இல்லை விபா, இனிப்பேசவில்லை. நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள்" என்று தணிந்து போனாள் அவள்.

வயிற்றுக்குள் ஏதோ பிசைய அவள் காத்திருக்கும்போதே, விபாகரன் சொல்லத் தொடங்கினான்.

இல்லையில்லை. அதற்கு பெயர் வெறுமனே 'சொல்வது' அல்ல! அது ரொம்பவும் சாதாரணமான வார்த்தை!

பெண்கள் மேல் 'ஆசிட்' ஊற்றுவதுதானே, ஆண்களின் இப்போதைய 'ஃபேஷன்?' ஒரு சிறு மாறுதலாக அவன், அவள் நெஞ்சுக்குள் அமிலத்தை ஊற்றினான்!

வேறு எதுவும், அவளை இப்படித் தீயாகப் பற்றி எரிக்க முடியாது!



# என்னவளே, காதல் என்பது.... 2

விபாகரனுக்கு, இந்த ஊர் பயணத்தில் அவ்வளவாக விருப்பம் இருக்கவில்லை.

வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும், சுசித்ரா இருக்கும் சென்னையை விட்டு, விலகி வேறு எங்கே செல்லவும் அவனுக்குப் பிடிக்கவில்லை!

அதுவும், எப்போதும் ஒட்டி உறவாடிக் கொண்டிருந்த உறவினரா? கிடையாதே!

அவனுடைய தாயார் உயிரோடு இருக்கும்போது, அவ்வப்போது வருத்தப்பட்டு சொன்னவைகளை எண்ணிப் பார்க்கும்போது, பெரியப்பா, சித்தப்பா, அத்தைமார் என்று எல்லோருமே நெருங்கிய உறவே என்றாலும், அவர்கள் அனைவருமே வேண்டாதவர்கள் என்பதுதான், அவனது கருத்து.

ஆனால் அக்கா சொல்வது போல, அவர்களுடைய தந்தையின் ஊர் கோயில் அம்மாவுக்கு மிகவும் பிடித்தமானது. கோயில் தெய்வத்திடமோ பக்தியை மீறிய பைத்தியமே உண்டு.

அங்கே போனாலே, கோயில் கிணற்றிலிருந்து நீர் சேந்தி, கிடைத்த இடங்களை எல்லாம் கழுவிக் கோலம் போடுவாள். கோயிலின் சுற்று மதிலை ஒட்டி, அரளி, கொன்றை, ஜாதி, வாடாமல்லி என்று பூத்துக் குலுங்கும் செடிகளில் இருந்து பூக்களைப் பறித்து, அங்கிருந்த தெய்வச் சிலைகளுக்கு ஏற்றவாறு மாலைகள் கட்டிக் கொடுப்பாள்.

பாதி நேரம் கோயிலிலேயேதான் வாசம்!

ஆனால், அப்பா இல்லாத நிலையில், உறவினரும் ஒதுக்கிவிட்டபோது, அனாதை போலத் தனியாக சென்று வழிபட மனமில்லாததால்தான், அங்கே போகாமல் இருந்ததே!

ஆசைப்பட்ட அம்மாவே சென்றதில்லை. அவர்கள் இல்லாமல், இப்போது நாம் மட்டும் எதற்காகப் போவது என்பது, அவனதுவாதம்.



அக்கா கணவர் தேசிகன், இந்த வாக்குவாதத்தில் கலந்து கொள்ளவே இல்லை. அவரைப் பொறுத்தவரை, மனைவி சொன்னால், அது சரியாக இருக்கும். அவ்வளவுதான். காரண காரியங்களில் அவர் மனதை உழப்பிக் கொள்வதே கிடையாது. மறுத்துப் பேசவும் மாட்டார்.

இதற்கிடையே தேசிகனுக்குத் தொழில் முறையில் மிகவும் வேண்டப்பட்ட நண்பர் ஒருவர், பங்குதாரரும் கூட, அந்த நண்பரது வீட்டுத் திருமணத்துக்காக ஊர்ப்புறம் செல்ல வேண்டிய கட்டாயம், அவருக்கு வந்தது.

கல்யாண வீட்டார் குடும்பத்தோடு வந்து அழைத்ததில், இவர்களும் குடும்பத்தோடு செல்லும் கட்டாயம் ஏற்பட்டது.

திருமணம், விபாகரனின் சொந்த ஊர் பக்கம்தான்!

ஒரு கல்லில் இரு மாங்காயாகத் திருமணத்துக்கும் போய்விட்டு, விபாகரன், சுசித்ராவின் திருமண பத்திரிகையை, ஊர்க் கோயிலில் வைத்து கும்பிட்டு விட்டு வரலாம் என்று அவனுடைய அக்கா சாருமதி திட்டமிட்டபோது, யாராலும் ஒரேடியாக மறுத்துப் பேச முடியாமல் போயிற்று!

அச்சடித்து வந்துவிட்ட திருமணப் பத்திரிகையை ஊரில், குலதெய்வம் கோயிலில் வைத்துக் கும்பிட்டு, எடுத்து வந்த பிறகுதான் ஊருக்கெல்லாம் பத்திரிகை வைக்க வேண்டும். அப்படி அழைப்பதுதான், அந்தப் பக்கத்து முறைமை என்பதும், இப்போது அழைக்க வந்தவர்கள் மூலமாகவும், பேச்சினூடே தெரிய வந்தது.

அதனால்தான், அவர்கள் அவ்வளவு தாமதமாக வந்து அழைக்க நேர்ந்ததாம்.

"முதலில் பத்திரிகையே தப்புத் தப்பாக அடித்துவிட்டார்கள். பெண் பெயர் இருக்க வேண்டிய இடத்தில் மாப்பிள்ளை பெயரும், அவர் பெயர் இருக்க வேண்டிய இடத்தில் பெண் பெயரையும் அடித்துக் கொண்டு வந்துவிட்டார்கள். மாற்றி 'கம்போஸ்' பண்ணிக் கொணர்ந்ததில் 'கடவுள் துணை'யே இல்லை! ஒருவாறு, எல்லாம் திருத்தி, பத்திரிகை அடித்துக் கொண்டு வந்தபோது,

திருமணத்துக்குப் பத்தே நாட்கள்தான் இருந்தது! யாருடன்
சண்டை போடுவது? நேர விரயம்தானே? நேரே கோயிலுக்குப்
போய் பத்திரிகையைக் கொடுத்துக் கும்பிட்டுவிட்டு காரிலேயே
கிளம்பிவிட்டோம்.
பிழைப்பு நடக்கிற இடத்து மனிதர்கள் மிக முக்கியம் அல்லவா?
"இன்னும் நாலே நாட்களில் கல்யாணம். நல்லவேளையாகப்
பணத்தைக் கொடுத்துவிட்டால், திருமணத்தை நல்லபடியாக
நடத்தித்தர இப்போது நல்ல நிறுவனங்கள் இருக்கின்றன. தெரிந்த
ஒருவரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டோம். இனிமேல்
திருமணத்தன்று, பெண் மாப்பிள்ளையோடு போனால் போதும்!
திருமணம் முடிந்து மறுநாள் உணவு வரை, தயார் பண்ணிக் கையில்
தந்து விடுகிறார்கள்! எங்கே குறை என்று பூதக் கண்ணாடியை
வைத்துத் தேடுகிறவர்கள் கூட, அவர்களைத்தான் திட்ட முடியும்.
எங்களை அல்ல!"
கூடச்சேர்ந்த சிரித்தபோதும், சாருமதியின் ஊர் ஜபம் வலுத்தது.
அதற்கேற்ப மருமகள் சுசித்ராவுடைய பெற்றோரும், சொந்த
ஊருக்குப் போய், அவர்களது குலதெய்வத்துக்குத் திருமணப்
பத்திரிகையை கொடுத்துவிட்டு வந்துவிடவே, சாருமதியின்
பிடிவாதம் அதிகமாயிற்று.
விபாகரனது சொந்த ஊர், அவனுடைய மூதாதைகள் வாழ்ந்த,
அவனுடைய உறவின் முறைப் பங்காளிகள் இப்போது வசிக்கும் ஊர்
கோயிலுக்குப் போயே தீர வேண்டும் என்று அதிலேயே நின்றாள்.
தந்தை இறந்ததில் இருந்து, தானே முடிவெடுத்துச்
செயல்படுத்திப் பழக்கம் உள்ளவள், சாருமதி.
கணவரும், அவளுக்கு ஒத்து ஊதுகிறவராகவே அமைந்தது,
அதே தன்மையை வலியுறுத்தி நிலைக்கச் செய்துவிட்டது.
ஆனால், சாருமதியின் இந்தப் பிடிவாதத்தை ஊக்கியது, வேறு
என்பதுதான், அப்போது யாருக்கும் தெரியாது போயிற்று.
சுமார் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக, அந்த ஊர் பக்கமே,
சாருமதி, விபாகரன் மட்டுமல்ல, அவர்களுடைய தாயார் கூடச்



சென்றது இல்லை.
"அப்படி இருக்கும்போது, புதிதாக, எதற்கு இந்தப் பழக்கம்?"
என்று விபாகரன் மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்தான்.
"எவ்வளவோ காலமாக அவர்களோடு தொடர்பே
இல்லாமல்தானே இருந்திருக்கிறோம்? இப்போது மட்டும் அந்த
உறவுகள் எதற்காக?" என்று எரிச்சல்பட்டான்.
ஆனால், அவனது ஆட்சேபங்கள் எல்லாம், சாருமதியின்
பிடிவாதத்தை மேலும் உறுதிப்படுத்துவனவாகவே அமைந்து
போயின.
அக்காவுக்கும் தம்பிக்கும் இடையே பலத்த வாக்குவாதம் என்கிற
அளவுக்கு வந்தபோதும், சாருமதி, இதில் விட்டுக் கொடுப்பதாக
இல்லை.
"எங்கள் திருமணம்தான், எந்தப் பக்கத்திலும் சொந்த பந்தம்
என்று யாருமில்லாமல் எப்படியோ நடந்தது என்று அப்போது அம்மா
மிகவும் வருத்தப்பட்டார்கள். இப்போது பையனின்
திருமணம்தானே? செலவுக்கு பணம் எதுவும் கேட்டுவிட மாட்டோம்
என்ற தைரியத்தில், நம் குடும்பத்துப் பெரியவர்கள் வந்தாலும்
வரலாமில்லையா? நான் இவ்வளவு சொல்வது. அதற்காகவும்தான்
விபா. ஏதோ நம் அம்மா ஆசைப்பட்டது. உன் திருமணத்திலாவது
நடக்கட்டுமே என்று எனக்கு ஆசை!" என்று சாருமதி
சொன்னபோது, அதற்கு மேல் அவன் அவ்வளவாக மறுக்கவில்லை.
ஏனென்றால் தாயின் கை சளைத்தபோது, அந்த தாய்க்குத்
தாயாகி குடும்பத்தைத் தாங்கி நின்றவள் அவள்தான். விபாகரனின்
படிப்பு, வளர்ச்சி, எல்லாமே அவளது உழைப்பும் திட்டமும்தான். தன்
சொந்த சுகம் பற்றி நினைக்காத திட்டங்கள்!
எனவே அவள் தனக்கும் ஆசை என்று சொன்ன பிறகு, அதை
மறுப்பதற்கு, அவளுடைய தம்பிக்கு மனம் வரவில்லை.
ஆனால் ஒரு நிபந்தனை மட்டும் வைத்தான் "அங்கே போங்கள்,
கூப்பிடுங்கள். ஆனால், வாருங்கள், வாருங்கள் கட்டாயம் வர
வேண்டும்என்று யாரையும் உருகிக் கொஞ்சி அழைக்கக் கூடாது.

பத்திரிகை வைக்கக் கோயிலுக்கு வந்தோம். அப்படியே உங்களுக்கும் தருகிறோம். முடிந்தால்... முடிந்தவரை வாருங்கள் என்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் கெஞ்சுவதானால், அவர்களைக் கூப்பிடவே வேண்டாம். என்ன? சம்மதமா?" என்று கேட்டான்.

சாருமதி யோசனையாகப் பார்க்கவும், அவள் பேச வாயெடுக்குமுன் "நம் அம்மாவையே இத்தனை ஆண்டுகள் ஒதுக்கி வைத்தவர்கள், அக்கா! ஊர் ஆட்களுக்கு வக்காலத்து வாங்குமுன், அதை யோசி. அம்மா வருத்தப்பட்டார்கள், என்கிறாய். ஆனால் அந்த வருத்தத்தின் காரணமே, அவர்கள்தானே? அதை நினைத்தாலே, மனது கொதிக்கிறது, தெரியுமா?" என்றான் தம்பி.

"குற்றம் பார்க்கின், சுற்றம் இல்லை" என்றாள் சாருமதி சுருக்கமாக.

"நம் மீது குற்றம் இல்லாதபோது, நம்மை சுற்றம் இல்லை என்று போனவர்களைப் பற்றிப் பேசுகிறாய் என்பது, உனக்குக் கொஞ்சமாவது நினைவிருக்கிறதா, அக்கா" என்று கேட்டான் தம்பி.

நீண்ட ஒரு பெருமூச்சால், அதை ஒப்பினாள் தமக்கை.

"நீ சொல்வது சரிதான், தம்பி. ஆனால் அம்மாவின் ஆசைக்காகத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. நீ கூறியது போல, ஒப்புக்காக கூப்பிட்டுவிட்டு, வந்துவிடலாம். வந்தால் வரட்டும். அவ்வளவுதான். ஆனால் கோயிலுக்குப் பத்திரிகை வைக்கும்போது, அம்மனோடு நம் அப்பா வழி முன்னோர்களையும் சேர்த்து நினைத்து, வேண்டிக் கொள்வோம். அவர்களது ஆசி இருந்தால் கூடப் போதும்" என்று முடித்தாள்.

அப்படி நினைத்துதான் சாருமதி, அவளுடைய கணவர், பிள்ளைகள் பவித்ரா, நிர்மலும், கூடவே விபாகரனும் கிளம்பிச் சென்றார்கள்.

ஆனால்... அந்த ஆசியைக் கேட்கும் வாய்ப்புத்தான் அவர்களுக்குக் கிடைக்கவே இல்லை.

தேசிகனுடைய நண்பர் சந்தானம் வீட்டுத் திருமணத்துக்குப் போய், நல்லபடியாக விருந்து உண்டது வரை, எல்லாம் அவர்கள்



திட்டப்படியே நடந்தது.

அதன்பிறகு எல்லாமே மாறிவிட்டது.

மாலை வரவேற்புக்கும் இருந்துவிட்டுச் செல்லும்படி, திருமண வீட்டார் மிகவும் வற்புறுத்தினார்கள்.

இந்தத் தொழிலில் தொடர்பு உள்ள பலரும் மாலையில் வருவதாகச் சொல்லியிருக்கிறார்களாம். வரவேற்பு கூட்டம் குறைந்ததும், அதுபற்றி ஒரு 'மினி மீட்டிங்'போட்டுவிடலாம் என்றார் நண்பர்.

காலையில் பூஜை பற்றி யோசித்தபோது, இரவு எந்நேரமானாலும் அனுப்பி விடுவதாக, நண்பர் உறுதியளித்தார்.

பிள்ளைகளைப் பெற்றவர்கள் சற்று யோசித்தார்கள்.

இருப்பதையெல்லாம் போட்டுத் தொடங்கியிருக்கும் தொழிலின் வளர்ச்சி ரொம்ப முக்கியம்!

சக்தியில்லாத சிவமாகச் செயல்படத் தேசிகனால் முடியாது. மேலும் தொழிலின் கணக்கு வழக்குகளை கையாள்வது, சாருமதிதான். எனவே, அவளும் இங்கே இருந்தாக வேண்டிய நிலை!

அதேசமயம் பிள்ளைகளை தூக்கம் கெட வைத்து, இரவு நேரத்தில் அலைப்பதும், தேசிகன், சாருமதி இருவருக்கும் பிடிக்கவில்லை.

எனவே, பவித்ராவையும், நிர்மலாவையும் அழைத்துக் கொண்டு விபாகரன் திருச்செந்தூரில் அவர்கள் தங்குவதற்காக அறைகள் முன்பதிவு செய்திருந்த ஹோட்டலுக்கு காரில் முதலில் போய்விடுவது 'மீட்டிங்' முடிந்த பிறகு ஒரு டாக்சியோ, பஸ்சோ பிடித்து, தேசிகன் தம்பதி, திருச்செந்தூர் செல்வது என்று முடிவு செய்தார்கள்.

அவர்களாக டாக்சி, பஸ் என்றெல்லாம் அலைய வேண்டாம் என்றார், சந்தானம் தேசிகனுடைய நண்பர்.

திருமணத்திற்காக ஏற்பாடு செய்த கார்கள் நாலைந்து இருப்பதால் அவைகளில் ஒன்றில் தானே, அவர்களை அனுப்பி வைப்பதாக வாக்களித்தார்.

அதன்படி, விபாகரன் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு

திருச்செந்தூருக்குச் சென்றான்.

ஹோட்டலில் இரண்டு அறைகளில் 'செக்கின்' பண்ணிவிட்டுக் கொஞ்ச நேரம் மூவருமாக ஒரே அறையில் உட்கார்ந்து டீவி பார்த்தார்கள்.

இந்த டீவியைத்தான், சென்னையிலும் பார்க்கலாமே என்று தோன்றவும், அறைகளை பூட்டிக்கொண்டு கிளம்பினார்கள்.

ஹோட்டல் வரவேற்பறையில் விசாரித்து, நல்ல ஹோட்டல் என்று அவர்கள் சொன்ன இடத்தில் காஃபி டிஃபனை முடித்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்றார்கள்.

கொஞ்ச நேரம் அலையில் கால் நனைத்து நின்றார்கள். அடுத்து, மணலில் சற்று நேரம் காலாற நடந்தார்கள். மணல் கரையை விட்டு மேலே ஏறி, கோயிலை ஒட்டிக் கடலைப் பார்த்தவாறு அமைக்கப்பட்டிருந்த பெஞ்சுகளில் சற்று நேரம் உட்கார்ந்து பொழுது போக்கினார்கள்.

கடலை மேவி வந்த தென்றலும், ஓயாது மோதும் அலைகளின் ஒலியும், விபாகரனை மயக்கி, சுசித்ராவை நினைக்க வைத்தன.

பிள்ளைகள் அதற்குள்ளேயே சற்று நேரம் ஓடிப்பிடித்து விளையாடினார்கள். அது அலுத்ததும், மறுபடியும், அறைக்குத் திரும்பினார்கள். வரும்போதே உணவை முடித்துக் கொள்ள, அன்றைய அலைச்சலில் பிள்ளைகளுக்குக் கண் சொக்கியது.

பழகிவிட்ட வழக்கமாக உடம்பு கழுவிவிட்டு படுத்த சிறுவர்கள், உடனே அயர்ந்து தூங்கிவிட்டார்கள்.

கடற்கரையில் கற்பனை செய்ததை எல்லாம் சுசித்ராவிடம் பகிர்ந்து, கேலியும் கிண்டலுமாகக் கொஞ்சி குலாவிவிட்டு, விபாகரன் பேச்சை முடித்தபோது, மணி பதினொன்று.

அவனுக்குமே, கண் சொக்கத்தான் செய்தது. அக்கா அத்தான் வரும்வரை விழித்திருக்க எண்ணியவன், நாலாவது கொட்டாவிக்குப் பின் படுத்துவிட்டான்.

வந்ததும்தான் செல்லில் கூப்பிடுவார்களே! அதுவும் வீட்டுக்கு வரும்போது கூடத் தெரு முனைக்குள் நுழையும்போதே, செல்லில்



கூப்பிட்டு வருகையை அறிவிப்பது அத்தானின் பழக்கம்!

"பெரி...ய மகாராஜா! அங்கே வருமுன், இங்கே பராக் அறிவிக்கிறார்!" என்று கிண்டல் செய்தபோதும், தேசிகன் வரும்போது, வாசலில் நின்று புன்னகையோடு வரவேற்பது சாருமதியின் வழக்கம்!

அவளே போன்ற ஒத்த மனைவியாக, அவனுக்குச் சுசித்ரா கிடைத்திருக்கிறாளே! கண் மூடிக் கற்பனையில் கண்டவளைக் கனவிலும் காணத் தொடங்கினான் விபாகரன்.

எவ்வளவு நேரம் தூங்கினானோ?

விடாமல் மணியடித்த சத்தம், விபாகரனை எழுப்பியது.

அக்கா, அத்தான் வர வெகு நேரம் ஆகிவிட்டது போல என்று எண்ணியவாறே எழுந்து, செல்லை நிறுத்த முயன்றால் அழைத்தது செல் அல்ல!

குழப்பத்துடன் பார்த்தால், அறையில் இருந்த டெலிஃபோன் கருவிதான் மணியடித்துக் கொண்டிருந்தது.

ஏன் அவனது செல்லுக்குத் தொடர்பு கொள்ள வேண்டியதுதானே என்று எண்ணியவாறே, எழுந்தவனுக்கு வயிற்றுக்குள் சில்லென்றது

இந்த நேரத்தில் வேறு யார், எதற்காக, அவனைக் கூப்பிடுகிறார்கள்?

விழுந்தடித்துக்கொண்ட ஓடிப் போய் ரிசிவரை எடுத்துப் பேசினான்.

ஹோட்டல் வரவேற்பில் இருந்து கூப்பிட்டார்கள்.

"உங்களைப் பார்க்கப் போலீஸ் அதிகாரி வந்திருக்கிறார். கொஞ்சம் கீழே வரவேற்புக்கு வந்து, அவரோடு பேசுகிறீர்களா, சார் சின்னப் பிள்ளைகளை எழுப்ப வேண்டாம் என்றுதான்... கதவை சாத்திக்கொண்டு வந்தாலும், இங்கே ஆபத்து எதுவும் கிடையாது வருகிறீர்களா? ஒருவேளை, அவர்கள் விழித்துக்கொண்டு தேடினால் விவரம் சொல்வதற்கு, நான் வேண்டுமானால் யாரையாவது அனுப்பி, வெளியே நிற்கச் சொல்லட்டுமா?"

குரலில் ஏன் இந்தக் கனிவு? அவர் அக்கறை காட்டிப் பேசப் பேச,

விபாகருக்கு, வயிறு கலங்கியது.

கதவை இழுத்துச் சாத்திக்கொண்டு, வரவேற்புப் பகுதிக்கு விரைந்து சென்றான்.

அங்கே நின்று பேசிக் கொண்டிருந்த போலீஸ் அதிகாரி அவனைக் கண்டதும் முன்னோக்கி வந்தார். அவனை கையைப் பற்றி "சாரி, உங்களிடம் ஒரு துயரமான விவரம் சொல்ல வேண்டியிருக்கிறது..." என்று தொடங்கினார்.

அதற்குப் பிறகு இப்போது வரை, இடைவிடாத ஒரு பயங்கரக் கனவைத் தொடர்ந்து கண்டு கொண்டிருக்கும் உணர்வுதான் விபாகருக்கு. என்ன முயன்றும், இடையில் விழித்து எழுந்து, "அப்பா கனவுதான்" என்று நிம்மதி அடைய முடியாத, நீண்ட கனவு!

இன்ஸ்பெக்டர் சொன்ன தகவலின்படி, தொழில் பேச்சு முடிந்ததும், தேசிகனுடைய நண்பர், கொடுத்த வாக்குப்படி காரோட்டியோடு ஒரு காரைக் கொடுத்து தேசிகன் தம்பதியை அனுப்பி வைத்தார்.

ஆனால் பாதி வழிக்கும் மேல் தாண்டியிருந்தபோது, முழுக்கத் தண்ணி போட்டுவிட்டு ஒரு டிரைவர் ஓட்டி வந்த சரக்கு லாரி, தவறாகவும் வேகமாகவும் வந்து, பலமாக மோதிவிட்டது.

"மோ மோதியதில்...?"

அந்த போலீஸ் அதிகாரியாலேயே, அந்த இளைஞனின் முகத்தைப் பார்த்துச் சொல்ல முடியவில்லை.

"ஒருவருமே பிழைக்கவில்லை!"

"ஒருவரும் ஒருவருமே பிழைக்கவில்லை!

"டேய் சீக்கிரமே தூங்க விட்டுவிடாதேடா. அப்புறம், நடு இரவில் எழுந்து உட்கார்ந்து கொண்டு எங்களை எழுப்பி கார்ட்ஸ் விளையாடுவோமா என்று கேட்குங்கள்!" என்று சொல்லி அனுப்பிய அக்கா! ஐயோ அக்கா!

"சும்மா அர்களைப் போக விடும்மா. பிறந்ததில் இருந்து அதுகளைப் பார்த்துக் கொள்கிறவனுக்கு இது தெரியாதா? உன் பிள்ளைகளை, உன்னை விட, விபாகர் சிறப்பாகப் பார்த்துக் கொள்வான்..." என்ற அத்தான்!



எப்படி இல்லாமல் போனார்கள்!

அடையாளம் காட்ட, அவனைத்தான் அழைத்துப் போனார்கள்.

என்ன கோரம்! இந்தக் காட்சி எப்போதேனும் மறக்குமா?

அந்தக் கொடிய காட்சியைப் பார்ப்பதற்கு சிறுவர்களை யாருமே அனுமதிக்கவில்லை. ஆனால் விவரம் தெரிந்ததும், அச்சமும், தவிப்புமாக அவன் கையைப் பற்றிக்கொண்டு, அவன் முகம் பார்த்து நின்ற பிள்ளைகளைப் பார்த்து, அவன் மனம் விண்டது!

'உன்னை விட, விபாகர் சிறப்பாகப் பார்த்துக் கொள்வான்' எப்படி? எப்படி அத்தான்?

அவர்கள் போட்ட திட்டங்களை எல்லாம் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த விதிதான், அவரை இப்படிச் சொல்ல வைத்ததா?

நண்பர் சந்தானம் குடும்பத்தோடு ஓடோடி வந்து, இயன்ற உதவிகளைச் செய்தார். ஆனால் எந்த உதவியும், இல்லாமல் போனவர்களைக் கொண்டு வந்து சேர்த்துவிட முடியாதில்லையா?

இரண்டு நாட்கள் அங்கேயே இருந்து, சட்ட பூர்வமாகவும், சாஸ்திரப்படியும் செய்ய வேண்டிய அனைத்தையும் விபாகரன் செய்து முடித்தான்.

"மாமா, மாமா..." என்று ஒட்டிக்கொண்டு கிடந்த சிறுவர்களை வைத்துக்கொண்டு, முன் பின் அறியாத இடத்தில், அவனால் என்ன செய்திருக்க முடியுமோ?

ஆனால், வீட்டில் நடந்த திருமணத்தை ஒட்டிய பல்வேறு மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, தன்னால் ஆன அத்தனை உதவிகளையும் செய்து, தேசிகனுக்குத் தான் எப்பேர்ப்பட்ட நண்பர் என்று, சந்தானம் அவனுக்கு புரிய வைத்தார்.

அது மட்டுமில்லை பெரும்பாலும் கடன் வசதி பெற்று, தொடக்க நிலையில் இருக்கும் தொழில்தான், என்றாலும், அதில் தேசிகன் பங்குக்கு எவ்வளவு தேறும் என்று, மற்ற பங்குதாரர்களிடம் பேசி, பணமாகத் திரட்டி தருவதற்கு முயற்சிப்பதாகவும் வாக்களித்தார்.

கடைசியாக, இன்னமும் ஒன்று செய்தார்.

"இப்போதைய மனநிலையில், நீங்கள் காரை ஓட்டிச் செல்வது, கூடாது தம்பி. வேறு ஆள் ஓட்டி உட்காருவதும், மனதுக்குக் கஷ்டமாக இருக்கும். நீங்கள் மூவரும் ரயிலில் போங்கள். நான் டிக்கெட் எடுத்துத் தருகிறேன். காருக்கு டிரைவர் போட்டு சென்னைக்கு அனுப்பி வைக்கிறேன். உங்கள் வீட்டுக்கே காரை கொணர்ந்து தருவான்"

அந்த வகையில் விபாகரனுக்கு ஒரு பெரும் பாரம் இறங்கிய உணர்வுதான்.

அவனது மனம் உணர்ந்து செய்திருக்கும் ஏற்பாட்டுக்கும், மற்றவைகளுக்கும் நன்றி தெரிவித்துவிட்டு, ரயிலில் சென்னைக்கு கிளம்பினான்.

சந்தானம் மூன்று படுக்கை சீட்களைப் பதிவு செய்திருந்தபோதும், விபாகரனின் இரு புறத்திலும் ஒட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்த பவித்ரா, நிர்மல் இருவரும், அப்படியே காலை மடக்கிப் படுத்தார்களே தவிர, அவனை விட்டு விலகிப்போக மறுத்து விட்டார்கள்!

தாய் மாமனுடைய மடியிலேயே தலையை வைத்து, அப்படியே உறங்கவும் செய்தார்கள்.

இருவரின் தலையையும் தோளையும் வருடியபடி, அப்படியே உறங்கவும் செய்தார்கள்.

இருவரின் தலையையும் தோளையும் வருடியபடி, உட்கார்ந்தே இரவைக் கழித்தபோது, சந்தானத்தை இன்னுமொரு தரம் நன்றியோடு நினைத்தான் அவன். இருக்கும் ஒரே உறவை ஒட்டிக்கொண்டு கிடக்கும் இவர்களை விட்டுக் காரோட்டுவதில், அவனால் எப்படிக் கவனம் செலுத்த முடியும்?

பயணம் நெடுகிலும், விபாகரனின் மனதில் ஏதேதோ யோசனைகள், அவனது சிந்தனையின் நடுநயமாக வீற்றிருந்தவள் சுசித்ரா, அவனது அருகாமைக்காக அவனது மனம் துடித்தது. இன்றைய நிலையில், அவனுக்குச் சற்றேனும் ஆறுதல் தரக் கூடியவள், அவள்தானே?

ஆனால்....


இரவெல்லாம் விழித்திருந்து, பல விதமாகவும், ஆராய்ந்து அவன் எடுத்த முடிவை, நேரடியாகச் சுசித்ராவிடம் தெரிவிப்பதற்கு விபாகரன் விரும்பவில்லை.

அதற்காகவே, அவனது செல்ஃபோனை விடுத்து, அந்த வீட்டின் பொது உபயோகத்தில் இருந்த 'லாண்ட் லைனு'க்கு போன் செய்தான். ரொம்பப் பக்கத்தில், அதே அறையில் சுசித்ரா இருந்தால் தவிரப் பெரும்பாலும் அந்தத் தொடர்பைப் பயன்படுத்துவது, வீட்டுப் பெரியவர்கள்தான்.

ஆனால், அதையும் சுசித்ராவே எடுக்கவும், வேறு வழியின்றி, அவளிடமே விஷயத்தைச் சொல்ல நேர்ந்தது. சொல்லி முடிப்பதற்குள், ரொம்பவே சிரமப்பட்டுப் போனான், அவன்.

"ஊரில்... ஊருக்குப் போயிருந்தபோது, சில.. சில மோசமான சம்பவங்கள் நடந்துவிட்டன. இதற்கு மேல், இந்தத் திருமணம் நடப்பது சரியாகாது. அதனால் திருமண ஏற்பாடுகளை நிறுத்திவிடும்படி உன் பெற்றோரிடம் சொல். இதற்கு மேல் இதில் பேசுவதற்கு ஒன்றுமில்லை" என்றவன், அதை மெய்ப்பிப்பவன் போல, அவனது செல்லை ஸ்விட்ச் ஆஃப் செய்துவிட்டான்.

இந்த வார்த்தைகள், அவளுக்கு அமிலம் இல்லாமல், வேறு என்ன?



## என்னவளே, காதல் என்பது.... 3

நெஞ்சுக்குள் நேர்ந்த பூகம்பத்தில், சுசித்ரா திகைத்து நின்றது, ஒரு சில கணங்களே!

ஆனால், அந்த ஒரு சில வினாடிகளுக்குள், இவ்வளவு பெரிய வேதனையை, தனக்கு, இவன் எப்படித் தரலாம் என்ற ஆக்ரோஷம் அவளுள் மூண்டுவிட்டது.

இந்த முடிவைத் தன்னிச்சையாக எடுப்பதற்கு, விபாகரனுக்கு என்ன உரிமை இருக்கிறது? திருமண நிச்சயமே, அவன் தனியாக



எடுத்த முடிவல்லவே!

இரு குடும்பங்களும், முக்கியமாக விபாகரனும் சுசித்ராவும் சந்தித்து, உள்ளம் ஒன்றுபட்டு, இருவருமாக மனமொத்து எடுத்த முடிவல்லவா?

அதைத் தனியே, அவன் மட்டிலுமாக எப்படி உடைக்க முடியும்?

அதுவும், காரண காரியங்கள் எதையும் எடுத்துச் சொல்லி விளக்காமல், அவளது கருத்தையும் ஒப்புதலையும் கேளாமல், அவனாக, இதை எப்படிச் செய்யலாம்?

குரலில் விபாகரன் காட்டிய சினத்துக்குக் குறையாத சீற்றத்துடன், கையில் இருந்த தொடர்பிழந்த டெலிஃபோன் கருவியை உறுத்து விழித்தாள் அவள்.

என்ன? டெலிஃபோன் தொடர்பை அந்தப் பக்கம் நிறுத்திவிட்டால், இந்தப் பக்கம் ரிசீவரை வெறித்தபடி, அவள் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பாள் என்று நினைத்தானா?

அந்த மாதிரிக் கோழையோ, முட்டாளோ, அவள் அல்லவே!

ஆத்திரத்துடன் ரிசீவரை 'ணங்'கென்று தாங்கியில் போட்டவள், தன் செல்லில் அவனது எண்ணைக் கொணர்ந்து அழுத்தினாள்.

'ஸ்விட்ச்ஆஃப்!'

இது என்ன நாகரீகம்? பேசிக்கொண்டு இருக்கும்போதே, 'ஸ்விட்ச் ஆஃப்' பண்ணுவது?

கையிலிருந்த செல்லைக் கோபமாக வீசி எறியப் போனவளை, "அமைதி சுசிம்மா" என்ற தாயின் குரல் தடுத்தது.

"யார் மேலோ உள்ள கோபத்தை இத்தனூண்டு கருவி மேல் காட்டினால், அது என்ன பண்ணும், பாவம்!" என்ற தனத்தின் குரலில் கேலி இருந்தது.

அடுத்து இருந்த சாப்பாட்டு அறையில், மேஜையைத் துடைத்துக் கொண்டிருந்தவள், மகள் ரிசீவரை போட்ட வேகத்திலேயே எட்டிப் பார்த்திருந்தாள்.

இரண்டு நாட்களாக, ஏக்கமே உருவாக, மணாளன் ஆகப் போகிறவனின் குரலுக்காகத் தவித்துக் கொண்டிருந்தவளுக்கு,

அப்படியென்ன கோபம்?

காதலர்களுக்கு இடையே ஏதோ ஊடல் என்று தாய் நினைப்பது சுசித்ராவுக்கு நன்கு புரிந்தது.

விபா கூறியதைப் பற்றி சொல்லலாமா என்று ஒருதரம் எண்ணி விட்டு, வேண்டாம் என்று அவளே விடுத்தாள்.

ஏதோ அவளே அவிழ்க்கக் கூடிய சிக்கலாக இருக்கலாம்! இதற்கு அன்னையை போட்டு வருத்துவானேன்? மகளுக்குத் திருமணம் என்று உற்சாகமாக வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு, மகிழ்ச்சியோடு செய்து கொண்டிருப்பவள்!

தன்னை அடக்கிக்கொண்டு, "அம்மா, நான் கொஞ்சம் வெளியே போய்விட்டு வருகிறேனே" என்று தாயிடம் அனுமதி கேட்டாள்.

திருமணம் நிச்சயம் ஆனதிலிருந்து, அப்படித்தான். கேளாமல் வெளியே செல்வதில்லை. பக்கத்தில் என்றாலும் செல்லுமிடம் சொல்லாமலும் போவதில்லை.

இப்போது பெண் கிளம்புவது எங்கே என்று, தனத்துக்கு ஓர் ஊகம் இருந்தது.

பொதுவாக மன வேறுபாடுகளைச் சும்மா விட்டாலே சரியாகிப் போய்விடும் என்று, அவளுக்குத் தோன்றும், மகள் இருக்கும் மனநிலையில், நீறு பூத்துக் கொண்டிருக்கும் சிறு பொறியை, ஊதிப் பெருநெருப்பாக்கி விடக்கூடாதே!

"எதற்கும்மா? திருமணத்துக்கு இரண்டு வாரம் கூட இல்லை. இப்போது போய் வெளியே சுற்ற வேண்டாமே! சருமம் கறுத்து, அழகு...."

பொறுமை மறைய "மண்ணாங்கட்டி!" என்று வெடித்தாள் மகள். "அவரானால், திருமணமே வேண்டாம் என்கிறார். இந்த நேரத்தில் சருமமும் அழகும் எப்படிப் போனால், என்னம்மா?" என்று கோபமும், கண்ணீருமாக குமுறினாள்.

"எ... என்னது?" என்று அதிர்ந்தாள் தனம். "சுசி... சுசீம்மா, நீ எ... என்னடா சொல்கிறாய்?" என்று ஒன்றும் புரியாமல், குழறினாள்.

உதட்டைக் கடித்துக்கொண்டு பேசாமல் நின்றாள் பெண்.



இதற்குத்தான் சொல்ல வேண்டாம் என்று, அவள் எண்ணியது. ஆனால் அவளுக்குமே பெரும் அதிர்ச்சிதானே? ஒரு சின்ன வார்த்தையில், கட்டுப்பாடு தளர்ந்துவிட்டது.

கோபத்திலோ, தாபத்திலோ எப்படியானாலும், சிந்திய வார்த்தைகளை அள்ளி மறைக்கவா முடியும்?

அச்சமும் கலக்கமுமாகத் திரும்பத் திரும்ப கேட்ட தாயிடம், விவரத்தை, அவள் சொல்லத்தான் வேண்டியிருந்தது.

தாயிடம் மட்டுமல்ல, கடைக்குப் போய்விட்டுத் திரும்பி வந்திருந்த தந்தையிடமும்.

அவருக்கும் திகைப்புதான்.

காஞ்சீபுரத்துக்குப் போய், முகூர்த்தப்பட்டு வாங்கியாயிற்று. ஊருக்குப் போய்விட்டு வந்ததும், துணைப்பட்டுடன் இன்னும் சிலதும் வாங்க வேண்டும் என்று அவரிடம் சொல்லிவிட்டுத்தானே, தேசிகன் தம்பதி சென்னையை விட்டு கிளம்பியதே!

இப்போது போய்த்திருமணத்தை நிறுத்துவது என்றால், அதென்ன விளையாட்டா?

தன் செல்லை எடுத்துத் தேசிகனுடன் தொடர்பு கொள்ள முயன்றால் "நாட் ரீச்சபிள்' என்று வந்தது. சாருமதியினதும் அப்படியே!

குடும்ப பெரியவர்களுடன் முதலில் பேசலாம்என்று முயன்றது முடியாமல், விபாகரனிடம்தான், அவனிடம் மட்டும்தான் விளக்கம் கேட்டாக வேண்டிய நிலை உருவானது. அதை, நேரிலே போய், முகம் பார்த்துக் கேட்க எண்ணினார் சுதர்சனம்.

அப்போதும் மகள் கூட வருவதை, அவர் அனுமதிக்கவில்லை.

"இருக்கட்டும்மா. என்ன காரணம், என்ன என்று கேட்போம். கிடைக்கிற பதிலை வைத்துக்கொண்டு, மேலே என்ன செய்வது என்று தீர்மானிப்போம்" என்று இல்லாத அமைதியைக் காட்டிச் சொன்னார் அவர்.

அலுவலகத்துக்கு விபாகரன் வரவில்லை என்று அறிந்ததும், அவனுடைய தமக்கை வீட்டுக்கு, அவனைத் தேடிச் சென்றார்.

பெண்ணுடைய தந்தை.

திருமணம் முடியுமட்டும், தங்களுடனேயே சேர்ந்து வசிக்குமாறு, சாருமதி தம்பியிடம் கோரியது, சுதர்சனத்துக்குத் தெரியும்.

எல்லோருடனும் சேர்த்து வைத்தே பேசிவிடலாமே!

தான் மட்டுமாக, நகருக்குள் எங்கே செல்வதானாலும், சுதர்சனம் ஸ்கூட்டரில்தான் செல்வது. பெட்ரோலும் மிச்சம், செல்லுமிடத்துக்குச் சீக்கிரமாகவும் போய்ச் சேரலாம்!

தேசிகன் வீட்டை அடைந்து, அழைப்பு மணியை அழுத்தியபோது, வழக்கை எடுத்து வாதாடும் வக்கீலின் மனநிலையில் அவர் இருந்தார். மகளின் வழக்கை.

ஆனால், கதவைத் திறந்த விபாகரனைப் பார்த்ததுமோ "என்ன மாப்பிள்ளை, உடம்புக்கு என்ன?" என்று பதறத்தான் அவரால் முடிந்தது!

செக்கச் சிவந்திருந்த கண்களும், இரண்டு நாள் தாடியும், களைத்த தோற்றமும்!

அவர் பார்த்து பழகிய துடிப்பான இளைஞனுக்கு நேர் மாறான தோற்றம்!

"மாப்பிள்ளை இல்லை... ஆனால் உள்ளே வாருங்கள், சார்" என்று அவரை அன்னியப் படுத்தியே உள்ளே அழைத்தான், அவன்.

அந்த "சாரை"க் கவனித்தபோதும், அப்போதைக்கு வாதம் செய்யாமல் வீட்டினுள் சென்றவருக்கு, அங்கும் பெரிய மாற்றம் தெரிந்தது.

ஊருக்குச் சென்றபோது, சாத்திய சன்னல் கதவுகளைத் திறந்திராததால், இருட்டாகத் தெரிகிறதோ?

ஏதோ வங்கிச் சாப்பிட்டதற்கான அடையாளம்,, அப்படியே இருந்தது. அவனுடைய தமக்கை சாருமதி இருக்குமிடம் இப்படி இராது.

அவர்கள் எங்கே? எங்கே போயிருப்பார்கள்?

அதுவும், அவருடைய மாப்பிள்ளையை இந்த நிலையில் விட்டுவிட்டு?



"பிள்ளைகளைப் பள்ளியில் விடப் போயிருக்கிறார்கள் போல?"

"இப்போதுதான் பவி, நிர்மலைத் தலைமை ஆசிரியையிடம் எடுத்துச் சொல்லி பள்ளியில் விட்டுவிட்டு வந்தேன்." என்றான் அவன் உணர்ச்சியற்ற குரலில்.

தலைமை ஆசிரிய்யயிடம் எதற்காக சொல்வது? என்ன சொல்வது?

அது புரியாவிட்டாலும், தொடர்ந்து, "அக்காவும் அத்தானும் பின்னாடி வருகிறார்கள் போல!" என்று வினவினார் சுதர்சனம்.

கண் மூடித் திறந்தவன் "உட்காருங்கள்" என்று சோஃபாவைக் காட்டிவிட்டுத் தானும் அமர்ந்தான். தலையை ஒரு கையால் தாங்கியபடி, "அவர்கள் வர மாட்டார்கள்" என்றான் சுருக்கமாக.

மீண்டும் புரியாமல், கேள்வியாய் நோக்கினார் பெரியவர்.

"ஊருக்குப் போன மறுநாள், ஒரு விபத்தில் அக்... அவர்கள் இருவரும் ஒன்றாக கடவுளிடம் போய்ச் சேர்ந்து விட்டார்கள்" என்றான் உணர்ச்சி மரத்த குரலில்.

"ஐயோ, ஆண்டவனே!" என்று கூவிவிட்டார் சுதர்சனம்.

சில விஷயங்கள் தெளிவானபோதும், புரியாதது அதிகமாகவே இருந்தது.

"ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே, மாப்பிள்ளை! நாங்கள் வந்து, ஏதேனும் உதவிகள் செய்திருப்போமே!" என்று வருந்தினார் அவர்.

"அதுதான், உதவிக்கே இடமில்லாதபடி, எல்லாமே முடிந்து விட்டதே. மற்ற வகையில், அத்தானுடைய நண்பர், சந்தானம் சார் தேவையானது முழுதும் பார்த்துக் கொண்டார். வேறு செய்வதற்கு ஒன்றுமில்லை. வேறே எதுவும் தோன்றவுமில்லை"

மனது ஆறாமல் "ஆனாலும் மாப்பிள்ளை" என்றவரின் பேச்சைக் கை உயர்த்தித் தடுத்து நிறுத்தினான் விபாகரன்.

"ப்ளீஸ் அங்க்... சார், அப்படி என்னைக் கூப்பிடாதீர்கள். ஒவ்வோர் அழைப்பும், காயத்தில் கத்தியை விட்டு திருகுகிற மாதிரி வலிக்கிறது" என்றான்.

திகைப்புடன் நோக்கி "ஏன்?" என்றார் மற்றவர்.

"ஏனென்றால், அந்த உறவு ஏற்பட, இனி வழியில்லை"

ஒருகணம் புரியாமல் விழித்து விட்டு "ஏன்? என் பெண்ணின் ராசிதான் இப்படி ஆகிவிட்டது என்று எண்ணுகிறீர்களா?" என்று சிறு கோபத்துடன் கேட்டார் சுதர்சனம்.

மறுப்பாகத் தலையசைத்தான் அவன் "இல்லை, இதுபோன்ற விஷயங்களில் எனக்கு நம்பிக்கை கிடையாது. ஆனால், இந்த திருமணம் நடப்பதற்கில்லை" என்றான் அதே மரத்த குரலில்.

இந்த மரத்த குரல் உள்ளடக்கியிருந்த வேதனை, சுதர்சனத்துக்குத் தெரியாமல் போகவில்லை. ஆனால், சுமையைப் பகிர்ந்துகொள்ள ஒரு துணை இருந்தும், தனித்தே துன்புறுவேன் என்ற அவனது பிடிவாதத்தின் காரணம்தான் அவருக்குப் புரியவில்லை.

வீட்டில் கலங்கி நின்ற மகளின் நினைவு உந்த, அவர் கேட்டார் "ஏன் முடியாது? இப்போது உடனே நடத்த வேண்டும் என்று கேட்கும் அளவுக்கு நாங்களும் உணர்வு மரத்தவர்கள் அல்ல. கொஞ்ச நாள் கழித்துச் செய்யலாமே?"

"இல்லை நான் யோசித்துதான்"

அவரும் குறுக்கிட்டு "இன்னும் கொஞ்சம் யோசியுங்கள் மாப்பிள்ளை! உங்கள் அக்கா, அத்தான், நாங்கள் இன்னும் நீங்களும் சுசித்ராவும் கூட, ப்ரியப்பட்டுச் செய்த முடிவு. நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் மிகவும் பொருத்தம் என்று யோசித்துதானே திருமணத்தை நிச்சயித்தோம். அந்தப் பொருத்தம் அப்படியே இருக்கும்போது..." என்றவரை "இல்லை" என்று அவன் குறுக்கிட்டு நிறுத்தினான்.

"என்னது இல்லை?"

"நீங்கள் சொன்ன பொருத்தம்! அது இன்று இல்லை, அங்கிள்.... இல்லை சார்! இப்போது நான் அன்றிருந்த விபாகரன் இல்லை, சார். தயவு பண்ணிக் குறுக்கிடாமல் நான் சொல்வதைக் கேளுங்கள். அப்போதுதான், உங்களுக்குப் புரியும். முதலில், இதை



நினைவுபடுத்திப் பாருங்கள். எங்கள் திருமணத்தை நிச்சயம் செய்தபோது, என் நிலைமை என்ன? கை நிறைய சம்பாதிப்பவன் பிக்கல் பிடுங்கல் கிடையாது. கார் இருக்கிறது. வீட்டுக்குப் பணம் கட்டுகிறான். பெண்ணின் எதிர்காலம் வளமாக இருக்கும். அப்படி நினைத்துதானே, என்னை உங்கள் மகளுக்கு ஏற்ற கணவனாக வரித்தீர்கள்?

"ஆனால், இப்போது நிலைமை அடியோடு மாறிவிட்டது சார் அக்காவுடைய பிள்ளைகளின் பொறுப்பு. இப்போது என்னுடையது அல்லவா? அதாவது, புது மணப் பெண்ணாகத் தன் கூடு, தன் குழந்தை என்று சந்தோஷமாக திட்டமிடும் முன்னே, சித்துவுக்கு இங்கே ஒரு ரெடிமேட் குடும்பம் அல்லவா காத்திருக்கிறது? புது மணவாழ்வு என்ற பேச்சுக்கே, நினைக்கக்கூட நேரமிராதே!.

"பிள்ளைகளின் படிப்பு செலவு, எதிர்காலத்துக்குச் சேமிப்பது என்று, நான் சம்பாதிக்கிற பணத்துக்கும், வேறு பெரும் செலவு இருக்கிறது, சார். இதுதாண்டி, என்னை 'கை நிறையச் சம்பாதிக்கிறவன்' என்று உங்களால் சொல்ல முடியுமா?

"அத்தோடு, அக்கா இந்த வீடு வாங்கியதில் வேறு, இன்னும் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. வெற்றி நிச்சயம் என்று கடன் வாங்கித் தொடங்கிய தொழில் விஷயம் என்ன ஆகும் என்று ஒன்றுமே தெரியவில்லை. அதற்குக்கூட, பாங்க் கடனுக்குப் பணம் கட்ட வேண்டி வரலாம்.

"எண்ணிப்பாருங்கள்... இத்தனைக்கும், எனக்கு இருக்கும் இத்தனை பொறுப்புகளுக்கும் மேலே, நான் சித்து... சுசித்ராவுக்குத் தகுந்த கணவனா?

"சினிமாக்களில் வருவது போல, நீ ஆண்பிள்ளை என்பது போதாதா என்று நீங்கள் கேட்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்

"அதேபோல, இந்தப் பொறுப்புகள் எதையும் உதறிவிட்டு வருமாறு கூறவும் மாட்டீர்கள் என்றும் நம்புகிறேன்

"சொல்லுங்கள் சார், அடியோடு மாறிவிட்ட எனது இந்த நிலையில், சுசித்ராவை மணப்பது, அவளுக்கு நியாயம் செய்வது

ஆகுமா?

"ஆகாது என்று யோசித்துதான், நான் இந்த முடிவை எடுத்தேன். எனக்கும் எவ்வளவோ வேதனைதான். ஆனால் என் மகிழ்ச்சிக்காக, சித்துவுக்கு அனியாயம் செய்ய, என்னால் முடியாது.

"நல்லவேளையாக, இது பற்றி பேச, நீங்கள் வந்தீர்கள், சார். அவள் வந்து அழுதாலோ, ஆத்திரப்பட்டாலோ, என்னால் இவ்வளவு தெளிவாகப் பேச முடிந்திராது. ஆன்ட்டியும் புரிந்து, கொள்வார்கள். ஆனால், சுசியிடம் ஃபோனில்கூட எப்படியோ உளறிக் கொட்டித்தான் பேசி முடித்தேன்"

"சென்னைக்கு திரும்பி வரும்போது, இரவு முழுவதும் பெரும் வேதனையை ஒதுக்கி வைத்து, பலமுறை யோசித்து, நான் எடுத்த முடிவு இது. இது சரிதான் என்று இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும். உங்கள் மகளுக்கும் புரிய வையுங்கள். நீங்கள் சொன்னால் கேட்பாள்... கேட்கக் கூடும். ஆனால், எப்படியும் என் முடிவில் மாற்றம் இராது!" என்று பேசப் பேசத் தெளிந்துவிட்ட குரலில், உறுதியாக கூறி முடித்தான் விபாகரன்.

சற்றுநேரம் அங்கே பேச்சுச் சத்தமே இல்லை.

ஒரு பெருமூச்சால் நிசப்தத்தைக் கலைத்த சுதர்சனம் வருத்தத்துடன் கூறினார். "இதுபோல, நேராமல் இருந்திருக்கலாம். ஆனால், கடவுளுடைய சித்தம் யாருக்குப் புரிகிறது" என்றார் மெதுவாக.

ஒப்புவது போலப் பேசாதிருந்தான் விபாகரன். அவனது நெஞ்சுக்குள் ஓடுவதும், அதே கேள்விதானே?

அவர் மெல்ல எழவும், விபாகரனும் கூட எழுந்தான். "ஒரு நல்ல மாமனாராக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். கொடுத்து வைக்கவில்லை. நல்ல நலம் விரும்பியாகவேனும் இருக்கலாமில்லையா? நான் ஏதாவது உதவி செய்ய கூடுமானால், தயங்காமல் கேட்க வேண்டும்" என்று கோரினார்.

ஆனால், மறுப்பாகத் தலையசைத்தான் விபாகரன் "வேண்டாம் சார். 'க்ளீன் கட்' என்பார்களே. அதுபோல, அடியோடு ஒதுங்கி

விடுவதுதான் நல்லது. கண்ணில் பட்டுக்கொண்டே இருந்தால், சுசித்ராவால் என்னை மறக்க முடியாது. நான்... நானும் மனிதன்தானே, அங்கிள். என் மனதும் சலனப்பட்டு விடலாம். இவ்வளவு யோசனையும், எடுத்த முடிவும் எல்லாம் வீணாகிவிடக் கூடும். வேண்டாம்"

தன்னை மீறி வந்த 'அங்கிள்' அவன் எடுத்திருக்கும் முடிவு சரியானதே எனும்போது, அப்படி சலனப்பட வாய்ப்பு தரலாகாது!

"விபாகரன் என்றால் சூரியன் 'விபு' என்றால் கடவுள் என்று தமிழ் அகராதியில் அர்த்தம் பார்த்தோம். நீங்கள் அந்தக் கடவுளாகவே என் பெண்ணுக்கு நன்மை செய்ய நினைக்கிறீர்கள்? நான் வேறு என்ன சொல்லட்டும்?" என்ற சுதர்சனம், அதற்கு மேல் எதுவும் பேசாமல், கிளம்பிப் போனார்.

அவர் கண்ணுக்கு மறையும்வரை, விபாகரன் பார்த்துக் கொண்டே நின்றான்.

அவனது தீர்மானம்தான். ஆனால் அதை ஒத்துக்கொண்டு அவர் செல்லும்போது, அவனுக்கு இப்படி வலிக்கலாமா? கடவுளாமே! கடவுளுக்கு வலிக்குமா?

ஆனால், அவனுக்கு என்ன வலித்தாலும், சுசித்ரா சுகமாக இருந்தால், அவனுக்கு அது போதும்!

சுதர்சனம் வீட்டுக்குத் திரும்பி வந்து, விபத்து விவரத்தைச் சொன்னபோது, பெண்கள் இருவருமே அதிர்ச்சியில் உறைந்து போனார்கள்.

"என்ன கொடுமை! என்ன பரிதாபம்!" என்று வருந்தி மருகினார்கள்.

"ஆனால் அப்பா.." என்று பார்வையாலேயே மகள் மேலே தன் விஷயம் கேட்க, விபாகரன் சொன்ன மற்றவைகள் பற்றியும் சுதர்சனம் எடுத்துச் சொன்னார்.

பிரமிப்புடன் கேட்டிருந்த தனம், திடுமென "ஐயோ, ஆமாமில்லை?" என்று கூவினாள்.

"மாப்பிள்ளை சொல்வது சரிதானே? கைக்கும் வாய்க்குமாக



இழுத்துக் கட்டி சமாளிக்கும் நிலையல்லவா, நம் சுசிம்மாவுக்கு நேர்ந்திருக்கும்! நல்லவேளை, கடவுள் காப்பாற்றினார்!" என்று ஆறுதலோடு கூறினாள்.

தாயை ஒருதரம் முறைத்துப் பார்த்த சுசித்ரா, தந்தையின் கையிலிருந்த ஸ்கூட்டர் சாவியைப் பிடுங்கிக் கொண்டு, வேகமாக வீட்டை விட்டு வெளியே சென்றாள்.

"ஐயோ, அவளைத் தடுத்து நிறுத்துங்கள்... சும்மா இருக்கிறீர்களே! சுசி எங்கே போகிறாள் என்று தெரியவில்லையா?" என்று பதறினாள் தனம்.

"தெரிகிறது. மாப்பிள்ளையிடம் போகிறாள் அதுதானே? போகட்டும், போய் வரட்டும். இங்கே நாம் என்னதான் விளக்கி, திரும்பத் திரும்ப எத்தனை முறை சொன்னாலும், நம் பெண் ஒத்துக் கொள்ள மாட்டாள். மாறாக, நம் மீதுதான் கோபப்படுவாள். அங்கே மாப்பிள்ளை, காரண காரியத்தோடு சொல்லும்போதுதான், அதைக் கொஞ்சமாவது ஏற்கத் தோன்றும். 'மாப்பிள்ளை' என்று அழைத்தால், காயத்தில் கத்தியைவிட்டு திருகுவது போல வலிக்கிறது என்றார். அவள் மேல் அவ்வளவு ஆசை! அவளிடம் பேசுவது, அவருக்கு இன்னும் அதிக வேதனையாகத்தான் இருக்கும். ஆனால் இதை மனதார ஏற்காவிட்டாலும், இதுதான் முடிவு என்று அவர் தீர்மானமாகச் சொல்லும்போது, அதை மறுக்க முடியாது என்பதேனும், அவளுக்குப் புரியும். போய் வரட்டும்" என்றார் சுதர்சனம்.

ஒரு சிறு மௌனத்தின் பின் "ஆனால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறதுப்பா. இதையெல்லாம் நாம் எண்ணிப் பார்த்து சுசியின் எதிர்காலத்துக்கு நல்லதில்லை என்று, இந்தக் கல்யாணத்தை நாம்தானே நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால், அதை நமக்கு முன்னே யோசித்து, மாப்பிள்ளை அல்லவா, செயல்பட்டிருக்கிறார்' என்று தனம் வியந்தாள்.

"காரணத்தை யோசித்துப் பார்த்தாயா? நம் மகள் மீது, நம்மைப் போலவே ஆழ்ந்த அன்பு, அவருக்கு. பெற்று வளர்த்த நம்மைப்

போல சுசியிடம் அன்பு இருப்பதால் அல்லவா, இந்தத் தியாகம் பண்ணுகிறார்! கெட்ட பழக்கமே இல்லாத நல்ல பையன், பெற்றவர்களான நம்மைப் போலவே, தன்னலம் கருதாத அன்பும், அவனிடம் இருக்கிறது. ஆனால் இன்றைய வாழ்க்கைக்கு இந்த இரண்டும் மட்டும் போதாது என்பதால் அல்லவா, நாமும் இதை ஏற்க வேண்டியிருக்கிறது!" என்றார் சுதர்சனம் வருத்தத்துடன்.

மகன் பற்றி, அவர் சொன்னதுதான் நடந்தது.

சுசித்ரா எவ்வளவு ஆத்திரப்பட்டு, என்ன வாதாடியபோதும், விபாகரன் மாறவில்லை.

பணம் காசுக்கு ஆசைப்படுகிறவளா, நான் என்று சீறியது. சிக்கனமாக வாழப் பயின்று கொள்வேன் என்று வாக்களித்தது. உன் மனைவி என்பது மட்டுமே போதுமே என்று கெஞ்சியது. எதற்கும் அவன் அவன் அசைந்து கொடுக்கவில்லை.

தான் யோசித்ததை எல்லாம், பொறுமையாக அவளுக்கு எடுத்துச் சொன்னான்.

"சிக்கன வாழ்வு, அதற்கான உழைப்பு பற்றி, உனக்குத் தெரியாது சுசித்ரா. என் அம்மாவும், அம்மா நோய்ப்பட்ட பிறகு, ஒரு நிலைக்கு வரும்வரை அக்காவும், அலுத்துக் களைத்து, ஓய்ந்து கிடப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

"அதை விடவும், நம் இருவருமாகத் தனியே சிறிது நேரம் கூட எடுக்க முடியாது. பெற்றோரை இழந்து நிற்கும் பவி, நிர்மலுக்கென்றே நாள் முழுவதும் நாம் வாழ வேண்டியிருக்கும்.

"கொஞ்ச நாள் தியாகம் போலப் பெருமையாக இருந்தாலும், நாளாக ஆக, மனது ஏங்கி, வரண்டு, வெறுத்துப் போகும். இவர்களால்தானே என்று பிள்ளைகளிடம் வெறுப்பு வரும். பிறகு நமக்குள்ளேயே கசப்புதான் தோன்றும், சண்டையும் மூளும்!

"இது பற்றி நிறைய யோசித்த பிறகுதான் இந்த முடிவுக்கு வந்தேன், சுசித்ரா. எனவே என்னை மறப்பதுதான், உனக்கு நல்லது"

"இரக்கமற்றுச் சொல்லுகிறீர்களே! உங்களை எப்படி மறப்பேன்" என்று கண்ணீர் விட்டாள் சுசித்ரா.



தொண்டையில் அடைத்ததை விழுங்கிக்கொண்டு அவன் சொன்னான் "இப்போது, இதை ஒப்ப உனக்கு மனம் வராது, ஆனால் வேறு ஒருவனை மணந்து வாழும்போது, எல்லாம் சரியாகிப் போகும்"

"இப்படிச் சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லை?" என்று சீறினாள் சுசித்ரா. "என்னிடம் என்னென்ன பேசியிருப்பீர்கள்? அதை வைத்து என்னென்ன கனவுகள் கண்டிருப்பேன்? அதன் பிறகும் வேறு ஒருவனைக் கணவனாக ஏற்க, என்னால் எப்படி முடியும்?"என்றாள் அழுகையும் ஆத்திரமுமாக.

குரலையும் முகத்தையும் வெகுவாக கட்டுப்படுத்திக் கொண்டு, விபாகரன் பேசினான் "இப்போது முடியாதுதான். ஆனால் கண் பாராதது கருத்து மறந்து விடும் என்பது, ஆராய்ந்து அறிந்து, சொல்லப்பட்ட உண்மை. உனக்கும் கொஞ்ச நாளில், இதெல்லாம் மறந்து எல்லாம் சரியாகிவிடும்.

"அப்புறம் இன்னொன்று, நாளையிலிருந்து நான் வேலைக்குப் போய்விடுவேன். மற்ற நேரத்தில் பவியும், நிர்மலும் வீட்டில் இருப்பார்கள். அவர்கள் முன்னிலையில் எதுவும் வேண்டாம். நன்றாக இராது. அதனால், இனி இங்கே வந்து, என்னை சந்திக்க முயற்சி செய்யாதே" என்றான் சற்று அழுத்தமாக.

அதாவது, முகத்தில் விழிக்காதே என்கிறான்!

'விருட்'டென எழுந்த சுசித்ரா திரும்பிப் பாராமல் வெளியேறினாள்.

கல்லாக இருந்த அவளது முகத்தைப் பார்த்த பெற்றவர்கள், சென்று வந்தது பற்றி, அவளிடம் எதையும் கேளாமல் விடுத்தார்கள். அவளது மனம் வேறு விஷயங்களில் ஈடுபட, அவர்களால் ஆனதைச் செய்தார்கள்.

தொடர்ந்து பல நாட்கள், அந்தக் கல் முகத்துடனேயே, சுசித்ரா வளைய வந்தாள்.

இந்நிலையில், அவர்களது திருமண நாள்... அதாவது, திருமணம் நடப்பதாக இருந்த நாள், இறுக்கத்துடன் விடிந்தது.



# என்னவளே, காதல் என்பது.... 4

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. எல்லோருக்கும் விடுமுறை தினம். வார நாட்களில் திருமணத்தை வைத்தால், வருகிற விருந்தினர், ஆற அமர இருந்து விருந்துண்ணக் கூட நேரமின்றி, சரியாகச் சாப்பிடாமல், அரக்கப் பறக்க ஓடி விடுவார்கள். அதனால், வருகிறவர்கள் நிம்மதியாக உட்கார்ந்து, சாப்பிட வசதியாக இருக்கட்டும் என்று சாருமதி தேர்வு செய்த ஞாயிற்றுக்கிழமை முகூர்த்தம்!

'இதுவும் கடந்து போகும்' என்பது போல, அந்த நாளும் வந்துதானே, தீரும்?

வந்தது.

மகளின் மனதை மாற்றவென்று, சுதர்சனம் தம்பதியர் மேற்கொண்ட முயற்சிகளில் ஒன்று, அவளுடைய தோழிகளில் உண்மையான பிரியம் கொண்டிருந்தவர்கள் சிலரை, அவ்வப்போது வீட்டுக்கு வரவழைத்தது.

சித்ராவுக்குத் திருமணம் நிச்சயம் ஆனதிலிருந்து, அவளுடைய வருங்காலத் துணைவனோடு அவள் பேசுவதற்கு இடைஞ்சலாக இருக்கலாகாது என்று, இந்த உண்மைத் தோழியர், அவளிடமிருந்து சற்று விலகி இருக்கலாயினர்.

இப்போது, நல்லது நடக்க வழியில்லை என்று முடிவானதும், தனம் அந்தத் தோழியரை அழைத்துப் பேசினாள். அவர்களில் சிறு வயதிலிருந்து கூடப் படித்த, கீர்த்தனாவும், கல்லூரி சிநேகிதி வைதேகியும் முக்கியமானவர்கள்.

கீர்த்தனாவைத் தனியிடத்துக்கு வரச் சொல்லி, தனம் அவளிடம் நடந்த விவரம் முழுதும் தெரிவித்தாள்.

கீர்த்தனாவும் மகளும், மிக நெருங்கிய தோழிகள். ஒருவருக்காக ஒருவர் நிறைய செய்வார்கள் என்பது, தனத்துக்குத் தெரியும். இரண்டு ஆண்டுகளுக்கு முன், இதே கீர்த்தனாவின் கால் எலும்பு



முறிந்து கஷ்டப்பட்டபோது, மருத்துவமனையில் அவள் கூடவே இருந்து, சித்ரா தங்கியிருக்கிறாள். மற்றவரும் அதே மாதிரியானவள் என்பதால், நடந்தது எதையும், தனம் அவளிடம் மறைக்கவில்லை.

"என்ன ஆன்ட்டி, இப்படியாகிவிட்டது? நாங்கள் எல்லோரும், சித்ரா கல்யாணத்துக்கு, என்ன கலரில் என்ன உடை அணிவது என்றெல்லாம் திட்டம் போட்டு வைத்தோமே! அது கூட, மணமேடை வரை வந்து நின்று போன திருமணங்கள் எத்தனையோ இருப்பதாகச் சொல்லுவார்கள் என்று விட்டுவிடலாம். ஆனால் விபாகர் சொல்லும் காரணங்களை நினைக்கும்போதுதான் ஒரு பக்கம் வருத்தமாக இருந்தாலும், கொஞ்சம் கோபமும் வருகிறது, ஆன்ட்டி! ஏன் சித்ரா மேல் அவருக்கு நம்பிக்கை இல்லையா? அந்தப் பிள்ளைகளை அவள் நல்லபடியாக கவனித்துக் கொள்ள மாட்டாள் என்று எண்ணுகிறாரா? எனக்குக் கால் உடைந்திருந்தபோது, என்னை எப்படி பார்த்துக் கொண்டாள்? கல்லூரியில் ஏதேனும் தட்டி விழுந்து விடுவேனோ என்று என்னை விட்டு நகர மாட்டாளே! நான் வேண்டுமானால், விபாகரிடம் சொல்லட்டுமா? எங்கள் சித்ரா ஒரு வைரம் என்று?" என்று கேட்டாள்.

கீர்த்தனாவின் இளரத்தம், விஷயத்தைப் புரிந்து கொண்ட முறையே தவறு என்று உணர்ந்து, தனம் எடுத்துச் சொன்னாள்.

விபாகரன் சொன்ன 'ரெடிமேடு' குடும்பம் பற்றி விவரித்துவிட்டு, "யோசித்துப் பார்க்கும்போது அவர் சொன்னதில் தப்பே கிடையாது, கீர்த்தனா. இவர்கள் இருவரும் சில காலம் சந்தோஷமாக இருந்துவிட்டு, குழந்தை குட்டி என்று ஆசையாகப் பெற்று வளர்ப்பது எப்படி? எடுத்த எடுப்பிலேயே பத்து வயதுக்கு மேற்பட்ட இரண்டு பிள்ளைகளின் பொறுப்பை ஏற்று, அவர்களுக்காகவே வாழ்ந்து முடிப்பது எப்படி? தியாக சீலர்களாக கதையிலும், கற்பனையிலும் நன்றாகத்தான் தோன்றும். ஆனால் யதார்த்த வாழ்வுக்கு, இது சரிவராது, கீர்த்திம்மா. கடைசியில் அலுத்துப் போகும்போது, தனக்கும் சித்ராவுக்குமே சண்டை மூண்டுவிடக் கூடும் என்கிறார், மாப்பிள்ளை" என்று விளக்கினாள்.

ஆனால் "விடுங்கள் ஆன்ட்டி, அவருக்குத் திருமணம் வேண்டாம் என்று தோன்றிவிட்டது. ஏதோ காரணம் சொல்கிறார், அவ்வளவுதான்" என்றாள் சின்னவள்.

"ஆனால், அதைத் தப்பென்று சொல்ல முடியாதும்மா..." என்ற தனம், கீர்த்தனாவின் முகபாவனையைப் பார்த்துவிட்டு, "இந்த வயதில் உங்களுக்கு புரிவது கஷ்டம், கீர்த்தி. இப்போது அதை விடு. எப்படியும் திருமணம் நின்று போயிற்று. சுசி ரொம்பவும் நொந்திருக்கிறாள். நீ கொஞ்சம் வந்து போனால், அவளுக்கு மனம் ஆறுதலாக இருக்கும் என்று நினைத்தேன், முடியுமாம்மா?" என்று கேட்டாள்.

"ஐயோ, கட்டாயம் ஆன்ட்டி! அந்த ஆளும் சுசியும் சந்தோஷமாகப் பேசுவதைக் கெடுக்கக்கூடாது என்றுதான், நாங்கள் ஒதுங்கி இருந்ததே, முக்கியமாக நான்! இனிமேல் பாருங்கள்!" என்றாள் தோழி.

தனத்துக்கு வாக்கு கொடுத்தது போலவே, கீர்த்தனா அடிக்கடி வந்து, சுசித்ராவிடம் பேசிப் பழகி, அவளை மெல்ல இயல்புக்குக் கொண்டுவர முயன்றாள். அவளைப் போலவே, இன்னும் இரண்டொரு தோழியரும் சேர்ந்து, வந்து ஊர்க்கதை பேசுவதும், வெளியே அவளை இழுத்துப் போவதுமாக முயற்சி செய்ய, சுசித்ராவின் முக வாட்டம், ஓரளவு மறையலாயிற்று.

தேறுகிறாள் என்று உள்ளூர நிம்மதி தோன்றத் தொடங்கியபோது, அந்தப் பொல்லாத திருமண நாள் வந்து சேர்ந்தது.

முந்திய நாளே, முகம் இறுகிப் போனாள் சுசித்ரா. பேச்சில் கலந்து கொள்ளவே இல்லை, கவனியாதது போலக் காட்டி, ஒரு முறைக்கு இரு தரமாகக் கேள்வி கேட்டாலும், ஒற்றை வார்த்தைப் பதில்களே வந்தன.

திருமண நாளன்று, அதை விடவும் மோசம்.

அன்று, அவளுடைய தோழியர் இருவர் வந்திருந்தனர். கீர்த்தனாவோடு, வசுதாவும் கல்லூரியில் இந்த மூவர் குழு



சேர்ந்தால், மற்றவர்களுக்குப் பேச வாய்ப்பே இருக்காது என்று சொல்லுவார்கள். வளவளவென்று சீங்காரம் மாதிரி, கேட்டுக்கொண்டே இருக்குமாம். இடைவெளி விட்டால் அல்லவா, மற்றவர்கள் பேசுவது?

ஆனால் அன்று சுசித்ராவும் பேசவில்லை! அத்தோடு வேறு யார் பேச்சும், அவள் காதில் விழுந்த மாதிரியும் தோன்றவில்லை.

அதிலும், எங்கோ வெறித்தவாறு உட்கார்ந்திருந்தவள், திடுமென எழுந்து, அவளது அறைக்குள் சென்று, கதவையும் சாத்திக் கொள்ளவே, எல்லோரும் மிரண்டு போயினர்.

பக்கவாட்டிலும், பின்புறமும் சென்று பார்த்தால், குளியலறையில் நீர் விழும் ஓசை கேட்டு, எல்லோருக்கும் சிறு ஆறுதல் உண்டாயிற்று.

ஆனாலும், அவள் உடை மாறி, வெளியே வந்த பிறகுதான், நல்லபடியாக மூச்சுவிட முடிந்தது.

சிநேகிதியின் கண்களில் சிவப்பைக் கண்டதும், அவளுடைய தோழியர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். எதிர் பார்த்ததுதான்.

இதைப்போல ஏதும் நேர்ந்தால், என்ன செய்வது என்று, இருவருமே பேசி வைத்திருந்தனர். அதன்படி, ஏதேனும் மாலுக்குச் சென்று சுற்றிவிட்டு வரலாம் என்று சுசித்ராவை அழைத்தனர்.

ஒருகணம் யோசித்த, சுசித்ராவும் சரிதான் என்று கிளம்பி விட்டாள்.

வீட்டில் இருக்க இருக்க வேதனைதானே? புழு மாதிரி நெஞ்சு அரிக்கும் இந்த வேதனை, எப்போதும் இருக்கத்தான் போகிறது என்றாலும் அதையே நினைத்து இன்னமும் வலியை அதிகப்படுத்திக் கொள்வதேனும் குறையலாம் இல்லையா?

எப்படியும் புதிதாக நாலு மனிதர்கள் முன்னிலையில், இப்படி அழ முடியாதே, அதற்காகவேனும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியக் கூடும்!

இப்படி நினைத்துதான், சுசித்ரா, தோழியரோடு வெளியே செல்ல

கிளம்பியதே. எல்லோரின் தேர்வாகவும், 'ஸ்பென்சர்' அமைந்தது.

"அங்கே எனக்கும் கொஞ்சம் காலா நமக்'கும் 'ஆம்சூர்' பொடியும் வாங்கி வாம்மா. முடிந்தால், கேக் செய்வதற்குக் கொஞ்சம் டிரை ஃப்ரூட்டும்!" என்று தனம் சொல்ல, எப்போதும் சினேகிதிகளோடு வெளியே செல்வது போன்ற ஓர் உருவகம் கூட, எல்லோருக்கும் மனதில் ஏற்பட்டது. சுசித்ராவுக்குமே.

'ஸ்பென்சருக்'க்குள் நுழைந்து, ஓர் ஐசை வாங்கிக் கொண்டு சுற்றத் தொடங்கும்போதே, "திரும்பி வரும்போது, மறக்காமல், அம்மா சொன்னதையெல்லாம் வாங்கிச் சொல்ல வேண்டும்ப்பா" என்று மற்றவர்களுக்கும் நினைவு சொன்னதும் அவளேதான்.

நிறைய 'வின்டோ ஷாப்பிங்' தான் அடுக்கடுக்காய் கிறிஸ்டல் மாலைகள், அன்றைய நாகரீகத்தைப் பறைசாற்றும் உடைகள், பொருத்தமான கைப்பைகள், இடையே கைவினைப் பொருட்கள் என்று பார்த்து, அவற்றின் அழகு, தரம், பற்றி விவாதித்தபடி, செல்லும்போது, மனம் லேசாவது போலவே, சுசித்ரா உணர்ந்தாள்.

இடையே அவர்களைப் போல வந்து சுற்றியவர்களைப் பற்றிய, கேலியும் கிண்டலுமான வர்ணனைனகள் வேறு.

மேல்தளம் வரை சென்றுவிட்டு, இறங்கலாம் என்று எண்ணியபோது 'எஸ்கலேட்டர்' முன்னே கூட்டமாக இருந்தது.

அதுதான் முதல் தடவையோ, என்னவோ குழந்தையோடு வந்திருந்த ஒரு பெண், தானும் இறங்கப் பயந்து மற்றவர்களுக்கும் வழி விடாமல், கெடுத்துக் கொண்டிருந்தாள்.

"நாம் லிஃப்டில் போகலாம்ப்பா" என்று வசுதா மற்ற இருவரையும் இழுத்துச் சென்றாள்.

"எல்லாக் கூட்டமும், இங்கே வந்து அடைந்து, இதையும் நிறுத்தி விடாமல் சீக்கிரம் போய் விடலாம்" என்று அவசரமாக 'லிஃப்டி'னுள் சென்று கீழே செல்லும் பட்டனை அழுத்தி விட்டு திரும்பினால், "ஐ! அக்கா!" என்று இளங்குரல்கள் இரண்டு ஆர்வத்தோடு கூவின!

காலின் கீழ் 'லிஃப்'டின் தளம் நழுவுவது போல உணர்ந்தபடி திரும்பிப் பார்த்தால், மகிழ்ச்சியோடு பவித்ரா, நிர்மலும் எங்கோ

பார்த்தபடி, விபாகரனும், அங்கே நின்றார்கள்.

முன்னே வந்து, சுசித்ராவின் கையைப் பற்றி "அக்கா, நீங்களும், எங்களைப் போலவே, முதல் தளத்துக்குத்தான் வருகிறீர்களா?" என்று பவி விசாரித்தாள்.

பதில் சொல்ல வாயெழாமல் தொண்டை அடைத்து நின்ற தோழியின் நிலையை உணர்ந்து "இல்லையே! நாங்கள் இரண்டாம் தளத்துக்கு அல்லவா செல்ல வேண்டும்!" என்று இரண்டாம் எண்ணை அவசரமாக அழுத்தினாள் கீர்த்தனா.

அதற்குள் அந்தத் தளமும் வந்துவிட, சிறுமியின் கையிலிருந்த சுசித்ராவை விடுவித்து, அவளை இழுத்துக் கொண்டு வெளியேறி விட்டார்கள் மற்ற தோழிகள்.

அந்த மூவரும் கண் பார்வையில் இருந்து மறைந்த பிறகும், நடக்க முடியாமல் கால் தடுமாறிய சுசித்ராவை பரிதாபத்துடன் பார்த்தனர்.

"கொடுமை கொடுமை என்று கோயிலுக்குப் போனால், அங்கே ஒரு கொடுமை தலையை விரித்துப் போட்டு ஆடிக்கொண்டு இருந்ததாம் என்று எங்கள் பாட்டி ஒரு பழமொழி சொல்வார்கள். அதற்கு அர்த்தம், இப்போது தெரிகிறதுப்பா" என்றாள் வசுதா எரிச்சலுடன்.

"ரொம்பப் பொருத்தமான பழமொழியில்லை?" என்ற கீர்த்தனா, சுசித்ராவைப் பார்க்க, அவள் ஒப்புதலாகத் தலையை ஆட்டினாள்.

"ஆமாம்ப்பா. பவி, தலையைப் பார்த்தாயா? சரியாகக் கோதவே இல்லை. சிக்கு எடுக்காமல், சும்மா வாரி விட்டிருப்பார் போல! இப்போது காற்றில் பறந்து, சும்மா விரித்துப் போட்ட மாதிரியே இருக்கிறது!" என்று வருத்தத்துடன் கூறியபோது, அவளது விழிகளில் நீர் அரும்பத் தொடங்கியிருந்தது.

"ஷ் என்ன சுசி? யாராவது பார்க்கப் போகிறார்கள். கண்ணைத் துடை" என்று கீர்த்தனா அடிக்குரலில் விரட்ட, பையில் இருந்த ஈர டிஷ்யூவை எடுத்து, முகத்தைத் துடைப்பது போலக் கண்களையும் சேர்த்துத் துடைத்தாள் சுசித்ரா.

இன்னொரு தரம், அவர்களைச் சந்திக்க நேர்ந்தால், அங்கேயே



சுசித்ரா அழத் தொடங்கி விடுவாளோ என்ற பயம், இரு சிநேகிதிகளுக்கும் வந்தது.

அடுத்தொரு சந்திப்பை தவிர்க்க விரும்பியவர்களுக்கு இந்த மனநிலையில், தோழியை வீட்டுக்கு அழைத்துப் போகவும் மனமில்லை.

யோசித்தபோது வசுதாவுக்கு இன்னொரு ஐடியா தோன்றியது! பக்கத்தில்தான் இன்னொருமால் 'எக்ஸ்பிரஸ் அவென்யூ' இருப்பது? அங்கே போய்விட்டால்?

இந்தக் குடும்பத்தையும் மறுபடி சந்திக்கத் தேவையில்லை. வீட்டுக்குப் போய், சுசித்ரா தனியே கிடந்து அழுது கொண்டிருக்கவும் தேவையில்லை!

வசுதா, தன் யோசனையைச் சொல்ல, கீர்த்தனா, "பிரமாதம்!" என்று பாராட்டினாள்.

இருவரும் சுசித்ராவைப் பார்க்க, சற்றுத் திகைத்துவிட்டு, அவசரமாக யோசித்து "சரிப்பா" என்றாள் அவளும்.

இந்த இரு தோழிகளில் ஒருத்தி மேல் படிப்பு படிக்கிறாள். வசுதா வேலை பார்க்கிறாள். இந்த விடுமுறை நாளில் கூட, இருவருக்கும் வேறு வேலைகள் இருக்கக்கூடும். கீர்த்தனாவுக்கு, ஞாயிறுகளில், வகுப்பே நடப்பது உண்டு. இன்று கூட, இருக்கலாம்.

அத்தனையையும் ஒதுக்கி வைத்துவிட்டு, அவளுக்காக அவளை உற்சாகப்படுத்துவதற்காக வந்திருக்கிறார்கள். அவர்களோடு ஒத்துழைக்காமல், அவள் தன்னிலேயே உழல்வதா?

பிடிவாதமாக உற்சாகம் காட்ட அவள் முயற்சிக்கவும், மற்றவர்களின் ஆதரவுமாக, இங்கும் நிலைமை ஓரளவு சரியாகத் தொடங்கியது.

தனம் சொல்லி அனுப்பிய பொருட்களை வாங்கினார்கள், அதேபோல கீர்த்தனாவும், வசுதாவும் அவரவர் வீடுகளுக்கு ஏதேதோ வாங்கினார்கள்.

உணவு நேரம் ஆகிவிடவே 'ஃபுட் கோர்ட்டில்' மூன்று தினுசாய் எடுத்துச் சென்று மூவருமாகப் பகிர்ந்து உண்டார்கள்.

முயன்று வருவித்த உற்சாகமே என்றாலும், உதட்டில் முறுவலுடன் குப்பை கூடையில், உணவு டப்பா, கரண்டி, டிஷ்யூவைப் போட்டார்கள்.

"எப்படியோ கை பிசுபிசுப்பாக இருக்கிறது" என்று கீர்த்தனா சொல்ல, மூவருமாக 'ரெஸ்ட்ரூம்" சென்று கை கழுவக் கிளம்பினார்கள்.

அவர்களைப் போலவே, டப்பாக்களைக் கூடையில் போட வந்த ஒரு பெண், அவர்களை நிறுத்திப் பேசினாள், "மூன்று பேரும் ஒல்லியாக அழகாக இருக்கிறீர்களே! என்ன சாப்பிட்டீர்கள்?" என்று விசாரித்தாள்.

என்னவெல்லாம் என்று கூறியதும், அவளுக்கு ஒரே குழப்பம்! "நானும் இதே அயிட்டங்களைத்தான் சாப்பிட்டேன்! நான் மட்டும் ஏன் இவ்வளவு குண்டாக இருக்கிறேன்!"என்று வருத்தத்துடன் உரைத்தவாறே, ஐஸ்க்ரீம் ஸ்டால் பக்கமாகப் போனாள்.

அவள் ஆடி அசைந்து செல்வதை வியப்புடன் பார்த்திருந்து விட்டு, "பாவம்தான் இல்லை? எண்ணை குறைவாக அதே சமயம் காய்கறி அதிகமாக என்று, அவளும் சரியான உணவுதான் சாப்பிட்டிருக்கிறாள்! அப்புறம் ஏன் இப்படி குண்டாக இருக்கிறாள்? பார்க்கப் பரிதாபமாக இருக்கிறதே!" என்றாள் வசுதா.

டஸ்ட் பின் பக்கம் எட்டிப் பார்த்த சுசித்ராவுக்கு சட்டெனச் சிரிப்பு வந்தது.

"என்ன? என்ன?" என்று கீர்த்தனா ஆவலாகக் கேட்டாள். மற்றவளும் அப்படியே!

சிரிப்பை அடக்கிக் கொண்டு, சுசித்ரா விவரம் சொன்னாள் "அதில்லைப்பா, உங்களைப் போலவே சாப்பிட்டும் குண்டாக இருக்கிறேனே என்ற வருத்தப்பட்டாளே அவள். எப்படிச் சாப்பிட்டிருக்கிறாள், பார்த்தாயா? நாம் மூவரும் சேர்ந்து உண்டதை, அவள் ஒருத்தியாக உள்ளே தள்ளியிருக்கிறாள். குப்பைக் கூடைக்குள் மூன்று டப்பாக்களை போட்டிருக்கிறாள், இப்போதும், ஐஸ்க்ரீம் பக்கம் போகிறாள், பார்!"



கிளுக்கிச் சிரித்துவிட்டு, "நாமும் ஐஸ்க்ரீம் சாப்பிடலாம் என்று நினைத்தேனே! இங்கேயும் மூன்று தினுசை வாங்கி, நாம் சேர்ந்து உண்டால், அவள் ஒருத்தியாக அத்தனையும் வாங்கி முழுங்கிவிட்டு, 'அதே சாப்பிட்டும் நீங்கள் ஒல்லி, நான் குண்டு' என்று புலம்புவாளோப்பா?" என்று கீர்த்தனா கூற, மறுபடியும் மூவரும் தென்றலாய்ச் சிரித்தார்கள்.

"கட்டாயமாய்!" என்றாள் வசுதா தன் பங்குக்கு "கஷ்டப்பட்டு, நாக்கை அடக்கி, நீங்கள் உண்ட அளவே சாப்பிட்டாலும், நான் மட்டும் எப்படிக் குண்டாக இருக்கலாம்? நீங்கள் எப்படி ஒல்லியாக இருக்கலாம் என்று சண்டைக்கே வந்தாலும் வரலாம்!"

"கட்டாயம் வருவாள்!" என்றாள் கீர்த்தனா, வசுதாவைத் தொடர்ந்து "எனக்கு என்ன கவலை என்றால்..." என்று அவள் இழுக்க மற்ற இருவரும் அவளை ஆவலாக நோக்கினார்கள்.

"என்ன கவலை? சொல்லுப்பா?" என்று கேட்டனர்.

"அதான்ப்பா., வாய்ச் சண்டை என்றால், சமாளிக்கலாம். மற்ற வகை என்றால், அவள் இருக்கிற தாட்டிக்கு, நாம் சட்டினியாகி விட மாட்டோமா?" என்ற கீர்த்தனா, கவலை முகபாவத்தைக் கைவிட்டு, மற்றவர்களோடு சேர்ந்து நகைக்கலானாள்.

வாய் விட்டுச் சிரித்தது, எவ்வளவோ ஆறுதலாகிவிட, மூவருமாக கையை கழுவ சென்றார்கள்.

செல்லும்போதே "சே, பாவம்ப்பா. அந்தப் பெண்ணுக்கு என்ன பிரச்சினையோ? சும்மாவே குண்டாக இருப்பது பற்றி வருத்தப்படுகிறவளைப் பார்த்துச் சிரித்தோமே!" என்று சுசித்ராவுக்குக் கொஞ்சம் உறுத்தல் உண்டாயிற்று.

"அம்மா, புத்தரம்மா, ரொம்பத்தான் உருகி வழியாதே! தானே இழுத்துக்கொண்டு புலம்பினால், அதையும் சேர்த்துதான் கிண்டலடிக்க வேண்டும். நாம் மூவரும் சேர்ந்து உண்பதை ஒருத்தியாக உண்டுவிட்டு, நம்மை விடவும் குட்டையாக வேறு இருந்துகொண்டு, அனியாயமாகக் குண்டாகி விட்டதாக கதை விடுகிறவளைப் பார்த்துச் சிரிக்காமல், வேறு எதைப் பார்த்துச்

சிரிப்பதாம்? சிரிக்காமல் இருந்தால்தான் தப்புப்பா!"
"அதற்குமேல், ஐஸ்க்ரீம் வேறு! அதை விட்டுவிட்டாயே!" என்று
வசுதா எடுத்துக் கொடுக்க, சன்னமாகச் சிரித்தவாறே, மூவரும்
'ரெஸ்ட் ரூமை' நாடி நடந்தார்கள்.
கையை கழுவிவிட்டு, எதிரே சுவர் நெடுக இருந்த
கண்ணாடியைப் பார்த்தால், மூவருமே சிற்றிடையோடு
அழகாகத்தான் இருந்தார்கள்.
"உன் அம்மாவுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும், சுசி. கல்லூரி
காண்டீனில் தின்று குண்டாகத் தொடங்கியபோது, அவர்கள் தானே
'ஜிம்'மில் சேரச் சொன்னார்கள்? அதற்குப் பிறகே, நாம் மூன்று
பேருமே, அதிகச் சதை போட்டது இல்லை! நன்றி அறிவிப்பாக,
அவர்களுக்கு ஏதாவது வாங்கிப் போகலாமாப்பா?"
"என்ன வாங்கலாம்? சாக்கலேட் டப்பா?"
"ஏய், இது நன்றி தெரிவிப்பதா. பழி வாங்குவது இல்லை. டப்பா
சாக்லேட்டை, அவர்கள் மட்டுமாகச் சாப்பிட்டு, நன்றாக இருக்கும்
உடம்பை கெடுக்க வகை செய்வதா?... ஆனால் ஆன்ட்டி,
எப்போதுமே நல்ல அழகில்லை? உடம்பு, முகம் எல்லாமே!
அவர்களை முதலில் பார்த்தபோது இவளுடைய அம்மா என்றே நான்
நினைக்கவில்லை. அக்காவாக இருக்கும் என்று நினைத்தேன்"
இது தோழியரும், சளசளவென்று பேசியது எதுவுமே, சுசித்ராவின்
காதுகளில் விழவில்லை.
கண்ணாடியில் கொடி போன்ற இடையழகைப் பார்த்ததுமே,
அவள் மனம் விபாகரிடம் ஓடிவிட்டது.
அவனுமே அவளது இடையழகை வியந்திருக்கிறான் "பொய்யோ
எனும் இடையாள்' என்பது, இதைத்தான் என்று நினைக்கிறேன். என்
இரண்டு கை விரல்களிலுமே சுற்றிப் பிடித்து விட முடியும் என்று
தோன்றுகிறது. எதற்கும் சோதித்துப் பார்த்து விடுவோமா?" என்று
கண்ணில் சிரிப்புடன் அவன் கேட்டதும், "ஓ! செய்யலாமே!
நாளைக்கு அளவுநாடாவை எடுத்து வருகிறேன், உங்கள்
கையளவையும் பார்த்தால், தெரிந்துவிட்டுப் போகிறது!" என்று



அப்பாவியாய் அவள் மொழிந்ததும் "கொலைகாரி! மூடை அப்படியே
கொன்றுவிட்டாயே! இரு இரு திருமணத்துக்கு பிறகு,
எல்லாவற்றுக்கும் வட்டி போட்டு வாங்கி விடுகிறேன்" என்று அவன்
போலியாக மிரட்டியதும், அதையே நினைத்தபடி அவள் தூங்காமல்
கிடந்ததும்...
என்றேனும் மறக்குமா? எவ்வளவு எளிதாக சொல்லிவிட்டான்.
இன்னொருவனை மணந்துகொள் என்று! யாரோ மாதிரி, எப்படி
நின்றான்....
"சுசி?"
இரு புறத்திலும் தோழிகளின் முகங்களுடன் கரிசனத்துடன்
நோக்குவதைக் கண்ணாடியில் பார்த்த சுசித்ராவுக்குத் தன்னை
நினைத்ததே அவமானமாக இருந்தது. அவளை உற்சாகப்படுத்த
இருவரும் எவ்வளவு முயற்சிக்கிறார்கள்! அவளானால்... சரியான
முட்டாள்தான் அவள்!
கண்களில் திரண்ட நீரை உள்ளிழுக்க முயன்றபடி, "சாரிப்பா,
உங்களோடு நான் வந்திருக்கவே கூடாது. பேசாமல் வீட்டில்
கிடந்திருந்தால், நீங்களாவது சந்தோஷமாக சுற்றியிருப்பீர்கள்"
என்றாள் வருத்தத்துடன்.
"சரிதான்! வீட்டில் நீ அழுதுகொண்டு இருப்பாய் என்று தெரிந்த
பிறகும், நாங்கள் சந்தோஷமாக சுற்றுவது என்றால், ரொம்பவும்
அருமையான சினேகிதிகள்தான், நாங்கள். எங்களைப் பற்றி,
அப்படித்தான் நினைக்கிறாயா, நீ?"என்று சிறு கோபத்துடன் ஒருத்தி
கேட்க, அவர்கள் இருவரின் கைகளையும் பிடித்துக்கொண்டு, சுசித்ரா
கண்ணீர் விட்டாள்.
"என்னால் தாங்க முடியவில்லைப்பா! சமாளிக்கிறோம் என்று
நினைக்கும்போதே, ஒரு சின்ன வார்த்தையில் பேச்சில், எல்லாம்
போய்விடுகிறதே! காலையில் இருந்து, அவரது குரலையாவது கேட்க
வேண்டும் என்று ஏங்கினேன். ஆனால் பார், 'லிஃப்டில்' அந்தச்
சின்ன இடத்தில், விபா என்னைத் திரும்பிப் பார்க்கக் கூட இல்லை.
இரண்டு பேருக்கும் மனித மனம்தானே? அவர் இவ்வளவு திடமாக

இருக்கும்போது. நாம் மட்டும் என்ன மறுகுவது என்று சமாளிக்கப் பார்த்தேன். ஆனால் முடியவில்லையே!" என்று அழுதாள்.

பரிவுடன் அவளது தோளை வருடித் தட்டிக் கொடுத்தவாறு இரு தோழியரும் நிற்கையில், எதையோ கவனித்து, "வேறு யாரோ வருகிற மாதிரி இருக்கிறது. சுசி. முகத்தைக் கழுவிக்கொள், சமாளி" என்றாள் வசுதா.

இருவருமே சட்டென்று முன்னே வந்து, அவளை மறைத்தவாறு நின்றனர்.

"தாங்க்ஸ்பா!" என்று குனிந்து முகத்தைக் கழுவினாள் சுசித்ரா.

மூவருமாக வெளியே வரும்போது, தூரத்தில் அலறிய இசைக்கு இடையே "அந்தப் பக்கம்தாண்டா, யார் முதலில் வெளியே வந்துவிட்டாலும், நின்று சேர்ந்து போகலாம்" என்ற குரல், சற்றுத் தெளிவற்றுக் கேட்டது.

"நல்லவேளை! நான் அசடு மாதிரி அழுதபோது, யாரும் உள்ளே வரவில்லை!" என்று சுசி கூற, அதை ஒத்துப் பேசியவாறு தோழிகள் வெளியே வந்தால், அங்கேயும் எதிரே வந்தவள், பவித்ராவே!

முன்போலவே, ஆவலாக... ஆனால் சிறு தயக்கத்துடன், "அக்கா..." என்று அழைத்தாள் சிறுமி.

சுசிக்கு பரிதாபமாகத்தான் இருந்தது.

ஆனால், சற்று முன் 'ஸ்பென்சரில்' விபாகரன் காட்டிய உதாசீனம் நினைவு வர, கூடவே, தோழிகளும் அழுத்தம் கொடுக்கவே, பவித்ராவைக் கண்டுகொள்ளாமலே போய்விட்டாள்.

அதன் விளைவு சுசித்ராவை இன்னொரு சிக்கலில் மாட்டி வைத்தது!





# என்னவளே, காதல் என்பது.... 5

'ரெஸ்ட் ரூம்' நுழைவாயிலில் நின்று அழைத்த பவித்ராவுக்குப் பதில் சொல்லாமல், அவளைத் திரும்பிக் கூடப் பாராமல், சிநேகிதிகளோடு சேர்ந்து விலகிச் சென்றுவிட்டபோதும், சிறுமியின் அடி பட்டாற்போன்ற விறைப்பும், கண்களை நோக்கிக் கை செல்வதும், சுசித்ராவின் ஓரப் பார்வையில் பட்டுவிட, அவளுக்கு வேதனையாக இருந்தது.

மின்னாமல் விழுந்த இடி போலத் திடுமெனப் பெற்றோரை இழந்த பெண்!

ஆவலும் அன்புமாகப் பார்த்தாளே!

பதிலுக்கு ஒரு புன்னகை கூடச் செய்யாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு வந்தது, மகத்தான குற்றம் போல, அவளை உறுத்தியது.

ஆவலாக ஓடி வந்து நாய்க்குட்டியை யார் மீதோ உள்ள கோபத்தைக் காட்டி எட்டி உதைத்தது போல!

பாவம்! சின்னப் பெண் என்ன மாதிரி வேதனைப்பட்டாளோ!

இந்த அக்கா, இப்படிப் பண்ணி விட்டாள் என்று புகார் சொல்லி வலியைக் குறைத்துக் கொள்ள அவளுக்கு அம்மாவா இருக்கிறாள்.

அன்பான அந்த அம்மா இல்லாததே எவ்வளவு பெரிய வலி. கண்டிப்பும், கனிவுமாக சாருமதியின் முகம் மனதில் தோன்றி பரிதாபத்தை கூட்டியது.

கீர்த்தனாவும் வசுந்தாவும் சென்ற பிறகு சும்மாவே டல்லடித்த மனது, இப்போது குற்ற உணர்ச்சியில் இன்னமும் சோர்ந்தது. விபாகரனின் பிடிவாதத்துக்கு பாவம், அந்த பெண் என்ன செய்யும்? பாவம் அவனைப் பற்றி என்ன நினைத்திருப்பாள்?

என்ன நினைத்தாள் என்பதை, சில பல வார்த்தைகளால், பவித்ரா, அவளிடம் மறுநாள் தெரிவித்தாள்.

சுசித்ராவைச் சின்னவள் அழைத்தது, பொதுத் தொலைபேசியில். பழக்கமற்ற எண்ணைத் திரையில் பார்த்துவிட்டு, "யார்

பேசுவது?" என்று சுசித்ரா எச்சரிக்கையுடன்தான் கேட்டாள்.

பொழுது போகாத எத்தனையோ அசடுகள் வேலை மெனக்கெட்டு, யாரையாவது கூப்பிட்டு எதையாவது உளறுவது, அவ்வப்போது நடப்பதுதானே?

அதுபோல ஏதாவது என்றால், சட்டென்று கட் பண்ணிவிடத் தயாராக விரலை வைத்துக்கொண்டு கேட்டால், எதிர்முனையில் "நான்தான் பவித்ரா, ஆனால், நேற்று பண்ணின மாதிரிப் பேசாமல் இருந்து விடாதீர்கள். செல்லை வைத்தும் விடாதீர்கள். நான் கட்ட்... டாயமாய், உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்" என்று கோபக் குரலில் சிறுமி படபடத்தாள்.

இவளிடம் என்ன சொல்லி விளக்குவது? அதுவும், விபாகரன் வேறு, அவனுடைய அக்கா மக்களிடம் என்ன மாதிரிச் சொல்லி வைத்திருக்கிறானோ?

இது வீட்டுத் தொலைபேசி அல்ல. விபாகரனின் செல்லும் அல்ல. பொதுத் தொலைபேசி, நேரமும், பள்ளியில் உணவு இடைவெளி!

அதாவது, விபாகரனுக்குத் தெரியாமல் பேசுகிறாள்!

ஆனால், அவன் முன்னிலையில்தானே, முன்தினம் 'அக்கா' என்று ஆர்வமாகக் கூப்பிட்டாள்? அதற்காக, அவன் கண்டித்திருப்பானோ?

அவளாக முன்வந்து கூப்பிட்டும், சுசித்ரா பதில் பேசாமல் போனது, அந்தச் சிறுமியை வருத்தியும் இருக்கிறது. அந்த வருத்தமே, இப்போது கோபமாக வெளிப்படுகிறது! பாவம்!

வேறு ஒன்றும் கூற முடியாமல், "வைக்கவில்லை, சொல்லு. என்ன பேச வேண்டும்?"என்று மட்டும் கேட்டாள் சுசித்ரா.

"............."

ஐயோ! அழுகிறாள்!

பிரியமான பெண். எப்போதுமே ஓடி, வந்து கையைப் பிடித்துக் கொள்வாள் 'அக்கா, அக்கா' என்று குதிப்பாள்.

'அக்கா இல்லை... அத்தை' என்று சாருமதி சொன்னாலும் 'போங்கம்மா, அக்கா மாதிரிதான் இருக்கிறார்கள்' என்று பிடிவாதமாக 'அக்கா' என்றே அழைப்பாள்!

சுசித்ராவுக்கும் அவளை ரொம்பப் பிடிக்கும். அவளை மட்டுமல்ல, அங்கே எல்லோரையுமே! விபாவை ரொம்ப!

பெருமூச்சை அடக்கிக்கொண்டு, 'பவி! என்னம்மா? என்ன சொல்ல வேண்டும்? எதுவானாலும் சொல்லுடா" என்றாள் கனிவாக.

"சொல்லத்தான் போகிறேன்!" என்று அழுகையினூடே அறிவித்தாள் பவித்ரா. "முமுதலிலே எனக்குப் பதில் சொல்லுங்கள். நீங்கள் ஏன் இப்படிச் செய்தீர்கள்? அம்மா... அம்மா, அப்பாவும் இல்லை. நீங்களும் இல்லைன்னால், எங்களுக்கு எப்படி இருக்கும்? உடனே கல்யாணம் வைக்க மாட்டாங்க, அதனாலே நீங்களும் உடனே வர முடியாது என்று, வேலைக்காரி சொன்னாள். ஆனால் நீங்கள் வரவே மாட்டீர்கள்னு, மாமா சொல்கிறாரே! எங்களுக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று, நினைத்துப் பார்த்தீர்களா? எங்களை, உங்களுக்குப் பிடிக்கும் என்று நினைத்தோமே! ஆனால் பிடிக்காமல்தான், நேற்றுக்கூட, நீங்கள் என்னிடம் பேசலை, இல்லையா?" என்று படபடவென்று பொரிந்து கொட்டினாள்.

"அப்படி இல்லைம்மா..."என்று கம்மிய குரலில் சுசித்ரா குறுக்கிட்டதைச் சின்னவள் பொருட்படுத்தவே இல்லை.

"எப்படி இல்லை?" என்று வெடித்துவிட்டு, தொடர்ந்து பேசினாள். "முதலிலே, எங்க மாமா எவ்வளவு கஷ்டப்படுகிறார் என்று தெரியுமா? முன்னெல்லாம் எப்படிச் சிரித்துச் சிரித்துப் பேசுவார்! இப்போதெல்லாம் மாமா சிரிப்பதே இல்லை! ராத்திரியிலே கூட, சரியாகத் தூங்குவதே இல்லை. நேற்று, ரொம்ப டல்லாக இருந்தார். எங்களுக்கும் கஷ்டமாக இருந்தது. அதனால்தான் மாமாவைப் பிடித்து இழுத்துக்கொண்டு, 'ஸ்பென்சரு'க்கு வந்தோம். அங்கே நீங்கள் பேசாமலே போனது, இன்னும் கஷ்டமாகிவிட்டது. அதனால் அடுத்த 'மாலு'க்கு வந்தால், அங்கேயும் நீங்கள்! இரவு பன்னிரண்டு மணி வரைக்கும், மாமா ஹாலிலே நடந்திட்டே இருந்தார், தெரியுமா? நானும் உங்கள் நம்பரை, மாமா செல்லிலே இருந்து எடுப்பதற்காக, விழித்திருந்தேனா... எனக்கு, உங்கள் மேலே ஒரே கோபமாகிவிட்டது" என்றாள்.



இதைத்தான் 'பழி ஓரிடம், பாவம் ஓரிடம்' என்பார்கள் போல என்று, கைத்த புன்னகையோடு சுசித்ரா நினைத்துக் கொண்டாள்.

லேசாகத் தொண்டையைச் செருமிக்கொண்டு "பார் பவித்ரா, இந்தக் கல்யாணத்தை, நான் நிறுத்தவில்லை. வேண்டாம் என்று பிடிவாதமாக இருப்பது உன் மாமாதான். எனக்கும் மனதில் ரொம்ப வேதனையாக இருந்ததால்தான், என் சினேகிதிகள், என்னை வெளியே கூட்டி வந்தார்கள். நீ சொன்ன மாதிரி, அங்கேயும் நீங்கள்... அடுத்ததிலும் அப்படியே! ஒருத்தருக்கு ஒருத்தர் 'காப்பிகேட்' மாதிரி ஆகிவிட்டது!" என்று விளக்கினாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே, "காப்பி கேட்' சிறுமியை ஈர்த்தது.

"காப்பிகேட்தான் இல்லையாக்கா?" என்று நகைக் குரலில் கூறியவள், உடனேயே மாறி, "அக்கா நிஜமாகவே, உங்களுக்கும், எங்களிடம் பிரியம்தானே? அக்கா, நான் வந்து... எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமாக்கா?" என்று கெஞ்சலாக முடித்தாள்.

"என்னடா, செய்ய வேண்டும்?"

"அதுக்கா..." என்று வேகமாகத் தொடங்கியவள், சற்றுத் தயங்கி, மறுபடியும் தொடர்ந்தாள். "அக்கா வவந்து... இங்கே... வந்து... ஃபோனில் சொல்ல முடியாது. நான் உங்களை நேரில் பார்க்க வேண்டும்க்கா. கட்டாயம்க்கா, எனக்கு வேறே யாரும் இல்லையக்கா, ப்ளீஸ்க்கா" என்று கெஞ்சலாக முடித்தாள்.

விபாகரன் விரும்பிய 'க்ளீன் கட்'டை நினைக்கையில் பவியின் வேண்டுகோளை ஏற்கக் கூடாதே.

சுசியுடைய பெற்றோரும், அதை ஒத்துக் கொண்டிருக்கும்போது?

வேறே யாரும் இல்லை என்று ஏங்கும் இந்தச் சின்னப் பெண்ணிடம் நேரடியாக மறுக்கவும் முடியாமல், "நீ மாமாவிடம் கேட்டுப் பாரேன், கண்ணு" என்று கனிவாகவே மாற்று யோசனை சொன்னாள்.

ஆனால் "ஐய்யோ! மாமாவிடமா? முடியவே முடியதுக்கா! மாமாகிட்டே சொல்லு முன்னாலே, நான் செத்தே போவேன்!" என்று

சின்னவள் பிடிவாதம் பிடிக்க, அவளது ஒரு வார்த்தையில், சுசியைப் பதற்றம் பற்றிக் கொண்டது.

செத்துப் போவேன் என்கிறாளே! வார்த்தையின் பொருள் புரிந்துதான் சொல்கிறாளா?

"சேச்சே! இப்படியெல்லாம் பேசக் கூடாது, பவித்ரா! கட்டாயம், என்னிடம்தான் சொல்ல முடியும் என்றால், அப்படிச் சொல்ல வேண்டியதுதானே? அதை விட்டு, செத்து, கித்து என்று, என்ன பேச்சு இது?" என்று பெரியவளாய்க் கண்டித்துவிட்டு, "சொல்லு, எங்கே வரவேண்டும்? எங்கே சந்திப்பது, உனக்கு வசதி என்று சொல். நீ சொல்லுகிற நேரம், நான் அங்கே வருகிறேன்" என்றாள்.

எங்கே, எப்போது என்று தீர்மானிப்பதில், பவித்ராவுக்கு குழப்பம் இருந்தது.

சுசித்ராவுடன் தனியே பேச வேண்டும் என்றாள். அவளுடைய தம்பி கூட, அருகில் இருக்கக் கூடாதாம். அவனுக்குத் தெரியவும் கூடாதாம்! மாமாவும் அப்படித்தான், பள்ளி தவிர வேறு எங்கும் அவள் செல்வதும் கிடையாது.

அத்தோடு, பள்ளிக்குச் சென்று வரும்போது, நிர்மலும், ஸ்கூல் பஸ்சில் கூடவேதானே இருக்கிறான்? அப்புறம் எப்படி?

சற்று நேரம் யோசித்துவிட்டு "அக்கா, இப்போது உணவு இடைவேளை முடியப் போகிறது. நான் வகுப்புக்குப் போக வேண்டும். அவசரமாக யோசித்தால் மனதில் ஒன்றுமே தோன்ற மாட்டேன் என்கிறது. நாளைக்கு இதேநேரம் நீங்கள் இங்கே வருகிறீர்களா? இரண்டு பேரும் சேர்ந்து பேசி, சரியான நேரம் கண்டுபிடிப்போம்" என்று கேட்டாள்.

"சரிம்மா" என்று சுசி ஒப்பவும், ஒரு "தாங்க்ஸ்க்கா!"வோடு பேச்சை முடித்துவிட்டுப் பள்ளிக்கு ஓடிப் போனாள் சிறுமி.

என்ன விஷயமாக இருக்கும் என்று பலமுறை யோசித்தபோதும், தவறான எதையும் நினைக்க, சுசித்ராவுக்குத் தோன்றவில்லை.

ஏதோ ஒரு சின்ன, சாதாரணமான விஷயமாக இருக்கும். ஏதாவது பாடம் புரியாமல் கூட, இருக்கலாம். இந்த வயதில்,



ஆலோசனை கேட்க தாயும் இல்லாத நிலையில், துரும்பை தூணாக்கிக் கவலைப்படுகிறாள், பாவம் என்று எண்ணினாள்.

மற்றபடி, சாருமதி வளர்ந்த பெண்ணிடம் எந்தத் தப்பும் இராது என்று அவளுக்கு நிச்சயம்!

உதாரணத்துக்கு, விபாகரன் இல்லையா? நல்லவனாக இருப்பதால்தானே, அவன் அவளை மணக்க மறுப்பதே! அவளுடைய பெற்றோரால் கூட, அவனை எந்த விதத்திலும் குறை கூற முடியவில்லையே!

என்ன சொன்னாலும், இன்னொருவனை சுசித்ரா மணக்கப் போவது இல்லை என்பது ஒருபுறம் இருந்தாலும், எவ்வளவு முயன்றும், தலை கீழாக நின்று பெற்றோர் தேடத்தானே செய்கிறார்கள். அப்படியும், விபாகரனுக்கு சமமான இன்னொருவனை இவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லைதானே?

எப்படி முடியும் என்று உள்ளூர கர்வத்துடன் நினைத்தாள் அவள். அசட்டு கர்வம்தான். உரிமையற்றதும்கூட. ஆனாலும் பெருமைப் படாமல் இருக்க, அவளால் முடியவில்லை.

என்னவோ, அந்தமுக்கியமான நாளும் அன்று விபாகரனைப் பார்த்ததும், முதலில் மிகவும் வேதனையாக இருந்தபோதும், அடி மனதில் சுசித்ராவுக்கு ஓர் ஆறுதலும் உண்டாயிற்று.

அவனது வெறும் குரலுக்காக ஏங்கியவளுக்கு, முழுத் தோற்றமே கிடைத்ததே!

அடுத்து தொடர்பாக, அவனுடைய அக்கா மகளின் ஃபோன் வேறு!

இதனாலெல்லாம் பெரிதாக ஒருமாற்றமும் வந்துவிடப் போவதில்லை என்பது, அவளுக்குத் தெரியாமலில்லை!

விபாகரன் பிடிவாதக்காரன். காரண காரியம் ஆராய்ந்து, அவன் எடுத்த முடிவை, அந்த அடிப்படைக் காரணம் அப்படியே இருக்கையில், நிச்சயமாக மாற்றிக் கொள்ள மாட்டான். இதையும் அவள் அறியாமல் இல்லை.

அந்த அடிப்படையில் காரணமும் மாறாமல் அப்படியேதான்

இருக்கப் போகிறது என்பதும், நூறு சதவீத நிச்சயமே! மாறுவதற்குத்தான் வழியே கிடையாதே!

ஆனாலும், அவனுக்கும் அவளுக்கும் இடையே, ஏதோ ஓர் இணைப்பு உடைந்துவிட்ட நிலையில் என்றாலும், ஒரு பாலம் இருக்கிறது என்ற எண்ணமே, அவளுள் சிறு அமைதியை ஏற்படுத்தியது.

பள்ளிப் படிப்பின்போதே, நல்லது, கெட்டது, தற்காப்பு பற்றியெல்லாம் கற்றுக் கொடுத்த அவளது பெற்றோர் அவளது நடமாட்டங்களை, ஒரு போதும் கட்டுப்படுத்தியது இல்லை. அன்று, விபாகரனை சந்திக்கப் போனபோது கூட அப்படித்தான், அவளைத் தடுக்கவில்லை.

எனவே, சும்மா "வெளியே போய்விட்டு வருகிறேன்" என்றதற்கு மேல், சுசித்ரா தாயிடம் எதுவும் சொல்லத் தேவையிருக்கவில்லை.

இப்போது, பவித்ரா கேட்கும் உதவி, அவளால் செய்ய முடியாததாக இருந்தால், தாயிடம் அது பற்றி ஆலோசனை கேட்கவும், சுசி தயாராகத்தான் இருந்தாள்.

பள்ளியின் உணவு இடைவேளைக்கான மணி அடிக்கும்போதே, சுசித்ரா பள்ளிக்குச் சென்று விட்டிருந்தாள்.

அவள் படித்ததும் அதே பள்ளியே என்பதால், எளிதாக உள்ளே போய், பவித்ராவோடு ஒதுக்குப்புறமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்க அவளால் முடிந்தது.

எளிமையான பள்ளிச் சீருடையில் சிறுமியின் தோற்றம், சுசியைப் பாதித்தது.

ஞாயிறன்று, அவள் அணிந்திருந்த உடை, அடுக்கடுக்காய் மடிப்புகள் அமைந்திருந்ததால், இவ்வளவு ஒல்லியாக காட்டவில்லை.

சுசியும், பவித்ராவைப் பாராதிருக்கவே முயன்று கொண்டிருந்தால், அவளது தோற்றத்தை அளவிட முயற்சிக்கவுமில்லை.

ஆவலாக வந்தவளை, ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "ஒழுங்காகச்



சாப்பிடுவதே இல்லையா? ஆனால், அதை அப்புறம் பார்ப்போம். இப்போது என்ன பிரச்சினை? அதைச் சொல்லு" என்று கேட்டாள்.

"அக்கா...."என்ற சின்னவளின் கண்கள் கலங்கின.

"ஷ்! அழக் கூடாது. பவிம்மா. இன்னும் கொஞ்ச நேரத்தில், உணவு இடைவேளை முடிந்துவிடும்டா. அதற்குள் நீ பிரச்சினை பற்றி சொல்லி முடித்துவிட்டு, சாப்பிடவும் வேண்டும். அதனால், விஷயத்தை மட்டும் சீக்கிரம் சொல்லு" என்று அவசரப்படுத்தினாள்.

"அதுக்கா.." என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, சுசித்ராவின் காதருகே வந்து, பவி முணுமுணுத்தாள். "அதுபோல எனக்கு கட்டாயம் வேணும் அக்கா! ஊருக்குப் போய்விட்டு வந்து, இதெல்லாம் வாங்கித் தருவதாக அம்மா சொன்னார்கள். இப்போது அம்மாவே இல்லை!"என்றவளின் குரல் தழதழத்தது.

"எனக்கு... வந்து, எனக்கு, அக்கா. எனக்குக் கடைக்குப் போய்ப் போட்டுப் பார்த்து வாங்க வேண்டும். அப்போதுதான் அளவு சரியாக இருக்குமாம். வந்துக்...கா, இப்போது அணிவதை, இனியும் பயன்படுத்த முடியாது. கஷ்டமாக இருக்கிறது" என்றாள் கண்ணீருடன்.

உண்மைதான். பன்னிரண்டு வயதுப் பெண்! உணவு மற்றும் பல காரணங்களால் உடல் மெலிந்தாலும், வயதுக்குரிய வளர்ச்சி, கட்டாயம் இருக்கும். எனவே உடைகள், உள்ளாடைகள், வேறு வாங்கித்தான் ஆக வேண்டும்.

அவளால், அவளுடைய சொந்த மாமாவிடம் கூட, ஏன் சொல்ல முடியவில்லை என்பதும், சுசித்ராவுக்குப் புரிந்தது. சொந்தத் தகப்பனிடம் கூட, இந்த விவரங்களைச் சாதாரணமாகப் பேசுவது நம் நாட்டில்... எந்த நாட்டிலும், சிரமம்தான்!

எந்த வயதில் போய், பெற்றவளை இழந்திருக்கிறாள் என்று, சுசியின் மனம் மறுபடியும் உருகியது. நல்லவேளையாக, அவளாலாவது உதவ முடிகிறதே!

"முதலில் போய் சாப்பிடு. சாப்பிடும்போதே, எப்படிக் கடைக்குச் போய் வாங்குவது என்று யோசி நானும் என்ன செய்யலாம் என்று

வழிகளை ஆராய்கிறேன். நீ சாப்பிட்டுவிட்டு வந்ததும், இருவரும் சேர்ந்து பேசி முடிவெடுக்கலாம்" என்று பவியைச் சாப்பிடச் சொல்லி அனுப்பி வைத்தாள்.

அவள் உணவை முடித்துக்கொண்டு வந்ததும், சின்னவளும் பெரியவளுமாக, இரு பெண்களும், மடமடவென்று திட்டம் போட்டார்கள்.

விபாகரனுக்குத் தெரிந்தால், செலவானாலும் பரவாயில்லை என்று வெளி உதவி தேடுவானே தவிர, சுசித்ராவை உள்ளே வர அனுமதிக்க மாட்டான். 'அதுதான் கண் பாராததைக் கருத்து மறந்துவிடும்' என்கிறவன் ஆயிற்றே'

எனவே அவனுக்குத் தெரியாமல்தான் செய்தாக வேண்டும்.

தெரியாமல் வாயை விட்டுவிடுவான் என்பதால், நிர்மலுக்குச் சொல்லக் கூடாது!

"அக்கா, மாலையில் வீட்டுக்குப் போன பிறகு, டிஃபன் சாப்பிட்டுவிட்டு, நிர்மல் டென்னிஸ் கோச்சிங் போவான். நாலரை மணிக்குப் போனான் என்றால், அவன் பயிற்சி முடிந்து வருவதற்கு ஆறு மணிக்கு மேல் ஆகிவிடும. அந்த நேரத்தில் நாம் கடைக்குப் போய் வந்துவிடலாமா? அவனிடம் வேண்டுமானால், சினேகிதி வீட்டுக்குப் படிக்கப் போவதாகச் சொல்லி விடுகிறேன்" என்றாள் பவித்ரா.

அவர்கள் இருவருக்குமாகத் தனியே கிடைக்கும் நேரம் அதுதான். ஆனாலும், அவளது யோசனையின் பின் பகுதி, சுசித்ராவுக்குப் பிடிக்கவில்லை.

இந்த வயதில், அவளுக்குப் பொய் சொல்லப் பழக்கிக் கொடுப்பது போலல்லவா, ஆகிறது? இப்போது பழகும் இந்தப் பொய், இன்னும் எப்படியெப்படி வளருமோ?

அதுவும், படிப்பதாகப் பொய் சொல்வதை, அவளால் கொஞ்சமும் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

"அப்படியெல்லாம் பொய் சொல்ல வேண்டாம், பவி. சினேகிதியோடு 'ஷாப்பிங்' போவதாகச் சொல்லு. உறவு என்று



ஆகாத நிலையில், இன்றைக்கு நானும் உனக்கு, ஒரு வெறும் சினேகிதிதானே? அதனால் நீ சொல்வது, பொய்யாகாது இல்லையா? யாரோடு, எங்கே என்று முழு விவரத்தையும் முதலிலேயே சொல்லத் தேவையில்லைதானே? நிர்மலாக கேட்டால், அப்போது சொல்லிக் கொள்ளலாம்" என்றாள் சுசித்ரா.

"அப்புறம் மாமாவிடம் அவன் சொல்லி விடுவானேக்கா?" என்று பவித்ரா கவலைப்பட்டாள்.

"சொல்லட்டும் பவி. ஏதாவது கேட்டால், அப்போது நானே நேரில் வந்து, நாம் ஏன் இப்படிச் செய்ய நேர்ந்தது என்று, உன் மாமாவுக்கு விளக்கம் சொல்கிறேன். அதற்குப் பிறகு, அவர் இது பற்றி ஒன்றும் சொல்ல மாட்டார்" என்றாள் பெரியவள் அமைதியாகக் காட்டி. "எப்படியும் பொய் சொல்வது, சரியில்லை செல்லம்!"

"உங்கள் இஷ்டம்!" என்று தோளைக் குலுக்கினாள் சிறுமி.

இன்னும் இதில் துணிமணி வாங்குவதற்குத் தேவையான பணம் பற்றி, ஒரு ஒரு சிறு விவாதம் நடந்தது.

பிள்ளைகள் இருவருக்குமாக கைச்செலவுக்காக மாதாமாதம் சாருமதி குறிப்பிட்ட அளவு பணம் கொடுப்பது உண்டு. அந்தப் பணத்தில் செலவு போக மீந்ததை, உண்டியலில் போட்டு வைப்பார்கள். உண்டியல் பணம் ஆயிரம், இரண்டாயிரம் என்று வளர்ந்ததும், அவரவர் பெயரில் பாங்கியில் டெப்பாசிட் பண்ணுவார்கள்.

தாய்மாமனும் அதையே தொடர்ந்தான்.

சேமிப்புப் பணத்தைப் பிறந்த நாள் சமயத்தில் எடுத்து, ஆசைப்பட்ட எதையாவது வாங்கிக் கொள்வார்கள்.

அவரவர் பிறந்த நாள் வரும் சமயத்தில் நிறைவு பெறும் விதமாகத்தான் பணத்தை டெப்பாசிட் பண்ணுவதே. மூன்று மாதங்கள் முன்னதாக, அந்தப் பணத்தை எடுக்க முடியாது என்று பாங்க்கில் விசாரித்து அறிந்த பவித்ரா, முதலில் மிகவும் சோர்ந்து போனாள்.

வீட்டில் அலமாரியில் எப்போதும் சில நூறுகள் இருக்கும். ரொட்டி,

ஜாம், பிஸ்கட் போன்ற பொருட்களைத் தேவைப்படும்போது, பிள்ளைகள் வாங்கிக் கொள்வதற்கு வசதியாக, விபாகரனின் ஏற்பாடு. பணம் காலியாக காலியாக மறுபடியும் வைப்பான். ஆனால் அதை மொத்தமாக எடுத்தால் தெரிந்துவிடும்.

இன்ன செலவுக்காக என்பது தெரிவதை விட, இன்னாரோடு பவி போகிறாள் என்பதைத் தாய் மாமானிடம் சொல்லவே, பவி தயங்கினாள். சுசியோடு செல்வதை, அவன் தடுத்து விடக் கூடும்!

அதைவிட இப்போதைக்கு உண்டியலில் சேர்ந்திருப்பதை வைத்து என்ன வாங்க முடியுமோ, அதை மட்டும் வாங்கிக்கொண்டு, வந்து விடலாம். அப்புறம் மாதா மாதம் கைச்செலவுக்கு தரப்படும் பணத்தைக் கொண்டு அடுத்தமாதம் வாங்கலாம் என்ற முடிவுக்குச் சின்னவள் வந்தாள்.

வியப்பைக் காட்டி கொள்ளாமல், தானே முழுத்தொகையும் போட்டு, முதலில் வாங்கி விடுவதாகவும் பவி, மாதாமாதம் பாக்கெட் மணியில் முடிந்ததைக் கொடுத்து, செலவானதைத் திருப்பித் தருவது மேல் என்று, சுசித்ரா வேறு வழி சொல்ல, அவள் எதிர்பார்த்தது போலவே, பவியின் முகம் மலர்ந்தது.

"ஆனால், நீங்கள் கட்டாயம் என்னிடம் முழுத் தொகையையும் வாங்கிக் கொள்ள வேண்டும். அக்கா. ப்ராமிஸ்?" என்று மற்றவளிடம் உறதி பெற்றுக் கொண்டதோடு, அவளுக்கு நிம்மதியாகிவிட்டது!

தொடக்கம் அவ்வளவு இலகுவாக இல்லை என்றாலும், பவித்ராவுக்குத் தேவைப்பட்ட, அனைத்தையும், இரு பெண்களும் எளிதாகவே வாங்கி முடித்தனர்.

பள்ளி முடிந்து வந்து, மாலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு நிர்மல் டென்னிஸ் விளையாடப் போனால், பவித்ராவும் கதவைப் பூட்டிக்கொண்டு கிளம்பி விடுவாள்.

தெரு முனையில் ஸ்கூட்டரில் சுசித்ரா காத்திருப்பாள். இருவருமாகக் கடைத்தெருவுக்குப் போவார்கள்.

சுமார் அரை மணி நேரம் 'ஷாப்பிங்' கிடைத்தவரை வாங்கிக்கொண்டு கிளம்பி விடுவார்கள். ஒன்றுமே

திரும்புவது நிச்சயம்.

கிடைக்கவிட்டாலும், நேரம் தவறாமல் திரும்புவது நிச்சயம்.

தேவைப்படும் அனைத்தையும் வாங்கி முடிப்பதுதான் முக்கியம். அதைக் கெடுக்கும் விதமாக, எதையும் செய்யக் கூடாது என்று, இரு பெண்களுமே எண்ணினர்.

அதனாலேயே, அக்கம் பக்கம் யார் கவனத்தையும் கவரும் விதமாக தினமும் போவதும் கிடையாது. சில தினங்களுக்கு ஒரு தரம் செல்லும்போதும், தாமதமாகத் திரும்புவதும் இல்லை.

ஆனால், பிரிந்து செல்லும்போதுமட்டும், அக்கா, அக்கா என்று பெரியவளை உரசிக்கொண்டு பவித்ரா முகம் வாடி நிற்பாள், தாயின் ஏக்கம்!

இந்த வயதில் தாயை எப்படி ஒட்டிக்கொண்டு அலைந்தோம் என்பது நினைவு வந்து, வீட்டின் தனிமைக்குச் சின்னவளை அனுப்ப சுசிக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும்.

அத்தோடு பவியின் பழக்கத்தில் விபாகரனோடு ஒரு மறைமுகத் தொடர்பாக, உள்ளூர ஓர் ஆறுதலும், அவளுக்கு இருக்கிறதே!

வேலை முடிந்தது, போ என்று விட்டுவிட அவளுக்கு மனம் வராது!

இதனாலேயே அவர்கள் 'ஷாப்பிங்' முடிவுக்கு வராமல் இழுத்துக்கொண்டே போனது.

சில சமயம், ஒரே ஒரு கடையை மட்டும் பார்த்துவிட்டு, 'மூடே இல்லை' என்று ஐஸ்க்ரீம் பார்லரில் போய் பேசிக்கொண்டே உட்கார்ந்திருப்பார்கள். மாறுதலாக, அவ்வப்போது ஜூஸ் குடித்துவிட்டுக் கிளம்புவதும் உண்டு.

இருவரின் தேவைகளுக்குத் தீனி போட்ட, இந்த சந்திப்புகள், எதிர்பாராத வண்ணம் ஒருநாள் முடிவுக்கு வந்தன.





# என்னவளே, காதல் என்பது.... 6

சுசித்ரா, பவித்ராவின் சந்திப்புகள், அவர்கள் விரும்பியது போல, விபாகரன் நிர்மல் இருவரின் கவனத்துக்கும் வரவே இல்லை! சுசித்ராவுடைய பெற்றோரும், விபாகரனைப் பற்றி, மகளின் மனம் சற்றுத் தெளிந்து விட்டதாலேயே, அவளது முக வாட்டம் குறைந்திருப்பதாகவே எண்ணினர்.

யாரிடமும் போய் உண்மையை விளம்பியே ஆக வேண்டும் என்ற விருப்பம், சுசி, பவிக்கும் இல்லாததால், கிட்டத்தட்ட ஒரு மாதமே இப்படியே கழிந்து போயிற்று. இன்னும் எத்தனை மாதங்கள் இதே போலச் செல்வதானாலும், அவர்கள் இருவருக்குமே, அது சம்மதமாகவும் இருந்தது.

முழுமையாக அல்ல என்றாலும், இருவரின் தேவைகளையும், இந்தச் சந்திப்புகள் ஒவ்வொரு விதமாக ஓரளவேனும் தீர்த்ததால், அவர்களுக்கு, அது தேவையாகவும் இருந்தது. முடிவற்றது போலத் தொடர்ந்தது.

ஆனால், நெருங்கிய சுற்றத்தின் கண்ணில் படவில்லை என்பதாலேயே, போகிற வருகிறவர்கள் எல்லோருமே கண்களை மூடிக்கொண்டே இருப்பார்கள் என்று அர்த்தமில்லை, அல்லவா?

அந்தந்த வயதிற்கு அழகாக இருப்பவர்களைக் கண்டால், இன்னொரு தரம் திரும்பிப் பார்க்கத்தான் தோன்றும். அதிலும், அறிமுகம் ஆனவர்கள் என்றால், இன்னும் கொஞ்சம் கவனத்தோடு ஆராயவும் தோன்றும்!

அப்படி அவர்களை முதலில் கவனித்தவள் கீர்த்தனா. சுசித்ராவுடைய அருமைத் தோழிகளில் ஒருத்தி. முதுகலைப் பட்டப் படிப்பு படிப்பவள்.

இந்த மேல் படிப்பின் ஒரு பிரச்சினை என்னவென்றால், சிறு வயதில் இருந்து, முதல் பட்டப் படிப்பு வரை நடப்பது போல, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமாக பாடம் நடப்பதில்லை. அந்தந்த

பேராசிரியர்கள், அவர்களது
பாடத்தில் பெறும் அனுபவசாலிகளான பேராசிரியர்கள், அவர்களது
இயல்பான வேலையை முடித்துக் கொண்டு, வசதிக்கேற்ப மற்ற
நேரத்தில், இந்த முதுகலை மாணவர்களுக்கு பாடம் எடுப்பார்கள்.
அவர்கள் பாடம் எடுக்க வரும் நேரமே, அன்றைக்குத்தான் முடிவு
செய்யப்படும். வகுப்பில் லீடர் மாதிரி யாரையேனும் தெரிவு செய்து,
அவர்களுக்கு எஸ்எம்எஸ் அனுப்புவார்கள். அவர்கள், மற்ற
மாணவர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவார்கள்.
அப்படி, அன்று பாடம் இருப்பதாகத் தகவல் வந்தபோது,
கீர்த்தனா, போரூர் தாண்டி ஓர் உறவினர் வீட்டு விசேஷத்தில்
கலந்து கொண்டு, சந்தோஷமாக அரட்டை அடித்துக்
கொண்டிருந்தாள். அவளுடைய பெரியம்மா மகளுக்குத் திருமணம்
நிச்சயமாகி, அன்று பூ வைக்கிற வைபவம்.
ஒத்த வயது உறவினர் எல்லோருமாக கல்யாணப் பெண்ணைக்
கிண்டலடித்துக் கொண்டிருந்தபோது, பேராசிரியர் வகுப்பெடுக்கிற
தகவல் வர கீர்த்தனா எழுந்துவிட்டாள்.
அங்கிருந்து கல்லூரிவரை, அவளை கொண்டு விட்டுத்
திரும்புமாறு யாரைக் கேட்கவும், அவளுக்கு மனமில்லை.
பஸ் நிறுத்தம் வரை கொண்டு விடச் சொல்லி, பஸ் ஏறி,
வகுப்புக்குக் கிளம்பிவிட்டாள்.
வரும் வழியில்தான், அவள் சுசித்ராவைப் பார்த்தது. கோன் ஐஸ்
ஒன்றை லாவகமாக உண்ட அவளோடு, அதேபோல அந்த சிறுமி
பவித்ராவையும்!
மனமெல்லாம் மற்ற 'கஸின்'களின் அரட்டையில் இருக்க, சும்மா
அசுவாரசியமாகப் பஸ்சிலிருந்து வெளியே பாரக்குப் பார்த்துதான்.
தூரத்தில் தெரிந்தது. கருகருவென்று பளபளத்த கூந்தல்தான்.
பஸ் அவர்களுக்கு நேர்கோட்டில் வந்து தாண்டும்போதுதான்
முகம் சரியாகத் தெரிய, கீர்த்தனாவுக்கு சரியான அதிர்ச்சி!
'கிளீன் கட்' என்றுவிட்டான் என்று அழுததும், அன்று இரண்டு
'மால்'களிலும், அந்த சிறு பெண் அழைத்தும் பதில் பேசாமல்,
முகத்தைத் திருப்பிக் கொண்டு தோழிகளோடு திரும்பி வந்ததும்,



எல்லாம் என்ன?
வெறும் நடிப்பாக இருக்க முடியாமல், பிறகு சுசி கலங்கிக் கண்ணீர்
வடித்தது, அவளுக்கு வசுந்தராவுக்குமே தெரியும்.
"நல்லவேளையாக நீங்கள் இருவரும் எனக்குப் பலமான தூண்
போலப் பக்க பலமாக இருந்து, அந்த இடத்தில் நான் உடைந்து
போய் கேவலப்பட்டு விடாமல் காப்பாற்றினீர்கள்!" என்று கையைப்
பிடித்துக் கொண்டு நன்றி கூடச் சொன்னாள்!
இங்கே பார்த்தால், யார் முன்னிலையில் அழுது கேவலப்பட்டு
விடாமல் காப்பாற்றினீர்கள் என்று சொன்னாளோ, அதே விபாகரன்
வீட்டுப் பெண்ணோடு ஜாலியாக ஐஸ்க்ரீம் மொக்கிக்கொண்டு
இருக்கிறாள்!
ஒருவேளை... ஒருவேளை இரு குடும்பங்களுக்கும் இடையே
சமாதானம் ஆகிவிட்டதோ?
சொல்லவில்லையே என்று தோன்றினாலும், சுசி சந்தோஷமாக
இருப்பதுதான் முக்கியம் என்று எண்ணி, செல்ஃபோனை எடுத்தாள்,
அவள்.
முதலில் கீர்த்தனா தொடர்பு கொண்டது, சுசித்ராவுடைய
தாயாரையே, அந்தப் பெண்மணிதானே, மகளைத் தேற்றுவதற்காக,
அவளை வரச்சொல்லி கண்ணீர் விட்டது!
எல்லாம் சரியாகிவிட்டிருந்தால், அதையும், அவள் மூலமாகவே
கேட்டு சந்தோஷப்படலாமே! அப்புறமாக சுசித்ராவிடம் வாழ்த்தும்
சொல்லலாம்!
டெலிஃபோனை எடுத்து தனத்திடம், கீர்த்தனா
சந்தோஷமாகத்தான் கேட்டாள் "சுசி, இப்போது எப்படி
இருக்கிறாள்?" என்று.
ஆனால் "பரவாயில்லை, கீர்த்திம்மா. உன் சினேகிதி சற்று
வேகமாகவே தேறி வருகிறாள். முகத்தில் இப்போதெல்லாம்
கொஞ்சம் சிரிப்பு கூடத் தெரிகிறது. வசுதாவும், நீயும் அவரவர் படிப்பு,
வேலையை ஒதுக்கி, சுசியோடு நேரத்தைக் கழிப்பது, அவளுக்கு
டானிக் மாதிரி இருக்கிறது என்று நினைக்கிறேன். தடவைக்குத்

இருக்கிறாள்மா. உனக்கு ரொம்பத் தட்டை அதிகத் தென்போடு இருக்கிறாள்மா. உனக்கு ரொம்பத் தாங்க்ஸ். வசுதாவிடமும் சொல்லும்மா. வைக்கட்டுமாடா, செல்லம்? தெரிந்தவர்கள் சுசிக்கு நல்ல ஒரு வரன் கொண்டு வந்திருக்கிறார்கள். பேசப் போக வேண்டும். சுசியோடு பேசிவிட்டு, அப்படியே போகாமல், ஒருநாள் இரண்டு பேரும் வீட்டுக்கு சாப்பிட வாருங்கள். 'பைமா" என்று முழுக்க முழுக்க வேறு விவரம் சொல்லிப் பேச்சை முடித்தாள் தனம்.

கீர்த்தனாவுக்கு பயங்கர அதிர்ச்சி!

அவளோடும் வசுதாவோடும் வெளியே செல்வதாகச் சொல்லிவிட்டு சுசித்ரா அந்தப் பெண் பவித்ராவோடு சுற்றுகிறாளா? இது, அந்தப் பவியுடைய மாமனுக்குத் தெரிந்து, அவனது ஆசியோடுதான் நடக்கிறதா?

அப்படித்தான் இருக்கும்? மற்றபடி சுசி மாதிரிப் பெண்ணை விடுவதற்கு, ஒருவனுக்கு எப்படி மனம் வரும்?

முதலில், ஏதோ ஒரு உணர்ச்சி வேகத்தில் தியாகி மாதிரி, ஏதோ சொல்லிவிட்டான். அப்புறம், ஐயோ விட்டுவிட்டோமே என்று ஏக்கம் வந்திருக்கும். நேரே வந்து கேட்க வெட்கப்பட்டு, அக்கா மகளைத் தூது அனுப்பி வளைக்கிறான் போல!

எதற்கும், வசந்தாவிடமும் ஒரு வார்த்தை கேட்டுவிட வேண்டும் என்று கீர்த்தனா எண்ணினாள். அவளிடம் கேட்பது என்று முடிவு செய்ததுமே, வசந்தாவை ஃபோனில் அழைத்தாள்.

"வேலை நேரத்தில் கூப்பிடுகிறாயேப்பா! அப்படி முக்கியமாக என்ன விஷயம்? சீக்கிரம் சொல்லு" என்று அவசரப்பட்டாள் அவள்.

அவளும் சுசித்ராவைப் பல நாட்களாக பார்க்கவில்லை என்று தெரிந்ததும், கீர்த்தனாவுக்கு முழுதாக விவரம் புரிந்துவிட்டது.

விபாகரனுக்கு சுசித்ராவை விட்டுவிட மனமில்லை. அதேபோல, சுசிக்கும் விபாகரன் மயக்கம் தலைக்கேறியிருக்கிறது! இல்லையென்றால், தோழியரோடு வெளியே போவது போலப் பெற்றோரிடம் பொய் சொல்லிவிட்டு, அந்த விபாகரன் குடும்பத்தோடு குலாவுவாளா?



சுசித்ராவைக் 'காந்தி' என்று, படிக்கும்போது கேலி செய்வதுண்டு. யாருக்காவது பிறந்தநாள், ஓர் அரை நாள் உடம்பு சரியில்லை என்று லீவு போட்டுவிட்டு சினிமாவுக்குப் போகலாம் என்றால், ஒத்துக் கொள்ளவே மாட்டாள். அப்படி என்ன பொய் சொல்லியாவது போவது? விடுமுறை நாளிலேயே பிறந்தநாள் கொண்டாட்டத்தை வைத்துக் கொள்ளலாம் என்று மறுத்து விடுவாள்.

அப்படிப்பட்டவளை இப்படிப் பெற்றோரிடம் பொய் சொல்லும் அளவுக்கு மாற்றியிருக்கிறான் என்றால், விபாகரன்தான் இப்போது முழு வில்லனாக, சுசித்ராவுடைய அந்த தோழிக்குத் தோற்றமளித்தான்.

இன்ன மாதிரி விஷயம், பேச வேண்டும் என்று கீர்த்தனா சொல்லவும், வேலை முடிந்து வந்து, அவளைச் சந்தித்த வசுதாவும், மற்றவளின் கருத்தையே ஆமோதித்தாள்.

"அந்த விபாகரன் ரொம்பக் கெட்டிக்காரராகத் தெரிகிறார்டி. சரியான குள்ளநரி! முதலில், பணம் போதாது, பெரிய பிள்ளைகளின் பொறுப்பு சுசிக்கு வேண்டாம் என்று ரொம்ப உத்தமர் மாதிரிச் சொல்லி திருமணத்தை நிறுத்தி, நல்ல பெயரை வாங்கிக் கொண்டார். அப்போது நம்மில் யாருக்காவது தோன்றியதா, எப்படியும் அவருடைய வீட்டில் அந்த இரட்டைச் சாவுக்கு பிறகு, உடனே திருமணத்தை நடத்த முடியாது. நின்றுதான் போகும் என்று. எப்படியும் கல்யாணத்தை தள்ளிப் போட்டுத்தான் ஆக வேண்டும்? அதையே பயன்படுத்தி, பெரிய தியாகிப் பட்டம் வாங்கிக் கொண்டார். அப்போதே சுசியை எப்படியும் வளைத்து விடலாம் என்று நிச்சயமாக இருக்கும்! இல்லை என்று சொல்லி, அவளை ஏங்க வைத்துவிட்டுப் பச்சைக்கொடி காட்டினால், அவளை தன் இஷ்டம் போல ஆட வைக்கலாம் என்கிற திட்டம்! அதேபோல அவளைப் பெற்றவர்களிடமே பொய் சொல்ல வைத்துவிட்டாரே! அதற்கு மேலும், பார்! அக்கா பிள்ளைகளும் சேர்ந்ததுதான் அவருடைய குடும்பம் என்று வலியுறுத்துவது போல, அக்கா பிள்ளைகளையும் அவளிடம் பழக வைக்கிறார். அந்தப்

சொன்னாய்?"
பெண்ணைத்தானே, சுசி கூடப் பார்த்ததாகச் சொன்னாய்?"
பெண்ணைத்தானே, சுசி கூடப் பார்த்ததாகச் புரியாமல், அந்த அக்கா

"ஆமாம் வசு. விபாகருடைய சூழ்ச்சி புரியாமல், அந்த அக்கா மகளோடு சிரித்துப் பேசியபடி, ஐஸ்க்ரீம் தின்றுகொண்டு இருக்கிறாள். நன்றாக வலையில் விழுந்து விட்டாள் என்று தோன்றுகிறது. இப்போது என்ன செய்வது? நடப்பது நடக்கட்டும் என்று இருக்கக்கூடாதில்லையா? என்னதான் தன்னை உயர்த்திக் காட்டிக் கொள்வதற்காக, விபாகரன் சொல்லியிருந்தாலும், அவர் சொன்னது சரிதானே? விதி வசத்தால், வயதானவரை இரண்டாம் தாரமாக மணந்து, பிள்ளை குட்டிப் பொறுப்பில் சீக்கிரமே கிழடு தட்டிப் போகிற பெண்களின் நிலைதானே, சுசிக்கும்? அதை எப்படிப் பொறுப்பது?"

"ஐயோ கட்டாயம் கூடாதுப்பா. எப்படி எவ்வளவு சீக்கிரமாக இதற்கு தீர்வு காண்பது என்றுதான் பார்க்க வேண்டும்" என்று ஓராண்டுக்கும் மேலாக, அலுவலகம் போய் வேலை பார்க்கும் அனுபவத்துடன் வசுதா, வழி முறைகளை ஆராயலானாள்.
"இப்போது நாம் சுசியைக் காப்பாற்றியாக வேண்டும், இதை மூன்று விதமாகச் செய்யலாம். ஒன்று சுசியிடம் நேராக விஷயத்தை எடுத்துச் சொல்வது..."

"அவள் காது கொடுத்துக் கேட்பாள் என்றா நினைக்கிறாய்? எதற்காகத் தியாகி மாதிரிக் காட்டிக்கொண்டு, முதலில் திருமணத்தை நிறுத்துவது போலப் பாவலாக் காட்டினாரோ, அதையே செய்கிறாரே என்று, அந்தப் பிள்ளைகளை மறுபடியும் பழக வைக்கும்போதே, அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும். அதுதான் இல்லை என்றால், பெற்றோரிடமாவது, என்ன செய்வது என்று கேட்டிருக்க வேண்டும். அதை விடவும் மேலாகப் பெற்றவர்களிடமே பொய் சொல்லத் துணிந்துவிட்ட பிறகு, அவளிடம் பேசுவதில் ஏதாவது பயன் இருக்கும் என்றா நினைக்கிறாய்?" என்று கேட்டாள் மற்றவள்.

"இருக்காதுதான். இப்போது அக்கா மக்களை பழக விடுவதற்கு, அவளிடம் ஏதாவது ஓர் உருப்படாத காரணம் காட்டியிருப்பாரே.



அதையே வேத வாக்காய் நம்பி, நம்மிடம் சொல்லுவாள். மறுத்து, நாம் என்ன சொன்னாலும், அவள் மண்டையில் இப்போது ஏறும் என்று எனக்கும் தோன்றவில்லை. எனவே, அதைவிடு. அடுத்தது, சுசி வீட்டு ஆன்ட்டி, அங்கிளிடம் சொல்வது. அவர்கள் நம் பேச்சை நம்புவார்கள். ஆனால், விபாகரனை மறந்துவிடு என்று அவர்கள் சொன்னாலும் சுசி கேட்பாளா? துணிந்து, பெற்றோரிடம் போய் சொல்லுகிறவள், அந்தப் பொய் வெளிப் பட்டுவிட்டால் என்ன செய்வது என்று, அதற்கும் ஓர் அதிரடி முடிவு யோசித்து வைத்திருக்க மாட்டாளா? குறைந்த பட்சமாக, விபாகரன், அவளை அதற்கும் தயார்ப்படுத்தி வைத்திருப்பார்தானே? இப்போது, சுசி மயக்கத்தில் இருப்பவள், கீர்த்தி. அறிவுபூர்வமான யோசனையை, இப்போது அவளிடம் எதிர்பார்க்க முடியாது" என்றாள் வசுதா.

"ஓ!" என்று தோழியின் வார்த்தைகளைச் செரிமானம் செய்தாள், கீர்த்தனா. பிறகு "ரைட். அதை விட்டுவிடுவோம். மூன்று வழிகள் என்றாயே வசு, மற்றவை என்ன?"

"அடுத்தது, சுசியுடைய பெற்றோரிடம் விஷயத்தைக் கொண்டு செல்வது. இப்போதைக்கு, அவர்களுக்கு மகளது விஷயம், எதுவுமே தெரியாது. தெரிந்து தடுத்தாலும், நாம் சற்றும் அறிந்திராத, இந்தப் பொய் சொல்லும் சுசித்ரா, பழைய அதிரடி முடிவையே செயலாற்ற முனைந்தால், யாரால் அவளைத் தடுக்க முடியும்? அவளது வயது, இருபத்தியிரண்டு! அதையும் யோசிக்க வேண்டியிருக்கிறது"

ஒரு பெருமூச்சுடன், "இன்னும் அந்தக் கடைசி வழி என்னப்பா?" என்று கேட்டாள் கீர்த்தனா.

"சண்டைக்காரன் காலிலேயே விழுவது!"

"என்னது? மிஸ்டர் விபாகரிடமே, சுசிக்காகக் கேட்பதா? திட்டம் போட்டு வேலை நடத்துகிறவர். அவளும் அவரது விருப்பம்போல வளைந்துவிட்ட பிறகு, நாம் கேட்கிறோம் என்று அதை நிறுத்தி விடுவாரா? நடக்கிற காரியமா?" என்று நம்பிக்கையின்றிக் கேட்டாள் கீர்த்தனா.

"கேட்கிற விதமாய்க் கேட்போம், கீர்த்தி! மிஸ்டர் விபாகரனுக்கு

தன்னை நல்லவனாகக் காட்டிக் கொள்ளும் ஆசை நிறைய இருக்கிறது. அதை, அந்த உத்தம சிகாமணித்தனத்தைத்தான், நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சுசித்ராவின் மகிழ்ச்சிதான் முக்கியம் என்று சொல்லி பெரிய தியாகி மாதிரிக் காட்டிக் கொண்டாய்! இப்போது என்ன செய்கிறாய்! என்று நேரடியாகக் கேட்போம். இப்போதும் தனக்கு ஒன்றுமே தெரியாது, சுசித்ராவாகத்தான்... என்று விபாகரன் ஏதாவது கதை சொல்லலாம்! நூற்றில் ஒரு வாய்ப்பாக, அது மெய்யயாகவும் இருக்கலாம்! முதல் பார்வையிலேயே, அவரிடம் சுகி எப்படி மயங்கிப் போனாள் என்று நமக்கும் தெரியும்தானே? அப்படியே இருந்தாலும்..."

"வசு அது நிஜமாக இருந்தால், நாம் தலையிடுவது பிடிக்காமல், சுசி நம்மை வெறுத்துவிட மாட்டாளா, வசுதா? கவலையாக இருக்கிறதே!" என்று அஞ்சினாள் கீர்த்தனா.

ஒருகணம் மௌனமாக இருந்துவிட்டு, வசுதா சொன்னாள் "சுசி எப்படிப்பட்டவள் என்று நம்மை விட யாருக்குத் தெரியும் கீர்த்தி? உனக்கு கால் ஒடிந்தபோது, ஒரு செமஸ்டருக்குப் படிப்பதைக் கூட ஒதுக்கி, உன் கூடவே இருந்து பார்த்துக் கொண்டவள். காதல், காதல் என்றவன், ஒரு பணக்காரப் பெண்ணுடன் திருமணம் என்று பத்திரிகைக் கொடுத்தபோது, தூக்க மாத்திரையைப் போட்டுக் கொண்டு வாயைப் பிளக்க இருந்தேன். என்னை தேற்றி மனுஷியாக்கியது, அவள்தானே? இப்போது நமக்கு அவள்தான் முக்கியம். அவள் நம்மை வெறுப்பது அல்ல. இப்போது சுசிக்கும் நம்மைப் போல இருபத்தியிரண்டே வயதுதான். ஆனால் இன்னும் பத்து ஆண்டுகளில், அந்தப் பெண்ணுக்கும் திருமணம் முடிக்க வேண்டியிருக்கிறது. அடுத்து குழந்தை பேறு அது இது என்று... முப்பத்தியிரண்டு வயதில், பொறுப்பில் முதுகு வளைந்து, நம் சுசித்ரா பாட்டிக் கிழவி ஆவதா? அதைவிட, அவள் நம்மை முழுதாக வெறுத்தாலும் பரவாயில்லை, கீர்த்தி! நம்மால் ஆன முயற்சியை நாம் செய்து பார்ப்போம்!" என்றாள் அந்த உத்தமத்தோழி.

மற்றவளும் ஒப்புதலாகத் தலையாட்ட, இருவருமாக



விபாகரனை, அவன் பணி புரியும் இடத்துக்கே போய்ச் சந்தித்துப் பேசினார்கள்.

சுசியும், பவித்ராவும் சந்தித்துப் பேசுவது, விபாகரனுக்கு அதிர்ச்சியே என்றால், முதலில் தோழிகளால் நம்ப முடியவில்லை.

சுசித்ராவுடைய தாயாரின் பேச்சை வைத்துப் பார்த்தால் இந்த சந்திப்பு அடிக்கடி நடந்து கொண்டிருக்க வேண்டும். அவன் ஒரேடியாகத் தெரியாது என்றால் எப்படி நம்புவது?


Statement about ownership and other particulars about 'AZHAGIYA MANGAIYAR NOVEL' monthly chennai to be published in the first issue every year after lastday of February.

**FORM IV**

**(See Rule - 8)**

1. Place of Publication : Chennai
2. Periodicity of its Publication : Monthly
3. Printer's Name : Mr.SP.Ramu
   Nationality : Indian
   Address : Baskar Achakam, No.16, Visaka Thottam, Saidapet, Chennai - 15
4. Publisher's Name : Mr.SP.Ramu
   Nationality : Indian
   Address : 6/84, Mallan Ponnappan St, Triplicane, Chennai - 5
5. Editor's Name : Mr.SP.Ramu
   Nationality : Indian
   Address : 6/84, Mallan Ponnappan St, Triplicane, Chennai - 5

I.SP.Ramu hereby declare that particulars given above are true to be best of my knowledge and belief.

SP. RAMU
Signature of publisher

Date:28-2-2013

இருவரின் முகங்களையும் பார்த்துவிட்டு, இந்தச் சந்திப்பு பற்றி, அவர்களுக்கு எப்படித் தெரியும் என்று விசாரித்தான் விபாகரன்.

பஸ்ஸிலிருந்து பார்த்த விவரத்தை கீர்த்தனா சொன்னாள் "நானே, கண்ணாலேயே பார்த்தது. மற்றவர்கள் யாரும், சொல்லி அதை வைத்துக் கூறவில்லை. இது அடிக்கடி நடப்பது போல, பார்லரில் உட்கார்ந்து ஜாலியாக ஐஸ்க்ரீம் சாப்பிட்டபடியே சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்" என்றாள்

"பார்த்தது. அந்த ஒரு முறைதானா?"

ஒருகணம் தயங்கி "பா...ர்த்தது. அந்த ஒரு தரம்தான். ஆனால் தனம் ஆன்ட்டியிடம் எங்களைச் சந்திக்கப் போவதாகப் பொய் சொல்லிவிட்டு. அவர்கள் அறியாதபடி, சுசி வேறு யாரைப் போய்ப் பார்க்கப் போகிறாள்? அவர்களுக்குத் தெரியக் கூடாத எங்கேயும், அவள் போக மாட்டாளே!" என்றாள் கீர்த்தனா.

"சித்து பொய் சொன்னாளா? என்னால் நம்ப முடியவில்லையே!" என்று இப்போது விபாகரனுமே திகைத்தான்.

"நிச்சயமாகத் தெரியுமா?"என்ற கேள்வி வேறு கேட்கவும், தோழியர் இருவருக்கும் கோபம் வந்தது.

"பாருங்கள் சார், வேலையைப் படிப்பை ஒதுக்கி வைத்துவிட்டு, நாங்கள் இருவரும் சுசியைச் சந்தித்து தேறுதல் சொல்வதால்தான், அவள் தேறியிருப்பதாகச் சொல்லி, என்னிடம் நன்றியே தெரிவித்தார்கள்! சும்மா சுசியோடு சுற்றிவிட்டு, அவரவர் வீட்டுக்குப் போய்விடாமல் அவளோடு சேர்ந்து. ஒருநாள் அவர்கள் வீட்டுக்குச் சாப்பிட வருமாறு அழைக்க வேறு செய்தார்கள்! இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்!" என்று சவால் விடுவது போலக் கேட்டாள் கீர்த்தனா.

இன்னமும் விபாகரன் முகத்தில் நம்பாத தன்மை தெரியவும், வசுதா வேறு மாதிரிப் பேசினாள். "பாருங்கள் சார், சுசிக்கும் உங்களுக்கும் திருமணம் நிச்சயமானபோது, எங்கள் அருமைத் தோழியுடைய கணவராகப் போகிறவர் என்று, உங்களிடம் எங்களுக்கு ரொம்பப் பிரியம் ஏற்பட்டிருந்தது. ஒரு துர்ச் சம்பவத்தின்



பின், நீங்கள் திருமணத்தை நிறுத்தியபோது, அவள் பட்ட வேதனையைப் பார்த்து, உங்கள் மேல் ரொம்பவும் கோபம் வந்தது. ஆனால் எப்படிப்பட்ட உன்னதமான எண்ணத்தோடு திருமணத்தை நிறுத்தினீர்கள் என்று தெரிந்தபோது, உங்கள்மேல் எவ்வளவு மரியாதை உண்டாயிற்று, தெரியுமா? இப்போது அதையெல்லாம் நாசம் பண்ணுகிற மாதிரியான சம்பவங்கள் நடக்கிறபோது, அதைத் தடுத்து நிறுத்துவீர்கள் என்று வந்தால், நீங்கள் நம்பக் கூட மாட்டேன் என்கிறீர்களே! உங்களைப் பற்றி என்ன சார், எண்ணட்டும்? நீங்கள் நிஜமாகத்தான் நம்பவில்லையா? அல்லது..." என்று கேட்டாள்.

அவளை நேராகப் பார்த்துவிட்டு, விபாகரன் பதில் சொன்னான் "நீங்கள் இருவரும் என்னை எப்படி நினைத்தாலும், என்னைப் பொறுத்தவரை என் குறிக்கோள் சுசித்ரா கஷ்டப்படக் கூடாது என்பதுதான். எங்களுக்கு நடக்க இருந்த திருமணத்தை நான் நிறுத்திய காரணமும், அதுதான். அந்தக் காரணம், என்றென்றைக்கும் அப்படியேதான், இருக்கப் போகிறது எனும்போது, அதை மாற்ற நான் எதையுமே செய்ய மாட்டேன் என்பது நிச்சயமே! ஆனால்... சுசித்ரா வீட்டில் வேறு மாதிரிச் சொல்லிவிட்டு வந்து, பவியைச் சந்திக்கிறாள் என்பது, எனக்கும் செய்திதான். நீங்கள் நம்பினாலும், நம்பாவிட்டாலும், அதுதான் உண்மை" என்றான்.

"பின்னே, நான் கண்ணால் பார்த்ததையும், தனம் ஆன்ட்டி நினைத்துக் கொண்டிருப்பதையும் சொன்னோமே. அதற்கு என்ன விளக்கம்?" என்று வினவினாள் கீர்த்தனா.

"அதை நீங்கள் சித்... உங்கள் தோழியிடம் கேட்கவில்லையா?" என்றான் அவன் யோசனையோடு.

"எப்படிக் கேட்பது?" என்று வெடுக்கெனக் கேட்டாள் வசுதா "இந்தச் சந்திப்புகள், உங்கள் ஆதரவோடு நடக்கவில்லை என்று எங்களுக்கு என்ன நிச்சயம்? பெற்ற தாயிடம் பொய் சொல்லும் அளவுக்கு சுசி போயிருக்கிறாள். எவ்வளவு அருமையான பெண். இந்த அளவுக்குப் போவது என்றால், இதற்கு அடுத்த அடி எடுத்து

வைக்கவும், துணிந்திருப்பாளோ என்ற அச்சம் எங்களுக்கு, ஆனால்தான், உங்களிடம் கேட்டுப் பார்க்கலாம் என்று வந்தோம்" என்றாள் அவள்.

"இதற்கு அடுத்த அடியாக என்ன...." என்று தாடையைத் தடவி விட்டுக் கொண்டவன் சட்டென நிமிர்ந்தான் "இப்போது கொஞ்சம் புரிகிறது. ஆனால் நீங்கள் அஞ்சுவது நடக்க வேண்டுமானால், அதற்கு இன்னொரு கையும் சேர்ந்து தட்ட வேண்டும்! கவலை வேண்டாம். இந்த சந்திப்புகளை, நான் நிறுத்தி விடுகிறேன். தைரியமாகப் போங்கள்" என்று எழுந்தான் விபாகரன்.

அவர்களும் எழவும், தொடர்ந்து பேசினான் "ஆனால் ஒன்று அங்கிள், ஆன்ட்டியிடம் சொல்லி சுசித்ராவுக்குச் சீக்கிரமாக நல்லபடியாக ஒரு திருமணத் தைச் செய்யச் சொல்லுங்கள். அது நடந்து விட்டால் அதன்பின், இதுபோன்ற அசட்டுத் தனங்கள் எதையும் செய்ய தோன்றாது" என்றான்.

இரு பெண் களும் ஒருவரை ஒருவர் பார்த் துக் கொண்ட னர்.

"மிஸ்டர் விபாகரன்... நாங்கள் இது விஷயமாக உங் களைப் பார்க்க வந்தது, சுசிக்குத் தெரியாது..."

"கவலைப்படாதீர்கள். உங்கள் பெயர் வராமல் கவனித்துக் கொள்கிறேன். அவர்கள் இருவரையும் எங்கே பார்த்தீர்கள்? எந்த நேரத்தில்?" என்று விவரம் கேட்டறிந்தான் விபாகரன்.

நேரம் பற்றிக் கீர்த்தனா சொன்னதுமே, இது நிர்மலுக்கும் தெரியாமலே நடக்கிறது என்பது, அவனுக்குப் புரிந்தது. ஆனாலும் என்ன பயனற்ற பைத்தியக்காரத்தனம் என்று நினைத்தான்.

"அங்கே நானாகப் பார்த்த மாதிரியே சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் இருவரும், சுசிக்கு எப்படிப்பட்ட தோழிகள் என்று எனக்கும் தெரியும். அதில்லாமல் இவ்வளவு முயற்சி எடுக்க மாட்டீர்கள். எப்போதும் இந்தஅன்புடனேயே அவளிடம் நடந்து கொள்ளுங்கள். இப்போது நிம்மதியோடு கிளம்புங்கள்" என்று கரம் குவித்தான்.

திரும்பும் வழியில் "சே, மனிதர் நல்லவர்தான்ப்பா" என்றாள் கீர்த்தனா



"பொறு. அவர் சொன்னதை செய்து முடிக்கட்டும். அப்புறமாக, முழுதாக நம்பலாம்" என்றாள் வசுதா, சூடு பட்ட பூனையாக.

கீர்த்தனா சொன்னது அப்பட்டமான உண்மை என்று நேரடியாகக் கண்டறிய, விபாகரனுக்கு மூன்று நாட்கள் பணியில் அரைநாள் விடுப்பு எடுக்கும்படி நேர்ந்தது.

அவனுடைய அக்கா மகளும் சுசித்ராவும் சந்தித்த வேளை, நிர்மல் டென்னிஸ் பயிற்சியில் இருக்கும் சமயம் என்பதால், சரியாக அந்த நேரத்தில் அந்த பகுதிக்கு வந்து காத்திருந்தான்.

இரண்டு நாட்கள் விருதாவாகக் காத்திருந்துவிட்டு, வீட்டுக்குப் போனான், மூன்றாவது நாள், சுசித்ராவின் ஸ்கூட்டர் கண்ணில் பட்டது, பின்னால் பவித்ரா அமர்ந்திருந்தாள்.

எவ்வளவு சந்தோஷமாகப் பார்த்திருக்க வேண்டிய காட்சி என்று ஏங்கிய மனதை அடக்கிக்கொண்டு, மறைவாகவே இருந்து கவனித்தான்.

இன்றைக்கு இருவரும் பழச்சாறு குடிக்கப் போனார்கள். ஐஸ் போட வேண்டாம் என்று வெறும் சாறை வாங்கி, சிரித்துப் பேசியவாறே அவர்கள் அருந்திய விதம், இது அடிக்கடி... அல்லது, அவ்வப்போது நடப்பதே என்பதை பறை சாற்றியது.

இதற்காகப் பெற்றவர்களிடம் பொய் வேறு சொல்லிவிட்டு, சுசித்ரா வந்திருக்கிறாள் என்றால், அவளுடைய தோழிகளின்கோபம் நியாயமானதே.

ஒரு நண்பனின் பைக்கை இரவல் வாங்கி வந்திருந்தவன், தூசிக்காக மூக்கை மறைப்பது போலக் கைக்குட்டையால் கட்டியிருந்ததால், அவன் பின்தொடர்ந்து சென்றதை, பெண்கள் இருவருமே கண்டுபிடிக்கவில்லை.

பவித்ரா வீட்டுக்குள் செல்லும்வரை பார்த்திருந்துவிட்டு, ஸ்கூட்டரைக் கிளப்ப முயன்ற சுசித்ரா வழியை மறைத்து நின்ற விபாகரனைப் பார்த்ததும் திகைத்து விழித்தாள்.

அந்த எதிர்பாராத சந்திப்பில், தன்னை மீறி மனம் நெகிழத் தொடங்கியவளை, சற்றும் நியாயமற்று அவனது குற்றச்சாட்டு,

ஆத்திரத்துடன் நிமிர வைத்தது.



## என்னவளே, காதல் என்பது.... 7

இதற்கு எதிர்காலம் கிடையாது என்று தெரிந்திருந்தபோதும், விபாகரனோடு ஏதோ ஒரு தொடர்பு என்பதே சுகமாக, அவனுடைய அக்கா மகளுடனான சந்திப்பை நீட்டித்துக் கொண்டிருந்தவள் சுசித்ரா. திடுமென அவனே எதிர்வந்து நிற்கவும், சில கணங்கள், அவளுக்கு எதுவும் புரியாத நிலைப்பாலவே இருந்தது!

ஆனால் உடனேயே, அவனது அருகாமைக்காக ஏங்கியிருந்த அவளது கண்ணும் மனதும் குளிர, "விபு!" என்றாள் ஆவலாக.

ஏற்கனவே அவளைப் பார்த்து, இந்தத் தவிப்பை அனுபவித்து விட்டதாலோ, என்னவோ விபாகரனால் உணர்ச்சி வசப்படாமல் பேச முடிந்தது.

"இதோ பார், உன்னிடம் கடுமையாகப் பேச, எனக்கு மனமில்லை. ஆனால் இது என்ன பைத்தியக்காரத்தனமான முயற்சி? உனக்கே அசட்டுத்தனமாகத் தெரியவில்லை?" என்று சிறு கோபத்துடன் கூடிய கண்டிப்பான குரலில் பேசினான்.

அவளுக்கு மெய்யாகவே புரியவில்லை. மலர்கிற பருவத்தில் இருக்கும் ஒரு சிறு பெண்ணுக்கு அதிலும் சமீபத்தில் தாயை இழந்தவளுக்கு பெண்ணுக்குப் பெண்ணாக உதவுவதில், அசட்டுத்தனம் எங்கிருந்து வந்தது? அது எப்படிப் பைத்தியக்காரத்தனம் ஆகும்?

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் விபா? எதுவானாலும் எனக்கு சுத்தமாகப் புரியவில்லையே" என்றாள் மெதுவாக.

இழுத்துப் பிடித்திருந்த அவனது பொறுமை மறைந்தது.

சுசித்ரா ஒன்றும் முட்டாளில்லை என்பது, அவனுக்குத் தெரியும். வீட்டில் பொய் சொல்லத் துணிந்தவள், அகப்பட்டுக் கொண்டதும், அவனிடம் நடிக்கிறாள் என்று நினைத்தான்.

எனவே, ஆத்திரத்தை வெளிப்படையாகக் காட்டி "என்ன



புரியவில்லை? பவியை நீ கூட்டி வந்து விட்டதைப் பார்த்துவிட்டுத்தான் நான் பேசுகிறேன் என்பதைதெரிந்து கொண்டு, மேலே கதை சொல்லு. அவளோடு உனக்கு எதற்கு இந்தப் பழக்கம்? இந்த நெருக்கத்தால், உனக்கோ, அவளுக்கோ, எந்த லாபமும் கிடைக்கவே போவதில்லை. கடைசியில், இன்னமும் அதிகமான ஏக்கம்தான் மிஞ்சப் போகிறது. எப்படியும் நாம் இணைந்து வாழ்வது, முடியவே முடியாது. அப்படியிருக்க உன் வீட்டிலும் பொய் சொல்லிவிட்டு இங்கே வந்து, பவிக்கு என்னை ஏமாற்ற வழி சொல்லிக் கொடுத்து... சேச்சே, உன்னிடம் நான் இதை எதிர்பார்க்கவே இல்லை, சுசி. இனியேனும் கொஞ்சமாவது மூளை உள்ளவளைப் போல யோசித்து, இந்த அசட்டு முயற்சியை விட்டுவிடு" என்று தீர்மானமான குரலில், கூறி முடித்தான்!

ஒரு வழியாக விபாகரனின் என்ன எண்ணி பேசுகிறான் என்று, சுசித்ராவுக்கு புரிந்தது.

உண்மையே! அவனோடான சிறு தொடர்பு என்கிற உணர்வினாலேயே பவித்ராவை சட்டெனப் பிரிந்துவிட, அவளுக்கு மனம் வரவில்லை! நிஜம். ஆனால் அவள் தன்மானமற்றுப் போய்விடுவாளாமா?

அவளாகச் சென்று, அவனுக்கு மறைத்து, அவனுடைய அக்கா மகளைப் பிடித்து, அவள் மூலமாக அவனை மடக்க முயற்சிப்பாளாமா?

இதில் அவள் பொய் வேறு சொன்னாளாம். அதுவும், அவள் வீட்டில்! என்ன கதை! ஆனால் அதில்தானே, தொடங்குகிறான்!

முதலில் அதில் மடக்க வேண்டும்!

ஆத்திரத்தில் முகம் சிவக்க, "என் வீட்டில் நான் என்ன பொய் சொன்னேன், என்கிறீர்கள்? இது, உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள் அவள்.

சிநேகிதிகளைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்று, இதற்கான பதிலை அவன் ஏற்கனவே யோசித்து வைத்திருந்தான். எனவே "இன்றைய நிலையில், பவியை சந்திக்க வருவதாக, உன் வீட்டில்

வெளிப்படையாகக் கூற முடியாது. உன் தோழிகளையோ, வேறு வேலை இருப்பதாகவோ, ஏதாவது பொய்தானே, சொல்லியிருப்பாய்?" என்று தன் ஊகம் போலக் காட்டிக் கொண்டான்.

"ஆக, எல்லாம் வெறும் கற்பனை!" என்றாள் அவள். ஏளனமாக "முதலில் இதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஏதாவது பொய்க் காரணம் காட்டித்தான் வீட்டை விட்டு வெளியே வர முடியும் என்கிற அளவுக்கு, என் பெற்றோர் கட்டுப்பெட்டிகள் அல்ல! நான் தப்பு செய்ய மாட்டேன் என்கிற நம்பிக்கை அவர்களுக்கு நிறையவே உண்டு..."

"அப்படியானால், பவியைச் சந்திக்க வருவதையும் ஒத்துக் கொள்வார்கள் என்கிறாயா?" என்று அவள் பேச்சில் இடையிட்டு, இப்போது ஏளனமாகக் கேட்டது, விபாகர்.

"ஏன் வந்தேன் என்று தெரிந்தால் நிச்சயமாக ஒத்துக் கொள்வார்கள்!" என்று குரலில் அழுத்தத்துடன் கூறினாள் சுசித்ரா.

"அப்படியானால், இப்படி என்று, இதுவரை சொல்லவில்லைதானே? உண்மையைச் சொல்லாமல் மறைப்பதும், பொய்க்குச் சமம்தானே?"

"வீணே, மனதை வேதனைப்படுத்த வேண்டாம் என்று கூடச் சொல்லாமல் இருந்திருக்கலாமே! வேலை முடிந்த பிறகு சொல்லிக் கொள்ளலாம் என்று நினைத்தேன்!"

"அப்படி என்ன மகா மகா வேலை?" என்று நம்பாததை வெளிக் காட்டியே, வினவினான் அவன்.

கேட்டாயல்லவா? வாங்கிக் கட்டிக் கொள் என்று உள்ளூரக் கறுவியபடி சுசித்ரா தெரிவித்தாள் "ஒரு வழியாகக் கேட்டு விட்டீர்கள் அல்லவா? தாராளமாகச் சொல்கிறேன். நான் ஒன்றும் வேண்டாம் என்கிற உங்கள் வீட்டுப் பின் வாயில் வழியே திருட்டுத்தனமாக உள்ளே நுழைவதற்காக, உன் அக்கா மகளைப் பயன்படுத்த முயற்சிக்கவில்லை. அவளுக்கு ஒரு ஃபோன் கூட, நானாகச் செய்தது கிடையாது. அவள்தான் ஒருநாள் என்னைக்



கூப்பிட்டு, அழுதாள். அவளது வயது காரணமாக, பிரியம், நெருக்கம் உள்ள ஒரு பெண்ணின் ஆலோசனை, அறிவுரை அவளுக்குத் தேவைப்பட்டது. சில முக்கியமான பொருட்களும், ஊரிலிருந்து வந்ததும், உன் அக்கா கடைக்கு அழைத்துப் போய் வாங்கித் தருவதாகச் சொன்னது. விதி வேறு விதமாய் விளையாடி விட்டதால், அது நடக்காமல் போய்விட்டது. என்றாலும், அவளது தேவை தவிர்க்க முடியாதது என்பதோடு, உடனடியானதும் என்பதால், நான் வந்து, வாங்கிக் கொடுத்தேன். வேறு மாதிரியான சதி, சூழ்ச்சி எதுவும் கிடையாது!" என்று பொரிந்து கொட்டியவள், கைப்பையைத் துழாவி சிலபல காகிதங்களை எடுத்தாள் "அப்போதே கிழித்துப் போட்டிருப்பேன். ஆனால் பவிக்கும் தன்மானம் அதிகம் இதில் ஒன்றைக் கூட தொலைத்து விடக் கூடாது. மாமா கைச்செலவுப் பணம் தரத்தரத் திருப்பி வாங்கிக் கொள்ள வேண்டும்' என்று என்னிடம் பிராமிஸ் வாங்கியிருக்கிறாள். இதோ அந்த ரசிதுகள் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று அவன் கையில் திணித்தாள்.

"இன்னும் சந்தேகமாக இருந்தால், இப்போதே போய் பவியிடம் கேளுங்கள். ஆனால் உங்கள் வீட்டுக்கு நானும் உங்களோடு வர வேண்டியிருக்கும். எப்படியேனும் விவரம் தெரிந்து நீங்கள் கேட்டால், நானே வந்து விளக்கம் சொல்வதாகவும், அவளுக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன். சொல்லுங்கள் என்ன செய்யலாம்? உங்கள் வீடு வரை வரட்டுமா?" என்று நிமிர்ந்து கேட்டாள் சுசித்ரா.

முகம் கன்றிச் சிவக்க, விபாகரனின் தலை தாழ்ந்துவிட்டது.

அவசரப்பட்டு குற்றம் சாட்டியிருக்கக் கூடாது. அவன் அறிந்த சித்து எவ்வளவு ரோஷக்காரி என்று, அவனுக்குத் தெரியும்தானே?

"சாரி அவசரப்பட்டு பேசிவிட்டேன்" என்று தாழ்ந்து போனவன், பில்களை பார்க்கும்போதே மனதால் கூட்டி பணத்தை எடுத்துக் கொடுத்தான்.

அதை வாங்காமலே "பணத்துக்காக, உங்களிடம் பில்லைத் தரவில்லை. என்னை நம்பாமல், தவறாக உள்ளர்த்தம்

கற்பிக்கிறீர்களே, அப்படியில்லை என்பதற்கான சான்று என்றுதான் கொடுத்தேன். அப்படி, வேண்டாம் என்று போகிறவரை எப்படியாவது வளைத்துப் பிடிக்கிற அளவுக்கு நான் ரோஷம் கெட்டவளில்லை என்று காட்டத்தான். மற்றபடி, பண விஷயமாக பவியே தருவதாகச் சொல்லியிருக்கிறாள்" என்றாள் சுசித்ரா.

ஆனால் அக்கா மகளுக்காக அவள் செலவு செய்த பணத்தைத் திருப்பித் தருவதில் அவன் பிடிவாதமாக இருந்தான்.

தன் பொறுப்பாய் வளர்கிற பெண்ணுக்கு, தானே வேண்டாம் என்று விலக்கிய இவள் செலவு செய்வதாவென்று, அப்போதைக்கு அடி வாங்கிய அவனது தன்மானம் எதிர்த்தது போலும்.

எனவே, அவன் பில்களைக் கொடுத்த மாதிரியே, பணத்தை சுசித்ராவின் கையைப் பிடித்துத் திணித்தான்.

"பரவாயில்லை, பணத்தை வைத்துக்கொள். இன்றைய நிலையில், அவளுக்கு வாங்கிக் கொடுக்க உனக்கோ, உதவி கேட்க அவளுக்கோ எந்த விதமான உரிமையும் கிடையாது. அதுபுரியாத அளவுக்கு, பவித்ரா ஒன்றும் பச்சைக் குழந்தை இல்லை. அவள்தான் தாயை இழந்த ஏக்கத்தில் குழம்பிப்போய் உன்னை கூப்பிட்டாள் என்றால், நீயேனும் நிலவரத்தைச் சொல்லி, அவளைத் திருப்பி அனுப்பியிருக்கலாம். அது எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். அல்லது நீ எனக்குச் சொல்லி, வாங்கி கொடுக்கச் சொல்லியிருக்கலாம். அவள் இப்படி உன்னிடம் ஒட்ட நேர்ந்திராது. பவி உன் தோளில் சாய்ந்து நின்றதை நான் பார்த்தேன். பயனற்ற ஒட்டல், முதலிலேயே விலக்கிவிட்டிருந்தால், அந்த ஒட்டலைத் தவிர்த்திருக்கலாமே!" என்றபோது அவன் குரலில் மீண்டும் கண்டனம் தொனித்தது!

"ச்சு, என்ன விபா, நீங்கள் புரியாமல் பேசுகிறீர்கள்! இது போன்ற உதவி கேட்கும்போது, எந்தப் பெண்ணும் செய்ய மறுக்க மாட்டாள். அதுவும் பார்த்துப் பழகிய பெண் கேட்கும்போது, எப்படி மறுக்க முடியும்?" என்று அலுப்பும் எரிச்சலுமாக கூறினாள் சுசித்ரா.

எல்லாம் விலக்கிய பிறகும், திரும்பத் திரும்ப, அவளிடமே குற்றம்



காண்கிறானே என்ற ஆத்திரம் அவளுக்கு.

ஆனால், அவனுக்கும் பழி போட ஓர் இடம் தேவைப்பட்டது போலும்!

"ஆனால், உன்னிடம் கேட்பானேன்? அதைவிட, அவளே என்னிடம் கேட்டிருக்கலாமே, நானே வாங்கிக் கொடுத்திருப்பேனே" என்றான் விடாமல்.

பொறுமையிழந்து "உளறுவதற்கும் அளவிருக்க வேண்டும்!" என்று வெடித்தாள் சுசித்ரா.

திகைப்பை மறைத்து "உளறல் என்ன? அவளுக்குத் தாய் மாமா, தந்தை தாய் எல்லாம் இப்போது நான்தானே? நெருங்கிய உறவும் நான் மட்டும்தான். உரிமையோடு என்னிடம்தானே அவள் கேட்க வேண்டும்?" என்றான் அவன்.

அக்கா மகளுக்காக எதைச் செய்யவும் தயாராக இருக்கும் தன்னை விட்டு, பிரிய வேண்டிய ஒருத்தியிடம் போனாளே, அதுவும் வேண்டாம் என்று அவனாகவே சொல்லிப் பிரிந்தவளிடம், அக்கா மகள் உதவி கேட்டுப் போனாளே, என்று பெரிய தலையிறக்கமாக உணர்ந்தான் அவன்.

கூடவே வலியையும், உரிமையோடு அத்தை என்று கேட்டாள் என்று எவ்வளவு பெருமைப்பட்டிருக்கலாம்... தவிர்க்க முடியாமல் தோன்றிய கற்பனைகளின் வலி.

அவள் செய்தது நியாயமல்ல என்று ஆகிவிட்டால் சரி, போகிறது போ என்று மன்னிப்பதில் வலி குறைந்துவிடும் என்று எண்ணினான் போலும்.

ஆனால், அவனை இன்னமும் ஏளனமாகப் பார்த்தாள் சுசித்ரா "கேள்வி பிரமாதம்!" என்றாள் எகத்தாளமாக. "சொல்லுங்கள் விபா. உங்கள் அக்காதானே, உங்களுக்கு நெருங்கிய உறவு? பதினாலு பதினைந்து வயதில் ஜ... வந்து, உள்ளாடை வாங்கவும், ஷேவிங் தொடர்பாகவும் அந்த அக்காவிடமா விவரம் கேட்டீர்கள், அடுத்தவரான உங்கள் அத்தானிடம்தானே? அதுதான் நடந்தது?" என்றாள் கிண்டலாக.

விபாகரனின் முகம் மறுபடியும் கன்றிச் சிவப்பதைப் பார்த்துக் கொண்டே, அவள் தொடர்ந்தாள். "அதுபோல பவியின் வயதில் பெண்களுக்குப் பல பிரச்சினைகள் தோன்றுவதும் இயல்பு. இப்போது சொல்லுங்கள். இந்தப் பெண்கள் பிரச்சினையை எல்லாம், அவள் உங்களிடம் எப்படிக் கேட்பாள்?"

"ஓ!" என்று அவளது பார்வையைத் தவிர்த்து எங்கோ பார்த்தான் அவன்.

இதுபோன்ற உதவிகளை, பவித்ரா அவனிடம் கேட்க முடியாதுதான். ஆனால் அதற்காக, அவன் என்ன செய்ய முடியும்? அவனுக்கு என்று, இனி ஒரு பெண்ணோடான வாழ்வு கிடையாது என்கிற நிலையில், பவித்ராவை வேறு யாரிடம் உதவி கேட்கச் சொல்லுவது? அல்லது யாரை அழைத்து அவளுக்கு உதவி செய்யச் சொல்லுவது?

இதற்கு ஒரு வழி கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்று உள்ளூர எண்ணியபடி "இப்போது இஇந்த அளவுக்கு வேண்டியது வாங்குகிற வேலை முடிந்துவிட்டதா, இல்லையா?" என்று தாழ்ந்துவிட்ட குரலில் வினவினான்.

விபாகரன் இப்படி இறங்கிப்பேசுவதும், சுசித்ராவுக்கு கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் அதற்காக, அவனைத் தேற்றி சமாதானம் செய்யவும் அவளுக்கு மனமில்லை. அவளைப் பற்றி அவன் மோசமாக நினைத்ததும், பெரிய தப்புதானே?

எனவே அவன் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொன்னாள் "கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. இன்னும் ஒரு செட் வாங்கலாம் என்று எண்ணினேன். ஆனால் எதற்கும் இருக்கட்டும் என்று அதிகப்படியாக வாங்கி வைத்துக் கொள்ள எண்ணியதுதான். இல்லாததால் பிரச்சினை இராது" என்றாள்.

அடுத்து அவன் என்ன சொல்லப் போகிறான் என்று புரிந்தவளாய், அவள் அசையாமல் நின்றாள்.

தண்டனைக்காக காத்து நிற்கும் கைதியின் நிலை அவளது என்றால், தீர்ப்பை வாசிக்க வேண்டியவனாலும் எளிதாக அதைச்



சொல்ல முடியவில்லை. அவளைத் தவறாக எண்ணிய குற்றவாளி, அவன் அல்லவா?

சிறு மௌனத்தின் பின் ஒரு பெருமூச்சுடன் விபாகரன் தொடங்கினான்.

"உனக்குப் புரிகிறது அல்லவா?"

அவனுக்கு பதில் சொல்பவள் போல, ஒருதலையாட்டலுடன், சுசித்ரா தன் செல்லை எடுத்து எண்ணை அழுத்திப் பேசினாள். "பவி, நான் அக்கா பேசுகிறேன், இனிமேல் உன்னோடு ஷாப்பிங் செல்ல நான் வர... வருவதற்கு இல்லை. வர மாட்டேன் நீயும் என்னைக் கூப்பிடாதே. இத்தோடு நம்... நம் உறவு பழக்கம் எல்லாம் முடிந்தது குட்பை!" என்றாள் எந்த உணர்ச்சியும் காட்டாத குரலில்.

ஆனால், செல்ஃபோனை அவள் பைக்குள் வைக்குமுன், பவித்ரா கூப்பிட்டாள்.

என்ன என்று மற்றவள் கேட்கும் முன்னரே "இப்படிச் சொன்னால், எப்படிக்கா? நான் உங்களுக்குப் பணம் தர வேண்டுமே. தர வேண்டாம் என்றெல்லாம் சொல்லாதீர்கள். எந்த வேண்டாதவர்களுடைய பிச்சையும் எனக்குத் தேவையில்லை" என்று கத்தினாள்.

அருகில் நின்றவனுக்கும் கேட்கிற அளவு கோபக் கத்தல்!

காரணம் புரியாமல் அடி வாங்கியதின் விளைவு.

அவளை சமாதானப்படுத்த சுசித்ராவும் முனையவில்லை. மாறாக, முந்தைய குரலிலேயே, வெறும் விவரம் மட்டும் சொன்னாள். "பணத்தை உன் மாமா கொடுத்துவிட்டார்" என்றவள், செல்லை அணைத்து, கைப்பையினுள் போட்டாள்.

இதிலேயே பவித்ராவுக்குப் புரிந்திருக்கும்.

'போதுமா' என்பது போல, விபாகரனை ஒரு பார்வை பார்த்தவள், ஸ்கூட்டரில் ஏறி அமர்ந்து, உடனே கிளம்பிச் சென்றுவிட்டாள்.

வீடு சென்ற விபகாரன், தன் தமக்கை மகளை அழைத்து பேசினான்.

சுசித்ரா சொன்ன பண விஷயத்தின் பின், எப்படியும் பவி அதை

எதிர்பார்த்திருப்பாள் என்பது ஒரு காரணம் கண்டிப்பானோ, சுத்துவானோ என்று அவன் கவலைப்பட்டு விடக்கூடாது என்று எண்ணினான்.

எனவே சுசித்ராவை ஏன் உதவிக்கு அழைக்கக் கூடாது என்று எடுத்துச் சொன்னான் "பார் செல்லம், மாமாவுக்கும் அந்த அக்காவுக்கும் திருமணம் நடப்பதாக இருந்ததும், அது நின்றுவிட்டதும் உனக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டவன் மேலே தொடருமுன், "நீங்கள்தானே நிறுத்தினீர்களாம்?" என்று ஆத்திரமாக குறுக்கிட்டுச் சொன்னாள் பவித்ரா.

"ஆமாம், பவிம்மா. ஒரு வகையில் அப்படித்தான். ஆனால், சுசித்ராவுடைய பெற்றோருக்கும் அதே கருத்துதான் என்பதால், கல்யாணம் நடக்க வழியே கிடையாது. எப்படியும் திருமணம் நின்றுவிட்ட பிறகு, எந்த விதமான உறவும் கிடையாதுஎனும்போது, நீ அந்த அக்காவை உதவிக்குக் கூப்பிடுவது தப்பும்மா. அப்படி, உனக்கு யாராவது பெண்ணின் ஆலோசனை வேண்டுமானால், மாடி வீட்டு ஆன்ட்டியிடம் கேள். பணம் நான் தருகிறேன்" என்று விபாகரன் கூறியபோது "முடியவே முடியாது!"என்று மறுத்தாள் பெண்.

"அந்த ஆன்ட்டியை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது மாமா, சும்மா பார்க்கிறபோதே, 'இந்த வயதிலேயே விட்டுவிட்டுப் போய்விட்டாளே! நகை நட்டு ஏதாவது இருக்கிறதா? என்ன நகை? எத்தனை சவரன்? உன் மாமாவா, வைத்திருக்கிறார்! என்று இப்படி ஏதாவது கேட்டுக்கொண்டே, இருப்பாள், மாமா! இது போல வம்பு பேசுவது எனக்கு பிடிக்கவில்லை" என்று காரணமும் சொன்னபோது, விபாகரனால்தான், அது பற்றி மேலே பேச முடியாமல் போயிற்று.

சற்று யோசித்துவிட்டு "போகட்டும்மா. அவர்களிடம் ஒன்றும் கேட்க வேண்டாம். இப்போதுதான் தேவையான எல்லாம் வாங்கி விட்டீர்களே. ஆனால் சுசித்ராவை மட்டும் எதற்கும் கூப்பிடாதே" என்றான் அவன்.

"நான் ஏன் கூப்பிடுகிறேன். அதுதான், கூப்பிடாதே பேசாதே



என்று தெளிவாகச் சொல்லி விட்டார்களே! அவர்களாகக் கூப்பிட்டால் கூட, நான் பேச மாட்டேன்"என்று கோபமாக அறிவித்தாள் பெண்.

ரோஷம்!

சுசித்ரா மீது தப்பில்லை என்று தெரிந்தால், சிறுமியின் நியாயமற்ற கோபம், விபாகரனுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால், அவன் சின்னவளைத் திருத்த முற்படவில்லை. இந்தக் கோபம் அப்படியே இருந்தால்தான், சுசியின் வாழ்வில், மறுபடியும் பவித்ராவின் குறுக்கிடு இருக்காது என்று எண்ணினான் அவன்.

ஆனால், அதுவும் ஒரு கட்டத்தில் அவனுக்கு துன்பத்தையே தந்தது.

விபாகரனை விட்டு வருத்தமும், கோபமுமாக பிரிந்து சென்ற சுசித்ரா உடனே வீட்டுக்குப் போய்விடவில்லை.

போனால் 'என்னடா முகம் வாடியிருக்கிறது?' என்று தாயார் கண்டுபிடித்துக் கேட்பாள். ஒன்றும் பதில் சொல்லமுடியாது.

அதிலும், கொஞ்ச நாட்களாக பவியுடன் சுற்றிவிட்டு, என்னவோ, விபாகரனையே பார்த்துவிட்ட மாதிரி ஓர் ஆறுதல் நிறைந்த முகத்தை வேறு பார்த்திருக்கிறார்கள். இப்போது திரும்பவும் வாட்டத்துடன் போனால், அவ்வளவுதான். என்ன, ஏது என்று கட்டாயம் கேட்பார்கள்.

உண்மை சொல்லவும் முடியாமல், பொய் சொல்லவும் பிடிக்காமல், அவள்தான் திணற வேண்டியிருக்கும்.

எப்போதேனும் ஏதேனும் வகையில், பவியோடு அவள் பழகுவது பெற்றோருக்குத் தெரியும்போது, பெற்றோரிடம் உண்மையைச் சொல்வதாகத்தான் அவள் இருந்தாள்.

யாருக்கு என்றாலும், மனித நேயத்தோடு செய்யும் உதவியை, அவர்கள் தடுக்க மாட்டார்கள் அந்த வீட்டுத் தொடர்பா என்று சற்று வருத்தப்படலாம். அவ்வளவே!

ஆனால், அந்தக் கட்டம் வருமுன்பே, அந்த கதையே முடிந்து போனதால், அது பற்றிப் பேசாமலே விட்டுவிடலாம் என்று,

அவளுக்கு இப்போது தோன்றியது. அனாவசியமாக அவர்களைக் கலங்கடிப்பானேன்?

தெருவோரத்து காஃபி ஷாப் ஒன்றில் அமர்ந்து மிடறு மிடறாக காஃபி அருந்தியபடி, அடைத்த நெஞ்சை முயன்று சமனப்படுத்தியாவறே சுசித்ரா யோசித்தாள்.

உண்மையில், இந்த ஒரு மாத காலமாக, அவள் ஓடியது கானல்நீரின் பின்னே என்று, இப்போது புரிந்தது.

விபாகரனே மறுத்தும், அவளுடைய பெற்றோரே அதை ஒப்பியும் இருந்தபோதும், ஏதோ ஒரு நப்பாசை, அவளுள் மறையாமலே இருந்திருக்கிறது!

ஆனால், பவியோடான பழக்கம் அந்த நப்பாசைக்குத் தீனி போட்டிருக்கிறது! ஆனால் இந்தப் பழக்கத்தின் முடிவில்தான், ஒருபோதும் அவளுடைய விபாவை அவள் அடையப் போவதே இல்லை என்பது, முன்னெப்போதையும் விட அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது!

அவன்தான் என்ன உறுதியாக இருக்கிறான்! 'எண்ணித் துணிக கருமம்' என்பது போல, யோசித்து, முடிவெடுத்தவன், அதிலேயே உறுதியாக இருக்கிறான். பெருமைப்பட வேண்டுமே தவிர, வருத்தப்பட்டுப் பயனில்லை.

ஆக, அந்தநப்பாசையும் மடிந்து போயிற்று.

ஆனால், இனி என்ன?

இதுவரை, அவளது திருமணத்துக்காகப் பெற்றோர் செய்து வந்த முயற்சிகளை ஓர் ஏளனத்துடனேயே பார்த்திருந்தவளுக்கு இப்போது ஓர் அச்சம் பிறந்தது.

அப்படி, இன்னொருவனை மணப்பதுதான், அவளது தலைவிதியோ?

அவளால் முடியுமா? அதை விடச் செத்து விடலாம் என்று எண்ணும்போதே, அவளது மனம் வேறு நினைத்தது!

சாவானேன்?

காலம் வெகுவாக மாறிவிட்டது. திருமணம் ஒன்றுதான்



பெண்ணின் வாழ்வு என்ற நிலை இப்போது கிடையாது. படிப்பு, வேலை, தொழில் என்று எத்தனையோ துறைகள்! ஏதோ ஒன்றில் பெரிய ஆளாகிச் சிறப்பாக வாழலாமே!

கொஞ்ச காலம் தவித்தாலும், மற்ற துறைகளில் மகளின் சாதனைகளைக் காணும்போது, பெற்றவர்களுக்கு அந்தக் கவலை மறைந்துபோகும். எனவே உடனடியாக அவள் செய்ய வேண்டியது என்னென்ன சாதனை செய்யலாம் என்று யோசிப்பதைத்தான்.

கல்லூரியில் அவள் எடுத்துப் படித்த ஃபைன் ஆர்ட்ஸ், அதிலும் அவளைக் கவர்ந்தது உடைகளின் வடிவமைப்பு.அதுவும் சாதாரண டிசைனிங் அல்ல. அவரவர் உடல்வாகுக்கு ஏற்றவாறு, எழிலைப் பெருக்கிக் காண்பிக்கும் விதமாக அமைப்பது.

படிப்பு முடிந்த பிறகும், தனிப்பட சிலருக்கு முக்கியமாக அவளுடைய தோழிகளுக்கு வடிவமைத்துக் கொடுப்பது உண்டு. இதையே தொழிலாகச் செய்தால் என்ன என்று அவளது யோசனை ஓடிற்று.

எல்லோருமே கொடியிடையாளாக இருப்பதில்லை. ஆனால் இந்த நிறுவனத்திடம் போனால், அழகாகத் தோற்றமளிக்கலாம் என்ற பெயர் பரவும்போது, தொழில் வளர்ந்துதானே, தீரும்?

ஆனால் எடுத்தேன் கவிழ்த்தேன் என்பதுபோல, எதையும் உடனடியாகத் தொடங்கிவிட அவளுக்கு மனமில்லை. டிசைனிங்கில் திறமை இருந்தாலும், தையல் கலையிலும், முழுத்திறமை பெறுவது முக்கியம் என்று தோன்றியது.

எனவே ஒரு பெரிய 'டெயிலரிங் ஹவுஸ்' ஒன்றில் சேர்ந்து சுசித்ரா பயிற்சி பெறத் தொடங்கினாள்.

அந்த பயிற்சியிடம் நிர்மல், பவித்ராவின் பள்ளி இருக்கும் பகுதியில் இருந்தது. ஒரு பின்னடைவுதான். அடுத்த தெரு.

ஆனால், நகரில் பெயர் பெற்ற ரெடிமேடு ஆடைக்கடை ஒன்றின் கிளை இது. சுசித்ரா விரும்பிய பயிற்சிக்கு, மிகச் சிறந்த இடம். சுசித்ராவின் தகுதியைக் கண்டு, அவர்களும், தடையின்றிச் சேர்த்துக் கொண்டார்கள்.

பயிற்சிக்குச் செல்லும்போதும், திரும்பி வரும்போதும், அந்தப் பள்ளி இருக்கும் பக்கம் திரும்பாமல் செல்வதுதான், சுசித்ராவின் முதல் பயிற்சியாக இருந்தது.

மறுபுறத்தில், ஓர் அழகான பூங்கா இருந்ததால், இந்தப் பயிற்சி கடினமாகவும் இருக்கவில்லை.

சில நாட்களில், இந்த கட்டுப்பாடு பழகிவிட்ட அப்போதுதான், அவள் அந்த காட்சியைக் கண்டாள்.

மறுபடியும் பவித்ராதான்! அப்போதுதான் மீசை அரும்பிக் கொண்டிருந்த ஒரு பையனோடு, அந்தப் பூங்காவில் நெருங்கி உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள், அவள்!



## என்னவளே, காதல் என்பது.... 8

சற்றுநேரம் சுசித்ராவுக்கு ஒன்றும் ஓடவில்லை.

இப்போது, அவள் என்ன செய்ய வேண்டும்?

ஓர் ஆணும், பெண்ணும் அருகருகே அமர்வது, இந்த நாளில் பெரிய விஷயம் இல்லை. அதிலும் இந்தப் பள்ளிப் பருவத்தில், அதில் குறை காண்பதே சரியல்ல.

ஆனாலும், சுசித்ராவுக்கு மனதில் உறுத்தியது.

அந்தப் பையன், பவித்ராவுடைய சக மாணவன் அல்ல. குறைந்த பட்சமாக, மூன்று வயதேனும் பெரியவனாக, மீசை முளைக்கும் பருவத்தில் இருந்தான். அத்தோடு இருவரும் தேவைக்குச் சற்று அதிகமாக ஒட்டி உட்கார்ந்திருந்தார்கள்.

அது மட்டுமல்ல. பள்ளி முடிந்துவிட்ட நேரம். தம்பியோடு வீட்டுக்குப் போயிருக்க வேண்டியவள், இங்கே இருப்பது எப்படி? நிர்மலோடு வீட்டுக்குப் போய்விட்டு, அவன் டென்னிஸ் பயிற்சிக்கு போனதும் திரும்பியும், இவ்வளவு தூரம் வந்திருப்பாளா?

என்னவோ, தம்பி வீட்டில் இல்லாத நேரத்தில், அவனுக்குத் தெரியாமல் வீட்டை விட்டு வெளியே போய் சுற்றுவதற்கு அந்தச் சிறு பெண்ணுக்குத் தான்தான் கற்றுக்கொடுத்துவிட்டதாகக் குற்ற



உணர்ச்சியில், சுசித்ராவின் மனம் தவித்தது.

இது எங்கே போய் முடியும்?

செய்வது அறியாமல், தவித்தபடி, காலை ஊன்றி ஸ்கூட்டர் சரியாமல் சமாளித்தபடி, பார்த்தாள்.

நிர்மல் எங்கேயும் கண்ணில் படவில்லை.

அந்தப் பையன் கைகளை ஆட்டி, ஏதோ பேசிக் கொண்டிருந்தான்.

ஒருகணம் தயங்கியவள், வண்டியைப் பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு பூங்காவினுள் சென்றாள்.

பவித்ரா, சுசியைப் பார்க்காமல் இருக்க முடியாது. ஆனால் பார்த்தது போல அவள் காட்டிக் கொள்ளவே இல்லை. என்னவோ மகேந்திர ஜாலக் கதையை அந்தப் பையன் சொல்லிக் கொண்டிருப்பது போல, அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

இது ரோஷம் பார்க்கிற நேரம் அல்ல என்று தோன்றிவிட, அருகில் சென்று "பவிம்மா" என்று சுசித்ரா சின்னவளை அழைத்தாள்.

"என்ன?" என்று வெடுக்கெனக் கேட்டாள் சின்னவள்.

"தம்பியைக் காணோமே?"

"அவன் வேனில் வீட்டுக்குப் போய்விட்டான்"

"நீ இல்லாமலா?"

"எனக்கு ரெக்கார்டு புக் வேலை இருப்பதாகச் சொல்லி அவனை மட்டும் அனுப்பிவிட்டேன்" என்றாள் அவள் சர்வ சாதாரணமாக.

"செய்து முடித்துவிட்டாயா?"

"இருந்தால்தானே செய்வதற்கு?" என்று ஏளனமாக சிரித்தாள் சிறுமி.

உன்னைப் பார்த்து யாரும் சிரிக்கும்படி ஆகிவிடக்கூடாதே என்று உள்ளூர எண்ணியபடி, பையனைப் பார்வையால் காட்டி "யார்" என்று கேட்டாள் சுசித்ரா.

அந்தப் பையனுக்கு என்ன தோன்றியதோ, எழுந்து "நாளை சந்திக்கலாம், பை, பவித்ரா" என்றுவிட்டு அருகில் கீழே கிடந்த புத்தகப் பையை தூக்கி மாட்டிக் கொண்டு கிளம்பிவிட்டான்.

சொத்து சொத்தென்று சலித்த காலடிகளோடு அவன் செல்வதைப் பார்த்த பவித்ரா ஆத்திரத்துடன் மற்றவளிடம் திரும்பினாள் "அவன் யாராக இருந்தால், உங்களுக்கென்ன? அதை நீங்கள் என்ன கேட்பது?" என்று கோபமாகக் கேட்டாள்.

"என்னம்மா பவி? தம்பியிடம் பொய் சொல்லி அனுப்பிவிட்டு, யாருடனோ உட்கார்ந்து பேசினால், பெரியவர்கள் அது என்ன என்று கேட்க வேண்டாமா?" என்று விளக்க முயன்றாள் சுசித்ரா.

ஆனால் "அதைத்தான், நீங்கள் எப்படிக் கேட்கலாம் என்று கேட்டேன். நீங்கள்தான், என்னைக் கூப்பிட்டு, இனிமேல் உங்களைத் தொல்லை செய்யக் கூடாது. உறவே கிடையாது என்று என்னென்னமோ சொல்லி முடித்து விட்டீர்களே! அப்புறம், நான் யாரோடு பேசினாலும், உங்களுக்கு என்ன வந்தது? நான் பொய் சொன்னாலும், நிஜம் சொன்னாலும், பையனோடு பேசினாலும், பெண்ணோடு பேசினாலும், அது, என் இஷ்டம். நீங்கள் ஒன்றும் சொல்லத் தேவையில்லை! பேசாமல் போங்கள்!" என்று அலட்சியமாகத் தலையைச் சிலுப்பிக் கொண்டு, தானும் பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள், சின்னவள்.

"பெரிதாகக் கேள்வி கேட்க வந்துவிட்டார்கள்" என்று உரக்க முணுமுணுத்தபடி!

சுசித்ரா திகைத்து நின்றாள்.

சாருமதியின் வளர்ப்பில், பிள்ளைகளிடம் பண்பு இருந்தது. பெரியவர்களிடம் மட்டு மரியாதை இருந்தது. கோபப் பட்டாலும், அதில் நியாயம் இருந்தது. நேர்மையாகவும் நடந்தார்கள்.

ஆனால், பொய் சொன்னதோடு என்னவென்று கேட்டவளைத் தூக்கி எறிந்து, அந்த சின்னப் பெண் பேசிய விதம், மற்றவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

சந்தோஷமாகப் பழச்சாறு குடித்துவிட்டுப் போன பெண்ணைக் கூப்பிட்டு, இனி என்னுடன் பேசாதே என்றபோது, அவள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள் என்பது, இப்போது தெளிவாகத் தெரிந்தது. அதன் விளைவே இந்த எடுத்தெறிந்த பேச்சு. ஆனால், ஆயிரம்



காரணம் இருந்தாலும் இந்த விளைவு பவித்ராவுக்கு நல்லதில்லை.

இதைத் தெரிவிக்க வேண்டிய இடம், விபாகரன்!

ஆனால், ஒரு சின்னப் பெண்ணின் ஒரு சிறு சறுக்கலை மூட்டை கட்டிக்கொண்டு போய், அவளுடைய மாமனிடம் சொல்வதும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

அது கோள் மூட்டுவதற்குச் சமம்.

ஒருவேளை, பவித்ராவே, தானாகவே உணர்ந்து, இந்தப் பழக்கத்தை நிறுத்திவிடலாம்! அப்படி நிறுத்திவிட்டால், அது கோள் மூட்டுவதேதான்! தேவையற்று, அதை ஏன் செய்வது?

தொடர்ந்து இரண்டு நாட்களும், பவித்ரா அதே பையனோடு பூங்காவில் சுற்றுவதை, சுசித்ரா கவனித்தாள். அதுவும் ஒரு வீம்போடு, தலையை நிமிர்த்தி வைத்தபடி, பவித்ரா உலாவுவதைக் கண்டபோது, பெரியவளது மனது மிகவும் கலங்கியது.

இது நல்லதில்லை. இந்த வீம்பும் நல்லதில்லை. தொடர்ந்து அந்தப் பையனைப் பவித்ரா சந்திப்பதும் நல்லது கிடையாது!

பெண்ணுக்குப் பெண்ணாக, உள்ளாடை வாங்க உதவியதையே, உரிமை கிடையாது என்றவன் அவன், இப்போது இன்னமும் வாங்கிக் கட்ட நேர்ந்தாலும் நேரலாம்.

ஆனாலும், எப்படியோ போகட்டும் என்று இருக்க மனமின்றி, சுசித்ரா, விபாரனுக்கு ஃபோன் செய்தாள்.

"என்ன..." என்று சிறு சலிப்போடு தொடங்கியபோதும், விஷயம் இன்னதென்று தெரிந்தபின், அவன் ஆத்திரம் காட்டவில்லை.

"பவியிடம் கோபம் காட்ட வேண்டாம்" என்று அவள் சொன்னதையும் இயல்பாகவே ஏற்றுக்கொண்டு "மறுபடியும் உனக்கு நன்றி சொல்ல வேண்டியிருக்கிறது. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள் இன்னமும் நேராதிருக்க நீயும் கடவுளை வேண்டிக்கொள்" என்று சாதாரணமாகவே சொல்லிப் பேச்சை முடித்தான்.

ஆனால், உன்னுடன் பேசவே பிடிக்கவில்லை என்று, என்னமாகச் சொல்லுகிறான் என்று வருந்தி, இரண்டு சொட்டுக் கண்ணீரையும்

வடித்து வைத்தாள் அவள்!

ஆனால், அடுத்த நாள் தையல் பயிற்சிக்குச் செல்லும்போது, பூங்காவினுள் தன்னிச்சையாக பாய்ந்த கண்களில், பவித்ரா தென்படவில்லை என்பதே, பெரும் நன்மையாக உணர்ந்து, ஆறுதலும் அடைந்தாள்.

அந்த ஆறுதல் சும்மா வந்துவிடவில்லை.

நிர்மல் உடம்பு கழுவிவிட்டுப் படுத்த பின் "உன் பாடம் பற்றிப் பேச வேண்டும் முன்னறைக்கு வா" என்று மாமன் அழைத்ததுமே, அந்தக் கெட்டிக்காரப் பெண்ணுக்கு புரிந்து விட்டது.

விபாகரன் கேட்டது போல முன் அறைக்குச் சென்றவள், அவன் பேச்சைத் தொடங்குமுன்னரே, "போட்டுக் கொடுத்து விட்டாளாக்கும், அந்த அக்கா! அவள் மட்டும் என்ன ஒழுங்கு? அவள் ஊர் சுற்றுவதால்தானே என்னைப் பார்க்க முடிந்தது?" என்றாள் ஆத்திரத்துடன்.

இப்போது சுசித்ராவை நியாயப்படுத்திப் பேசுவது இந்தச் சின்னப் பெண்ணின் சினத்தை இன்னும் அதிகரிக்குமே தவிர, அதனால் எந்த பயனும் ஏற்படாது என்று உணர்ந்த விபாகரன், அதற்கு முயற்சிக்கவே இல்லை.

மாறாக "அந்த அக்கா, எப்படிப் போனால், நமக்கு என்னம்மா? நம்மை மட்டும் நாம் பார்ப்போமே. நீ இப்படிப் பள்ளியில் இருந்து வீட்டுக்கு வராமல் வெளியே சுற்றுவது தப்புதானே? அதுவும் 'ரெக்கார்டு புக்'வேலை இருப்பதாகச் தம்பியிடம் பொய் சொல்லி, அவனை முன்னதாக அனுப்பிவிட்டு.... ஏண்டாம்மா, அப்படி?" என்று கனிந்த குரலில் வினவினான்.

சுசித்ரா பேச்சைக் கேட்டுக் கண்டிப்பானோ என்று நினைத்து விறைப்பாக நின்ற பெண், அவன் குழைவாக வேறு பேசவும், சுருண்டு விட்டாள்.

அவனது கையைப் பிடித்துக் கொண்டு "வீடு, எனக்கு ரொம்பப் போரடிக்கிறது மாமா. நிர்மல் விளையாடப் போய்விடுகிறான். திரும்பி வந்தால், சாப்பிட்டு, கொஞ்ச நேரம் படித்துவிட்டு, உடம்பு கழுவித்



தூங்கியும் விடுகிறான். வீட்டுக்கு வந்து, இவ்வளவு நேரமும் நான் யாருடன் பேச? எவ்வளவு நேரம்தான் படிப்பது. நீங்களும் வேலை முடிந்து வர, நேரமாகிவிடுகிறது. அந்தப் பையனும் பாவம், மாமா. வீட்டில் தனியாகத்தான் இருப்பானாம். அவனுடைய அப்பாவும் அம்மாவும் வேலை, பார்ட்டி என்று, எப்போதும் வெளியே போய் விடுவார்களாம். என்னிடம் பேசினால் நன்றாக இருக்கிறது என்றான். அதுதான், அவனோடு பேசிக் கொண்டு இருந்தேன்" என்று முழு விவரமும் சொன்னாள்.

தனிமை என்று, இப்படி ஒரு பிரச்சினை வரக்கூடும் என்று விபாகரன் எதிர்பார்க்கவில்லையே!

"பாருங்கள் மாமா, வெறுமனே எனக்கு துணையாக இருக்க கூட வீட்டில் ஒருவருமே இல்லையே!" என்று எடுத்துச் சொன்னாள் பெண். "அன்று அந்தப் பரட்டைத் தலைப் பிச்சைக்காரன் வந்து கத்தியபோது, எவ்வளவு பயமாக இருந்தது, தெரியுமா?"

"வேண்டுமானால் வேலைக்காரம்மாவை துணையாக, நான் வரும்வரை இருக்கச் சொல்லட்டுமா?" என்று ஒரு யோசனை சொன்னால், பவித்ரா ஏற்க மறுத்தாள்.

"வேலைக்காரியிடம் எல்லாம் ரொம்ப பேசக் கூடாது என்று அம்மா சொல்வார்களே! நாம் பேசியதை, அவர்கள் வேலை செய்யும் எல்லார் வீட்டிலும் சொல்வார்களாம். அவர்களைப் பொறுத்தவரை, சம்பளம் தருகிற எல்லா வீடும் ஒன்றுதானே என்பார்களே?" என்று காரணமும் கூறினாள்.

தமக்கையின் இழப்பு மற்ற எப்போதையும் விட அதிகமாக, அப்போது விபாகரனைத் தாக்கியது. இப்படிப்பட்ட அருமையான தாயின் வழி காட்டுதலில் முழுவளர்ச்சியையும் அடைய இந்தப் பெண்ணுக்கு கொடுத்து வைக்கவில்லையே!

அடைத்த தொண்டையைச் செருமிக்கொண்டு "வேறு என்ன செய்யலாம் என்று யோசிக்கிறேன், செல்லம் ஆனால் நீ ரொம்ப சின்னப் பெண். இப்படி வெளியே வேறு யாருடனும் சுற்றுவது, ஆபத்து. அதனால் வேண்டாம் என்னடா. மாமா சொன்னால்

"என்று அவன் கேட்க, அக்கா மகளும் தலையை
கேட்பாயில்லையா?" என்று அவன் கேட்க, அக்கா மகளும் தலையை
ஆட்டினாள்.
ஒருகணம் மௌனமாக இருந்துவிட்டு "அக்காவும் இதேதான்
சொன்னாள், மாமா. ஆனால் கோபமாகப் பேசி விட்டேன். பார்த்தால்,
சரி சொன்னதாகச் சொல்லி விடுகிறீர்களா?" என்று சின்னவள்
நியாயபுத்தியோடு கேட்க, பேசமாட்டாமல், இப்போது மாமன்
தலையை ஆட்டி வைத்தான்.
சுசித்ராவைப் பார்ப்பதேது? அவளோடு பேசுவதேது? அவனது
ஏக்கம், பெருமூச்சாகி காற்றோடு கலந்தது.
பவித்ராவைப் பொறுத்தவரையில், படிப்பு தவிர, வேறு எதிலும்
அவ்வளவாக, அவளுக்கு நாட்டம் இருந்தது கிடையாது.
விளையாட்டு, கலை எல்லாம் முயன்று பார்த்துவிட்டு "இந்தம்மா,
குடும்ப விளக்காக ஒளிவிடுவாள். கூடுதலாக மிஞ்சிமிஞ்சி எந்த
அலுவலகத்திலாவது, கணக்கு வழக்குப் பார்க்கிற வேலைக்குத்தான்
லாயக்கு. படிப்பு முடிந்த பிறகு அது போல ஏதாவது பண்ணச்
சொல்ல வேண்டும்" என்று சாருமதி சொல்வதுண்டு.
எனவே, இப்போது கட்டாயப்படுத்தி, வேறு எதிலாவது சேர்ப்பது,
விபாகரனுக்குச் சரியாகப் படவில்லை. அதனால் பயன் இருக்கும்
என்று தோன்றவில்லை.
அவனது இப்போதைய தேவை, வீட்டில் ஒரு பெண்ணின் துணை!
அத்தை, பாட்டி என்று உறவில் யாரேனும் பெரியவர்கள் தனி
ஆளாய் இருந்தால், இங்கே கூட்டி வந்து, கூட வைத்துக
கொள்ளலாமே என்று, ஒருதரம் அவனுக்குத் தோன்றியது.
ரொம்பத் தீவிரமாக, அது போன்ற உறவுகளை மனக்கண் முன்னே
கொண்டு வந்து ஆராய்ந்தான்.
ஊர்ப்புறத்து உறவுகள் பற்றி ஆலோசித்தபோது, அவனுக்கு
எதுவும் பிடிக்கவில்லை. பிடிக்கும்படியாக எந்த உறவும் நடந்து
கொள்ளவும் இல்லை.
அவனுடைய தந்தை இறந்தது, அக்காவின் பதினைந்தாவது
வயதில், அப்போது சிறுவன் விபாகரனுக்கு எட்டு வயது.



பதினைந்து வயது பெண் எனும்போது, சீக்கிரமே அவளது
திருமணச் செலவு தலையில் விழுந்துவிடுமோ என்ற பயத்தில்,
உறவினர் எல்லோரும் தந்திரமாகக் கழன்று கொண்டனர்.
தப்பே செய்தாலும், தங்கள் மீது பழி வந்துவிடக் கூடாது என்று,
ஆளுக்கு ஒரு குற்றத்தை, கணவனை இழந்த பேதைப் பெண் மீது
சுமத்தினார்கள்.
சாவுக்கு வந்தவர்களைச் சரியாகக் கவனிக்கவில்லை. முறை
செய்யாமல், இளப்பமாக நடத்தினாள் என்று ஏதேதோ குறை கூறி,
இழப்பிலே துவண்டு கிடந்த தாயிடம், உறவினர் ஆளாளுக்குச்
சண்டை போட்டதை, எட்டு வயதுச் சிறுவனாக அன்னையின்
அருகிலிருந்து அவனே நேரில் கண்டிருக்கிறான்.
எதற்கும் பதில் சொல்லக்கூட, ஆவியற்றுக் கிடந்த தாய் காரணம்
புரியாத திகைப்புடன் கலங்கி நின்றதையும்!
ஒருவர் மாற்றி, ஒருவர் கண்டபடி பேசிச் சண்டை போட்டுவிட்டு,
"என்னவோ எங்கள் சுந்தரத்தோடு, இந்த உறவும் அற்றுப் போக
வேண்டும் என்பது எங்கள் தலைவிதி! இனி எதற்கும் நாங்கள் இந்த
வீட்டுப் பக்கம் வரவே மாட்டோம், தாயே! நீ வந்து வரிசை பண்ண
வேண்டும் என்று எதிர்பார்க்கவும் மாட்டோம். ஐயோ கடவுளே,
அவனோடு ஓர் உறவே, அற்றுப் போய்விட்டதே!" என்று ஒப்பாரி
வைத்து அழுகிற சாக்கில், எதற்காகவும் அவர்கள் வீட்டுப் பக்கம்
வந்துவிட வேண்டாம் என்று ஜாடையாகச் சொல்லாமல்சொல்லிப்
போனார்கள்.
நல்லவேளையாக, பணியில் இருந்து இறந்தவருடைய மனைவி
என்பதற்காக, அவளது கல்வித் தகுதிக்கு ஏற்றபடி, பாக்கியத்துக்கும்
ஒரு வேலை கிடைத்ததால், குடும்பச் சக்கரம், ஒருவாறு தொடர்ந்து
ஓடியது.
சக்கரம் பழுதின்றி ஓடுவதற்காக, அன்னை இன்னும் சில பல
வேலைகளைச் செய்து பொருள் ஈட்டினாளே தவிர, உதவி என்று
யாரிடமும் போய் நிற்கவில்லை! அதிகப்படி உழைப்பால் அன்னை
தளர்ந்தபோது, அக்கா கைகொடுத்தாள். படிக்கும்போதே, சிறு சிறு

ப்ராஜெக்ட்களை பொறுப்பேற்று செய்து பொருளீட்டியவள், முழு நேர உழைப்பில் நோயாளித்தாய், உடன் பிறந்தானின் படிப்பு, வீட்டுச்செலவு எல்லாவற்றையும் அவளே கவனித்துக் கொண்டாள்!

என்ன ஒரு தெளிவு! என்ன மாதிரி திட்டமிட்ட செயல்பாடு!

எப்போதுமே தமக்கையை நினைக்கும்போது, விபாகரனுக்கு பரவசம் கலந்த மரியாதைதான். தாயை விடவும் உயர்வாக அவன் மதித்தது, அவளையே! அவள் மட்டும் பொறுப்பேற்காவிட்டால், அவனும், தாயும் என்ன ஆகியிருப்பார்கள்!

நல்லவேளையாக சாருமதியின் திருமணம் நடந்து, இரண்டு பிள்ளைகளும் பிறந்து பார்த்து மகிழ்ந்த பிறகு, மனதில் திருப்தியோடுதான் அம்மா மறைந்தது.

அப்போதும், அக்கா திருமணத்துக்கு அழைக்கப் போனபோது, பணம் எதுவும் கேட்டு விடுவார்களோ என்று வேறு எங்கோ செல்ல வேண்டியிருப்பதாகச் சொல்லி, வராமலே இருந்து விட்டவர்கள். விபாகரனுடைய பெற்றோர் வழி உறவினர்கள்!

இந்தக் கதையெல்லாம் தெரிந்ததால்தான், தன் திருமணத்துக்குச் சொந்த ஊரில் யாரையும் அழைக்க வேண்டாம், என்று விபாகரன் அவ்வளவு தூரம் தடுத்ததே!

அதை மட்டும் அக்கா கேட்டிருந்தால், இப்போது உயிரோடு இருந்திருப்பாளே என்று எண்ணம் ஓடவும், தன்னையறியாமல் விபாகரன் கண்கள் நீரை பெருக்கின.

சாருமதியுடைய புகுந்த வீட்டு உறவை நாட முடியாதபடி, அவளது திருமணத்திலேயே, பெரும் பிரச்சினை இருந்தது!

அத்தான் தேசிகனுக்கும், சாருமதிக்கும் நடந்தது, காதல் கல்யாணம்.

தேசிகன், அவரது ஊர்ப்பக்கம், செல்வாக்கான குடும்பத்தைச் சேர்ந்தவர்.

நில புலன்கள், அதில் விளையும் பொருட்கள் சார்ந்த சிறு தொழில்கள் என்று, வளமான பின்னணி. தந்தை அவர்கள் இனத்துக்கே முடி சூடா மன்னர்! அந்தப் பக்கம், எந்தப் பிரச்சினை



என்றாலும், அவர் சொல்வதுதான் தீர்ப்பு!

காதல், உழைத்துப் பிழைக்கும் பெண்ணை மணக்கப் போகிறேன் என்று மகன் சொன்னதும், தந்தை செல்வரங்கம், சீறும் புலியாக மாறினார்.

வசதியுள்ள வீட்டுப் பிள்ளை என்று தெரிந்து, வலை போட்டுப் பிடித்துவிட்டாள் என்று, சாருமதியைக் கேவலமாகப் பேசினாராம்.

காதலியின் அழகை விடப் பண்பில் மயங்கியிருந்த தேசிகன் ஆத்திரமுற்று, தந்தையை எதிர்த்துக் கோபமாக பேசினாராம்.

இருவரும் அவரவர் பிடியை விடவில்லை. ஒரு கட்டத்தில், தந்தையை எதிர்த்து விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டு தேசிகன் வந்துவிட்டார்.

"காதல் கல்யாணம், இரண்டு மாலைகளோடு திருமணப் பதிவு அலுவலகத்தில் முடித்துவிடு, செலவு மிச்சம். மற்றவர்களுக்குக் கல்யாணச் சாப்பாடு போட, நீயும் அந்த ஜாலக்காரியும் பத்து நாள் பட்டினி கிடக்காதீர்கள்" என்று அறிவுரை வேறு சொல்லி, அனுப்பினாராம், பெற்றவர்.

இந்த பிரிவு பற்றிப் பாக்கியத்துக்கு சற்று வருத்தம்தான். மகளிடம் சொல்லிப் பார்த்தாள். "குடும்பத்தைப் பிரித்தவள் என்கிற பழி உனக்கு வந்துவிடுமே" என்று அஞ்சினாள்.

ஆனால் அதற்குப் பதிலாக "அம்மா, தேசி பற்றி எனக்குத் தெரியும். ஆனால் அவருடைய தந்தை பற்றி எதுவும் தெரியாது. இந்த நிலையில், அவருடைய அப்பா பற்றி, அவருக்குத் தெரியாதது எனக்குத் தெரிந்த மாதிரி. பெற்றவரோடு சமாதானமாகப் போ என்று, தேசியிடம் நான் எப்படிச் சொல்ல முடியும்? போவோம் வா' என்று தேசி கூப்பிட்டால், மறுக்காமல் கூடப் போவேன். மற்றபடி, இதில் நான் தலையிட முடியாதும்மா" என்று சாருமதி தாயிடம் சொன்னதும், விபாகரனுக்குத் தெரியும்.

பவித்ராவும், நிர்மலும் பிறந்தபோது, பாக்கியம், தன் பொறுப்பாய் மகன் மூலம் சம்பந்தி மனிதருக்குத் தகவல் அனுப்பினாள்.

ஆனால் 'எனக்குப் பிள்ளையே கிடையாது. பேத்தி எப்படி

வருவாள்?" என்ற பதில் முதலில் வந்தது.

நிர்மலின் போது, 'பேரன் பேரைச் சொல்லி பசையுள்ள இடத்தில் ஒட்டிக் கொள்ள உன் கைகார மகளின் சூழ்ச்சியா? கண்ட சதிகார நாய்கள் ஈனுகிற குட்டிக்கெல்லாம், நான் பாட்டனல்ல' என்று மிகவும் கடுமையாக ஒரு பதில் வரவே. "அத்தானே சும்மா இருக்கும்போது, உங்களுக்கு ஏனம்மா, இந்த வீண் முயற்சி?" என்று விபாகரனே கோபப்பட்டுக் கத்திவிட்டான்.

சாருமதி சொன்னதே சரியாக, பெற்றவரோடு, தேசிகனாக சமாதான முயற்சி எதையும் செய்யாத காரணம் என்ன என்று, அப்போததான் அவனுக்குமே சரியாகத் தெரிந்தது. தந்தையின் குணம் அறிந்திருந்த மனிதர்!

ஏன், இப்போது விபத்தில் இருவரும் போனது, அந்தப் பெரியவருக்குத் தெரியாமலா இருக்கும்? பெற்ற ஒரே மகனின் ரத்தங்கள், அந்தப் பேரன், பேத்தி பக்கம் எட்டிப் பார்க்கவே இல்லையே!

இந்த மாதிரி மனிதர்களிடம் எப்படி உதவிக்குப் போய் நிற்பது? அவரது பணத்துக்காக வரவில்லை என்று, அவருக்குப் புரிய வைப்பது, ரொம்பக் கஷ்டம்! நடக்காது!

ஆனால், இந்த வயதில், பவித்ராவைத் தனித்து விடுவதும் தவறு!

செய்வது அறியாமல், விபாகரன் திகைத்து நின்றபோது, கடவுளாகப் பார்த்து அனுப்பிய மாதிரி, தேசிகனுடைய நண்பர் சந்தானம் அவனைத் தேடி வந்தார்.

திருநெல்வேலி அல்வா, கோவில்பட்டி கடலைமிட்டாய் எல்லாம் பிள்ளைகள் கையில் கொடுத்துவிட்டு, விபாகரனை தனியே அழைத்துப் போய்ப் பேசினார்.

"தொழிலில் தேசிகனின் பாகத்தை பணமாக மாற்றித் தர முயற்சிப்பதாகச் சொன்னேனே, நினைவிருக்கிறதா? இப்போது ஒரு வழியாக, எல்லோரிடமும் பேசி, அதற்கு வழி செய்து விட்டேன்" என்று அந்த விவரம் தெரிவித்தார்.

தேசிகன் தொடங்கிய தொழிலில் ஏற்கனவே நாலு பேர் கூட்டு



இருந்தது தென் தமிழ் நாட்டுப்பக்கம். மேலும் இரண்டு பேர் சேர்வதாக இருந்தது. எல்லோருமே உழைப்பு, பணம் இரண்டையும் கொடுப்பதாகப் பேசித் திட்டமிட்டிருந்தனர். இது, தேசிகனும் சேர்த்து செய்த ஏற்பாடு.

அதன்படி, சந்தானத்தின் முயற்சியில், இப்போது புதிதாக கூட்டு சேர்ந்தவர்களையும் கலந்து ஆலோசித்து, எல்லோருடைய ஒப்புதலின் பேரில், இப்போது ஓர் ஏற்பாடு செய்தார்கள்.

தொழிலை முதலில் தொடங்கியது, தேசிகன்தான். தொழிலுக்கு வரவேற்பு இருக்கவே, பங்குதாரர்களாகச் சிலரை சேர்த்துக் கொண்டு, முதல் விரிவாக்கத்தை செய்தார். முதலில் வளர்ச்சியில் அப்படிச் சேர்ந்தவர்தான் சந்தானமே.

அடுத்த விரிவாக்கம் நடக்குமுன் விதி விளையாடிவிட்டது.

நண்பனுக்கு உரிய பணம், அதுவும் இயன்றவரை அதிகமாகவே, அவனுடைய குடும்பத்துக்குப் போய்ச் சேர வேண்டும் என்று சந்தானம் விரும்பினார். எனவே, தொழிலுக்குத் இன்றைய நிலையில் மதிப்புப் போட்டு, அதில் தேசிகனது பாகத்தை தனியே மதிப்பிட்டு, மற்ற ஐந்து பேருமாகப் பணத்தைக் கொடுத்து எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்தார்.

அப்படி வந்த பணம், நாற்பது லட்சங்கள்! உடனடியாகப் பணமாகக் கிடைத்தது, இருபது லட்சம். மீதியை மாதமாதமாக இருபது மாதங்களில் கொடுத்து விடுவதாக எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது அந்த இருபது லட்சத்தையும் டிடியாக கொண்டு வந்திருக்கிறார்.

விபாகரனுக்கு ஆறுதலாகவும், கூடவே ஆச்சரியமாகவும் இருந்தது.

"அத்தான் போட்ட முதல் எவ்வளவு என்று எனக்குத் தெரியும், அங்கிள். அவர் இருந்து நடத்தியிருந்தால், நாளடைவில் உங்களோடு சேர்ந்து எவ்வளவு உயர்ந்த நிலைக்குப் போயிருப்பார் என்று தெரிகிறது. ஆனால் அது நடக்கு முன்னரே, இதற்குள்,

இவ்வளவு பெரிய தொகைக்கு நீங்கள் ஏற்பாடு செய்ததும், ரொம்பப்
பெரிய விஷயம்தான். மற்றவர்களையும் இதற்கு ஒத்துக்கொள்ள
வைத்து... பெரிய உதவி செய்திருக்கிறீர்கள்! ரொம்ப நன்றி
அங்கிள்!" என்றான் அவன் மனமார.

அப்புறம், இந்தப் பணத்தை எப்படி முதலீடு செய்வது நல்லது
என்று இருவருமாக யோசித்தார்கள்.

"பிள்ளைகள் பெயரில் வைப்பு நிதியாக, பாங்கில் கட்டினால்,
வட்டியாக ஒரு தொகை சேர்ந்து, பிள்ளைகளுக்குத் தேவைப்படும்
காலத்தில் பெரிய தொகையாகக் கைக்கு வந்து சேரும்.

"ஆனால் இந்த வீட்டையும், பெரிய 'லோன்' போட்டுத்தான்
கட்டியிருப்பதாகவும் சொன்னான். இப்போது தம்பி, நீதான் அந்த
லோன் பணம் கட்டுகிறாய் என்று தோன்றுகிறது"என்று சந்தானம்,
யோசித்துச் சொல்ல, விபாகர் தலையாட்டினான். இன்னும்
யோசனையாகப் பார்த்துவிட்டு, "தம்பி உன்னைத் தன் மூத்த
பிள்ளை என்று, தேசிகன் சொன்னதுண்டு. மறைக்காமல் சொல்லு.
செலவு சமாளிக்க முடிகிறதா? நீயும் ஒரு ஃப்ளாட்
வாங்கியிருக்கிறாய்தானே? அதற்கும் பணம் கட்டி... இதற்கு மேல்
குடும்பத்தையும் நிலை குறையாமல் நடத்தி வருவது என்றால்,
நிஜத்தைச் சொல்லு. கஷ்டம்தானே" என்று கேட்டார்.

அக்கறையோடு கேட்கும் அவரிடம், விபாகரனும் மறைக்காமல்
"ரொம்பவும் சிரமமாகத்தான் இருக்கிறது, அங்கிள். அந்த வீட்டை
வாடகைக்கு விட்டும். 'ஓவர் டைம்' செய்தும் சேமிப்பில் கை
வைக்கம்படியாகவே இருக்கிறது. அதனால் அந்த வீட்டை
விற்றுவிடலாம் என்று விலை பேசிக் கொண்டு இருக்கிறேன்" என்று
உண்மையைச் சொன்னான்.

"ஐயோ வேண்டாம்ப்பா" என்றார் அவர் "இன்றைய நிலையில்
வீடோ நிலமோ ஒரு சொத்தை விற்பது எளிது. ஆனால் திரும்ப
வாங்குவது மிகவும் கஷ்டம். அதுவும் உன் வருமானத்தில் நீ முதல்
முதலாக வாங்கியது. இருக்கட்டும். அந்த வாடகை தொடர்ந்து
வரட்டும் இப்போது... நீ ஒன்று செய். இந்தப் பணத்தை தேசிகன்



வீட்டுக் கடனுக்குக் கட்டிவிடு. இதற்கு கட்டும் பணம் கணிசமாக
மிஞ்சும், அடுத்து வருவதை டெப்பாசிட் மாதிரிப் போட்டு பெருக்கி,
பவித்ரா, நிர்மலுக்குக் கொடு" என்று ஐடியாக் கொடுத்தார்.

அந்த வீட்டை விற்கத் தேவையில்லை என்பது, விபாகரனுக்கு
ஆறுதலாகத்தான் இருந்தது. ஆனால், அது வெறும் சொத்து
மட்டும்தான். அவனுடைய சித்துவோடு வாழப்போகும் வீடு அல்ல
என்று எண்ணும்போது, பெருமூச்சும் வந்தது.

சிறுமௌனத்தின் பின், "இங்கே வரும்போது, தற்செயலாக
சுதர்சனத்தைச் சந்தித்தேன். விவரம் எல்லாம் சொன்னார்.
திருமணத்தை மறுத்து, நீ சொன்ன காரணங்களால், அவருக்கு
உன்னிடம் ரொம்ப மதிப்பு! இப்போது, பண விஷயம் கொஞ்சம் இலகு
ஆவதால், பழையபடி அந்தப் பெண்ணையே..." என்று
தொடங்கினார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்று உணர்ந்தவன், அவரது
பேச்சில் குறுக்கிட்டான் "இல்லை அங்கிள். நீங்கள் சொல்வது போல
பணப் பிரச்சினையே, ஓரளவுதான் குறையக்கூடும். முழுதாக அல்ல.
மேலும் இன்னும் சில காரணங்கள் அப்படியேதான் இருக்கும்.
எனவே, அந்தப் பேச்சு வேண்டாம். அது முடிவடைந்ததாகவே
இருக்கட்டும்" என்று அது பற்றி மேலே பேச விடாமல்
முடித்தவனுக்கு அப்போதைய பிரச்சினை குறித்து இவரிடம் உதவி
கேட்டால் என்ன என்று தோன்றியது.

அக்கா, அத்தானிடம் அன்பு உள்ளவர், பிள்ளைகளுக்காக
மெனக்கெட்டு இவ்வளவு பணம் திரட்டி கொண்டு வந்திருக்கிறார்.
அந்த அளவு அக்கறை உள்ளவர்! இந்த உதவியும் செய்யக்கூடும்.

இப்படி எண்ணித்தான், பவித்ராவின் தேவை பற்றி,
சந்தானத்திடம் அவன் சொன்னது. ஆனால், அதற்கு உரிய பதிலாக
அவர் சொன்ன யோசனையில், அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது!

மூச்சே கூட சற்று நேரம் நின்று போயிற்று என்று கூடச்
சொல்லலாம்.



# என்னவளே, காதல் என்பது.... 9

சந்தானம், ஒரு தலைமுறை மூத்தவர், சமீபத்தில்தான் மகளுக்குத் திருமணம் செய்திருக்கிறார். அதனால், அவரது உறவு மற்றும் நட்பு வட்டம் பெரிதாக இருக்கும். அந்த வட்டத்தில் பவித்ராவுக்குத் துணையாக இருப்பதற்கு, யாராவது கிடைக்கக்கூடும் என்று எண்ணித்தான், விபகாரன் அப்போதைய தன் பிரச்சினையை, சந்தானத்திடம் சொன்னான்.

ஆனால், அவர் அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "இந்தப் பிரச்சினை தீர்வதற்கு, ஒரே ஒரு வழிதான் உண்டு விபாகரா. ஆனால் அது, உனக்கு எந்த அளவு சம்மதமாக இருக்குமோ, எனக்குத் தெரியாது" என்றார் யோசனையோடு.

"எதுவானாலும் சொல்லுங்கள், அங்கிள் பவியின் இந்தப் பிரச்சினை, நல்லபடியாகத் தீரவேண்டும், என்னுடைய வருமானம், செலவுகள் பற்றி, உங்களுக்குத் நன்றாகத் தெரியும். இதற்குள், அவளுக்காக எதைச் செய்யவும், நான் தயார்தான்" என்றான் விபாகரன்.

"இதற்குள், எதைச் செய்யவுமா? ரொம்ப சந்தோஷம் ஓர் ஏழைப் பெண்ணைத் திருமணம் செய்துகொள். அதற்கான ஏற்பாடுகளை, நான் செய்கிறேன்" என்றார் பெரியவர்.

அதிர்ந்து போய், அவரைப் பார்த்தான் விபகாரன்.

சசித்ரா பற்றித் தெரிந்திருக்கிறது! அப்படியும், இதுபோலப் பேசுவது என்றால்?

புரியாத பார்வையுடன் தலையசைத்து "என்ன அங்கிள், இப்படிச் சொல்லி விட்டீர்கள்? என் மனம் உங்களுக்குத் தெரிந்திருப்பதாக நினைத்தேனே" என்று குறையோடு கேட்டான்.

"தெரியாமல் என்னப்பமா? அந்தப் பெண்ணோடுதான், இனித் திருமணம் இல்லை என்று முடித்துவிட்டாயே. இப்போது பவித்ராவை மட்டும்தானே, பார்த்தாக வேண்டும்? அவளுக்குத் தேவை, உரிமையோடு வழிநடத்தும் ஒரு பெண். அந்தப்



பெண்ணிடம், அவளுக்கு மதிப்பும், மரியாதையும் இருக்க வேண்டும்! நீ என்னதான் சொந்த பந்தத்திலிருந்து எந்த வயதுப் பெண்ணைக் கூட்டி வந்து, என்ன கொடுத்து பவிக்குத் துணை வைத்தாலும், சம்பளத்துக்கு இருக்கிற ஒருத்தியை பவி எப்படி மதிப்பாள்? அவளுக்குத் துணையிருக்க ஊதியம் வாங்குகிற ஒருத்தி, அவளது கணிப்பில் வேலைக்காரி மாதிரிதானே? இதைச் செய்யாதே, அதைப் பண்ணாதே என்று, அந்த வேலைக்காரி, பவித்ராவை அதட்ட முடியுமா? அதட்டினாலும் தேசிகன் மகள், அதற்குப் பணிந்து போவாளா?" என்று கேட்டார் சந்தானம்.

பேச்சின் சாரம், சின்னவன் மனதில்இறங்குவதற்கு சற்று நேரம் அவகாசம் கொடுத்துவிட்டு, சந்தானம் மறுபடியும் தொடர்ந்தார்.

"இதுவே உன் மனைவி என்கிற நிலையில் உள்ள ஒரு பெண் என்றால், பவித்ராவுக்கு தானாக மதிக்கத் தோன்றி விடாதா? யோசித்துப் பார். பிரச்சினை தீர. இது ஒன்று தவிர வேறே என்ன வழி இருக்கிறது?"

சற்றுநேரம் வானத்தை வெறித்துவிட்டு, சன்னக் குரலில், விபாகரன் பேசினான் "என்னால் இன்னொரு பெண்ணை, மனைவியாக நினைக்கக் கூட முடியாதே. அங்கிள், எப்படி மணப்பது?" என்று கேட்டான்.

"நடந்துதான் ஆக வேண்டும்ப்பா" என்றார் பெரியவர் சற்று அழுத்தமான குரலில். "ஆனால் ஏழைப்பெண் என்று, நான் ஒரு வார்த்தை சொன்னேன், பார். இல்லாத வீட்டுப் பெண் என்றால், கொஞ்சம் எதிர்பார்ப்பு குறைவாக இருக்கும். திருமணம் என்கிற பாதுகாப்போடு, கொஞ்சம் அன்பும் காட்டினாலே போதுமாய், பவிக்கு நல்ல துணையோடு, வழி நடத்தும் உறவும் கிடைத்துப் போகும்!"

இவ்வளவுக்குப் பிறகும், விபகாரன் முகத்தில் இணக்கம் தெரியாது போகவும், சந்தானம், இன்னொன்று சொன்னார்.

"விபாகரா நீ வருத்தப்படுவாயே என்று, இதை உனக்குச் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். ஆனால்... சொன்னால், ஒரு முடிவெடுக்க உதவக் கூடுமோ என்று இப்போது தோன்றுகிறது.

"நான் இங்கு வரும்போது அந்தப் பெண்ணுடைய அப்பா

சொன்னேனில்லையா? அவர் சதர்சனத்தைப் பார்த்து பேசியதாக சொன்னேனில்லையா? அவர் நிறைய வரன்களைப் இன்னொன்றும் சொன்னார். மகளுக்காக, அவர் நிறைய வரன்களைப் பார்த்தாராம். முதலில் இது சொத்தை, இது சொள்ளை என்று ஒதுக்கிய பெண், இப்போது எதுவுமே கூடாது என்கிறாளாம். திருமணமே செய்யப் போவது இல்லையாம். தையல் கலை படித்துவிட்டு, சொந்தமாக தொழில் வைக்கப் போகிறாளாம். அதுதான் இனி அவளது வாழ்க்கை என்கிறாளாம். ஒரே பெண், இப்படிச் சொல்கிறாளே என்று மனிதர் கண்ணீர் விடாத குறை!.

"சொல்லுப்பா, நீ இப்படி தனியாளாக இருக்கிற வரைக்கும் அந்தப் பெண்ணுக்கும், உள்ளூர ஒரு நம்பிக்கை மினுக்கிக்கொண்டு தானே இருக்கும்?

"நீதான், அவளோடு சரிப்படாது என்று ஒரேடியாகச் சொல்லிவிட்டாய். வேறேயாவது ஏற்பாடு நடந்தால்தானே, அதற்கும் மனதில் விடுதலை கிடைக்கும்? பெற்றவர்கள் சொல்வதை பற்றி காது கொடுத்து, ஒரு வார்த்தை கேக்கவேனும் தோன்றும்? அந்தப் பெண்ணுக்காகவும், இங்கே இந்தக் குழந்தைக்காகவும், சற்று யோசித்து முடிவு செய்யப்பா" என்றார் அவர்.

அக்கா மகளின் தேவை ஒரு பக்கம் என்றால், அத்தோடு சேர்ந்து சுசித்ராவின் நிலைமை இன்னமும் அதிகமாக அவனைப் பாதித்தது.

சந்தானத்தின் பேச்சும் முழுக்க முழுக்க உண்மையே.

பவியோடு கடைத்தெருவில் பார்த்துவிட்டு, அவளைக் கண்டிக்கப் போனபோது 'விபு' என்று, கண்ணில் ஏக்கத்தோடு, அவள் அழைத்ததே போதுமே!

பிறகு, பூங்காவில் பவித்ராவை அவன் பார்த்ததும் தையல் பயிற்சிக்குச் செல்லும் போதுதான்.

அந்தப் பயிற்சியின் நோக்கம் புரிந்தபோது, நெஞ்சில் ஏறிய கனம், தாங்க முடியாமல் கனத்தது.

பெண்ணைப் பெற்றவர்கள் படும் வேதனையையும் அவனால் நன்றாகவே உணரமுடிந்தது.

இதற்கு ஒரு தீர்வு, சந்தானம் சார் சொன்னது மட்டும்தான்.



கண் பாராததைக் கருத்து மறந்துவிடும் என்று அவன் எண்ணியது, நடக்காமல் போயிருக்கலாம். ஆனால், கண் முன்னே அவனுடைய மனைவி என்று ஒருத்தியைப் பார்த்துவிட்டால், சுசியின் மனம் மாறக் கூடும்.

அவன் மனம், எந்த அளவுக்கு மனைவியாக ஒருத்தியை ஏற்குமோ? அது எந்த அளவுக்கு சுசியை மாற்றுமோ? எதைப் பற்றியும் இன்றைக்கு நிச்சயமாக எதுவும் சொல்ல முடியாது.

ஆனால், பவித்ராவைப் பொறுத்தவரை, அவனது திருமணம் ஒன்றுதான் சரியான தீர்வு!

திருமணத்துக்கான தன் சம்மதத்தை சந்தானத்திடம் தெரிவித்தான். பெண்ணைப் பற்றிய தன் கருத்தையும், அவரிடம் தெரிவித்தான்.

ஏழையோ, பணக்காரியோ எல்லோருக்கும் மனது ஒன்றுதான். நெஞ்சு நிறைய ஆசையைச் சுமந்து கொண்டிருக்கும் எந்தப் பெண்ணையும் மணக்க விபாகரனுக்கு விருப்பம் இல்லை. அந்த மாதிரி ஆசைகளை அடியோடு இழந்துவிட்ட நிலையில், இன்னொரு பெண்ணின் மனதிலும் ஏக்கத்தை வளர்க்க அவனுக்குப் பிடிக்கவில்லை.

எனவே கணவனை இழந்தவள், ஏமாற்றத்தில் கஷ்டப்படுகிறவள், ஏதேனும் உடல்குறை உள்ளவளாக இருந்தாலும் பரவாயில்லை என்றான். துன்பத்தை அறிந்தவளாக இருந்தால், அதிலிருந்து கிடைக்கும் மீட்சியே, திருப்தியை தந்துவிடும் அல்லவா?

கைப்பிடித்தவனின் காதலுக்கும் நேசத்துக்கும், ரொம்ப ஏங்கத் தோன்றாது என்பது, விபாகரன் மனதுள் மட்டுமாக நினைத்தது.

"அங்கிள், மற்ற எதையும் விட, பவியையும், நிர்மலையும் பிரியமாக கவனிப்பதையே, முதல் கடமையாகக் கொள்ள வேண்டும். அதை மட்டும் தெளிவாகப் பேசிவிட வேண்டும், அங்கிள்" என்றான் அவன் வெளிப்படையாக.

ஆனால் "ஆகட்டும். இது போலக் கடமை ஏற்கத் தயாராக இருக்கும் பெண் தேவை என்று பத்திரிகைகளில், விளம்பரமாகப்

போடலாம். அதேபோலத் திருமண மையங்களிலும் சொல்லி வைக்கலாம். நிறையப் பேர் இப்போது இதைத் தொழிலாகவே செய்கிறார்கள். அந்த வகையில், அவர்களுக்கு நிறைய பேரைத் தெரிந்தும் இருக்கலாம். அவர்களில் நம் தேவைக்கு ஒத்து வருகிறவளைத் தெரிவு செய்யலாம்" என்று சந்தானம் சொன்ன யோசனை, விபாகரனுக்கு பிடிக்கவில்லை.

"இல்லை அங்கிள், இந்த இரண்டு வகையிலுமே, நாம் கொஞ்சம் அறியாத யாரோ ஒருத்தியை நம்பிப் பிள்ளைகளை ஒப்படைக்க நேரும். அவள் ஏறுமாறாக இருந்தால், நம் நோக்கமே அடியோடு பயனற்றுப் போய்விடும். அது மட்டுமல்ல, உள்ளதும் கெட்டு, பெரும் துன்பமாகவும் ஆகிவிடக் கூடும். எனவே, இதை வேறு மாதிரிதான் செய்ய வேண்டும் அங்கிள்" என்றான் அவன்.

"எப்படி?"

"அங்கிள், உங்களுக்குத் தெரிந்தவர்கள், உறவுக்காரர்கள் என்று நிறையப் பேர் இருப்பார்கள். அவர்களில் யாராவது நல்லவர்களிடம் இதுபோல என்று விவரம் சொல்லியே பெண் தேடுங்கள். சாரி அங்கிள். இது உங்களுக்குக் கொஞ்சம் தொல்லை பிடித்த விவகாரம்தான். நாள்கூட, இழுக்கக்கூடும். தயவு பண்ணி, என்னைத் தப்பாக நினையாதீர்கள், அங்கிள். ஆனால் நமக்கு முழுத் திருப்தி ஏற்படாத யாரிடமும் பிள்ளைகளின் பொறுப்பைக் கொடுக்க முடியாது. அங்கிள்" என்றான் விபாகரன். தெளிவாக ஆனால் தயக்கமாக.

பெரிய உதவி செய்ய வந்த பெரிய மனிதரை, பெரிய நிபந்தனை எல்லாம் போட்டு வேலை வாங்குவது போல, அவனுக்கு கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் இந்த விஷயத்தில் நீக்குப் போக்கு இருக்கக்கூடாதே!

அவனை உணர்ந்தவர் போல, அவனது தோளில் தட்டிக் கொடுத்தார், சந்தானம். "தப்பாக என்னப்பா? தேசிகனுடைய பிள்ளைகள் விஷயத்தில் உன்னை நினைத்தால், எனக்குப் பெருமையாகத்தான் இருக்கிறது. உனக்கே எவ்வளவு கஷ்டம், நஷ்டம் என்றாலும் அவர்களை முன்னிறுத்தியே யோசிக்கிறாய், பார்!



அந்த வகையில், தேசிகனும், சாருமதியுமே கொடுத்து வைத்தவர்கள்தான்" என்றார் புன்னகையோடு.

"அக்காவோடு, அத்தானுமே என்னை ஒரு பிள்ளை போலத்தான் நடத்தினார், அங்கிள். அதற்கு நான் செய்யும் எதுவும் ஈடு ஆகாது. ஆனால் எனக்காவது ரத்த பந்தம். அது இல்லாமலே நீங்கள் எவ்வளவு செய்கிறீர்கள்! அதற்கு முன்னால், வேறு எதுவுமே கிட்டே கூட வராது, அங்கிள்!" என்று உணர்ந்து கூறினான் சின்னவன்.

தலையசைத்து "ஊகூம் போதும்ப்பா! இப்படி ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொண்டே இருந்தால், வேறு வேலை நடக்காது. நான் கிளம்புகிறேன். இரவே பயணம். நாளைக்கே நீ சொன்னது போல உறவு, நட்பு எல்லோரிடமும் சொல்லி விடுகிறேன்" என்று சொல்லி விடைபெற்றார் சந்தானம்.

விபாகரனுக்கு வாக்களித்தது போலவே, அவரிடம் வந்தவர், போனவர் எல்லோரிடமும், அவன் கேட்டதுபோலத் தேவைகளைச் சொல்லி பெண் தேடலானார்.

பையன் ரொம்ப நல்லவன். பார்க்கவும் ராஜா மாதிரி நன்றாக இருப்பான். ஒரு கெட்ட பழக்கம் கிடையாது. சிகரெட் கூடப் பிடிக்க மாட்டான்.

தகப்பனார் இறந்த பிறகு, அக்கா வீட்டிலே இருந்து படித்தான். அந்த அக்கா வளர்ப்பிலேதான், பையன் இவ்வளவு நல்லவனாக உருவாகி இருப்பதே.

பத்து வயதில் பையனும், பனிரண்டு வயதில் பெண்ணுமாக, அந்த அக்கா பிள்ளைகள், பெற்றோரை இழந்து, இப்போது அநாதைகளாக ஆகிவிட்டார்கள். அவர்கள் பொறுப்பை, நன்றிக் கடன் மறவாத இந்தப் பையன் ஏற்றிருக்கிறான்.

பிள்ளைகள் தாயாருக்காக ஏங்குகிறார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு நல்ல அம்மாவாய்ப் பிரியமாகப் பராமரித்து வளர்க்கக் கூடிய ஒருத்தி தேவைப்படுகிறாள்.

தனக்கு மனைவி வேண்டும் என்பதை விட, முக்கியமாக அக்கா மகளுக்கு வீட்டில் பெண் பிள்ளை துணை வேண்டும் என்பதற்காகவே, பையன் கலியாணம் செய்துகொள்ள

உத்தேசித்திருக்கிறான்.

கான்வென்டில் படிக்கும் பிள்ளைகள், அதனாலே பெண்ணுக்கு இங்கிலீஷ் தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டுமாம். மிக முக்கியமாக, இரண்டு பிள்ளைகளையும் பாசமாக பார்த்து வளர்க்க வேண்டும்!

பெண்ணுக்குத் தேவை, இந்தக் குணங்கள் மட்டுமே, சொத்து பத்து என்று எந்த எதிர்பார்ப்பும் கிடையாது.

ஏற்கனவே மணமாகிக் கணவனை இழந்தவர்கள், மணவிலக்கு பெற்றவர்கள், நடமாட்டத்தைக் குறுக்காத அளவில் சிறு ஊனங்கள் உள்ளவர்களாக இருந்தாலும் பரவாயில்லை. அந்தப் பிள்ளைகளைத் தாயாகப் பொறுப்பாக வளர்க்க வேண்டும் அவ்வளவே.

தொழில்துறை நண்பர்கள், உறவினர்கள் எல்லோரிடமும் இப்படி ஒரு பெண் பற்றி விசாரிக்கும்போது, சந்தானம் தன் தனிப்பட்ட வேண்டுகோளாகக் கேட்டுக் கொண்டார்.

அவரது முயற்சியில், இந்த விவரங்கள் மெல்லக் கசிந்து, நாலாபுறமும் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் பரவியது.

ராஜபாளையம் அருகே ஒரு சிற்றூருக்கும் போய்ச் சேர்ந்தது.

ஊர் மக்கள் அத்தனை பேருமே, ஒருவருக்கொருவர் உறவும், நட்புமாக ஒரே குடும்பம்போல வாழ்ந்து வந்தார்கள்.

ஊரின் அத்தனை மக்களையும், பெரிதான சண்டை, சச்சரவு எதுவுமின்றி, ஒரே மாலையில் கட்டிய பூக்களைப் போலத் தன் செல்வாக்காலேயே சேர்ந்து வாழ வைத்துக் ரொண்டிருந்தவர், பண்ணை வீட்டு அய்யா.

யார் வீட்டில் நல்லது கெட்டது எது நடந்தாலும், முதல் அறிவிப்பு அவருக்குத்தான் போகும். மனைவியோடு வந்திருந்து, நல்லபடியாக நடத்திக் கொடுப்பதோடு, சிறப்பாக முறைமையும் செய்துவிட்டுப் போவார்.

தகராறுகளும் முதலிலேயே, அவரது நாட்டாமைக்குத்தான் போகும். அனேகமாக, அவரது சொல்லுக்குக் கட்டுப்பட்டுத் தீர்ந்தும் விடும்.



இந்த மாதிரிப் ஒரு பையனுக்கு பெண் தேடுகிறார்கள் என்ற தகவலும், அவரது காதுக்கு வந்தது.

அன்று, வாரக் கூட்டம் போடுகிற நாள்.

கட்டாயம் எல்லோரும் கலந்தாகவேண்டும் என்கிற மாதிரி கூட்டம் அல்ல. ஆனால் ஊர்ச் சவுக்கண்டியில் அமர்ந்து பண்ணை வீட்டய்யா கணக்கு வழக்கு பார்த்துப் பணப் பட்டுவாடா செய்வார்.

அப்படியே, அவர் அங்கிருக்கிற நேரத்தில், ஊராரும் சேர்ந்திருந்து ஊர் விவகாரம் பேசுவார்கள்.

பாதி இதனாலேயே ஊரின் சிறுசிறு விவகாரங்கள் பெரிதாகாமல் அங்கேயே அமுங்கிவிடும்.

அன்று திருநெல்வேலியில் தொழில் தொடர்பு வைத்திருந்த முத்தரசுதான், இந்தச் சேதியைக் கொண்டு வந்தார்.

கொண்டு வந்த செய்தி, எல்லோருக்குமே சற்று வியப்பாகத்தான் இருந்தது.

"காதல் கத்தரிக்காய் என்று, பெற்று வளர்த்த இடத்தில் கால் தரிக்காமல், பெண்டாட்டி பின்னலே ஓடுகிற பிள்ளைகள் பெருகிவிட்ட இந்தக் காலத்தில், அக்கா மக்களுக்காக வாழ்க்கையை விட்டுக் கொடுக்கிற, இப்படி ஒரு பிள்ளையா?" என்று பண்ணையார் ரொம்பவே ஆச்சரியப்பட்டார்.

"நன்றாக விசாரித்தாயா, முத்து? பையனுக்கு நோய் நொடி ஏதாவது இருக்கப்போகிறது" என்றார் சந்தேகமாய்.

"அப்படியில்லையாம், மாமா. விஷயம் சொன்னது என் தங்கச்சிக்கு நாத்தனார் வீட்டுக்காரர். அவருக்கு ரொம்பத் தெரிந்த சிநேகிதர்கள்தான் பெண் தேடுகிறவராம். அவரும், ரொம்ப நல்ல மனிதர். பையன் சொக்கத் தங்கம் என்று சத்தியமே செய்கிறாராம். தன்னை வளர்த்த அக்கா பிள்ளைகள்! அதுகளை நல்லபடியாகப் பார்த்துக் கொள்ள வேணும் என்பது மட்டும்தான் கண்டிஷனாம். அதிலும், பெண்ணுக்கு இரண்டும் கெட்டான் வயதாகிவிட்டது. பெண் துணை வேணும் என்று நினைக்கிறானாம்" என்றான் முத்தரசு.

அப்படியானால், கொஞ்சம் பெரிய பிள்ளைகள்தான், அந்தப் பொறுப்பை ஏற்கிற பெண் கிடைப்பது, கொஞ்சம் கஷ்டம்தான்"

என்றார் பண்ணையார்.

"அதுக்காகத்தான் மாமா, அவன் ரொம்பப் புதுப் பெண்ணாகக் கேட்கவே இல்லை. புருஷன் செத்துப்போய், அத்துவிட்டுத் தனியாகிப் போன பெண்ணுங்களே போதுமாம். இன்னும் ஏதாவது ஊனம் ஈனம் என்றாலும் பரவாயில்லையாம், மாமா!" என்று அதிசயமாய்ச் சொன்னான் முத்தரசு.

"மெய்யாலும் இது அதிசயம்தான்! ஆனால் முத்து, ஒருவேளை... கடன்கிடன் நிறைய இருந்து, இப்படிப்பட்ட பெண்கள் மூலம் பணம் நிறையக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறானோ, என்னவோ?"

"அப்படியும் இல்ல மாமா. தன் அக்கா பிள்ளைகள் நன்றாக இருப்பதுதான் முக்கியம். மற்றபடி, கட்டின சேலையோடு வந்தாலும் வைத்துக் காப்பாற்றுவதாகச் சொல்லுகிறானாமே" என்று முத்தரசு கூறவும், "ஆஹா!" என்றார் பெரியவர் திருப்தியோடு.

"அது மட்டும் முச்சூடும் நிசமாக இருந்தால், பலராமா, உன் தங்கச்சி மகளுக்குப் பார்க்கலாமே, அது கூட நொந்து போய் வந்த பொண்ணு...."

"ஐயோ, ஆமாம் சித்தப்பா, தெரியாத்தனமாக, ஒரு ராட்சசனுக்கு கட்டிக் கொடுத்து பெண் அரை உயிராகத் திரும்பி வந்தாள். எங்கள் தங்கத்துக்கு இப்படி ஒரு வாழ்வு கிடைக்குமானால், அந்தப் பிள்ளைகளைப் பொன் போலப் பார்த்து கொள்வாளே! நாம் போய்ப் பேசிமுடித்து விடுவோமா, சித்தப்பா" என்று அந்த பலராமன் ஆர்வத்தோடு கேட்டான்.

"பொறு பலராமா, இதிலே அவசரம் வேண்டாம். ஒரு தரம் தாங்க முடியாத அளவு கஷ்டப்பட்டுவிட்ட பெண். சும்மா வீட்டில் இருந்தாலும் பரவாயில்லை. மறுபடியும் உளைக்குள் மாட்டும் நிலை நேர்ந்து விடக் கூடாது என்பது ரொம்ப முக்கியம். அப்புறம் பிள்ளை ஒரேடியாக உடைந்து போகும். எதற்கும் முதலில் நன்றாக விசாரிப்போம். நிச்சயமாக நல்லதுதான் என்று தெரிந்தால், அப்புறமாக வீட்டு ஆளுகளுக்குச் சொல்லுவோம். அதுவரை பெண்டு பிள்ளைகளுக்கு அனாவசியமாக நம்பிக்கை கொடுக்கக்கூடாது" என்று பண்ணையார் சொன்னதை, எல்லோரும்



ஒத்துக் கொண்டனர்.

பையனது பணியிடம், பழக்க வழங்கள், சொந்த ஊர், சொத்து பத்து, ஆரோக்கியம் எல்லாம் விசாரிக்க ஏற்பாடு நடந்தது.

பணியிடத்தில் கெட்டிக்காரன் என்ற பெயர் வாங்கி இருப்பதும், மேற்கொண்டு முன்னேற வழி இருப்பதும் தெரிய வந்தது.

'லோன்' போட்டு சொந்தமாக ஃப்ளாட் வாங்கி, மாதாமாதம், அதற்கு பணம் கட்டி வருவது பற்றி, அறிந்தபோது, அதில் குறைப்பட ஒன்றுமில்லை என்றார், பண்ணையார்.

"ஆக்கத்துக்கான கடன், கட்டி முடித்ததும் சொந்த வீடு ஆகிவிடுமே! யோசித்து எடுத்திருக்கும் நல்ல முயற்சிதான்" என்று பாராட்டினார்.

கேட்டுப் பார்த்து அறிந்த அளவில், ஆரோக்கியக் கேடு இருக்கவில்லை. யாருடனும், தகராறு, பண்ணியதாகவும் தகவல் இல்லை! கெட்ட பழக்கங்கள் அடியோடு இல்லை!

வேலைக்காரம்மா, அக்கம் பக்கத்தார் எல்லோரும் நல்ல விதமாகவே சொன்னார்கள்.

நடக்க இருந்த திருமணம் நின்றதில் கூட, விபாகரனைக் குற்றம் சொல்வோர் யாருமில்லை.

எல்லாத் தகவல்களும் நல்ல விதமாகவே வந்தபோதும், குடி பிறப்பு பற்றியும் அறிவது முக்கியம் என்றார், பெரியவர். சொந்த ஊர், அங்கிருந்து அவர்கள் குடும்பம் குடிபெயர்ந்த காரணம், பற்றித் தெரிந்துவிட்டால், அதில் தப்பு இல்லை என்று ஆகிவிட்டால், பையனைப் பேசி முடித்து விடலாம் என்றார், அவர்.

அதன்படி முத்தரசே கிளம்பிப்போய், தங்கையுடைய நாத்தனார் கணவரையும் கூட்டிச் சென்று, சந்தானத்திடம் நேரடியாக விசாரித்து சொன்ன விவரத்தில், பண்ணைக்காரரின் முகம் சுருங்கிப் போயிற்று.

"என்னடா, கேட்டதெல்லாம் நன்றாக இருக்கிறதே என்று, ரொம்பவும் சந்தோஷப்பட்டேனே. கண்ணேறு பட்ட மாதிரி, கடைசியிலே இந்த ஊரா? சுத்த அயோக்கியப் பயலுகளின் ஊராயிற்றே, அது. எங்கே காசு? எங்கே சொத்து என்று அதே குறியாக இருப்பார்கள். சேச்சே! அந்த ஊர்ப் பெண்களே,

பையனைப் பற்றிக் கேட்பானேன்? ஜெகஜாலக்காரிகளப்பா! நாம் யோசிக்கவே அதில்கூட, ஒரு முக்கியமான ஒரு விஷயத்தை, இது, எப்படி இல்லை பார்! பையனை அக்காக்காரி வளர்த்தாளாம். அந்தக் நடந்திருக்கும்! ஒரு பெண்ணைக் கட்டிக்கொடுத்துவிட்டு, இருந்திருந்து குடும்பமே அந்த வீட்டில் உட்கார்ந்து தின்றிருக்கிறது! நல்லவேளை, நம் இந்த வீட்டில் பெண் கொடுக்க இருந்தோமே! பிள்ளை தங்கம் தப்பினாள். எல்லாவற்றிலும் தூக்கி எறிந்துவிட்டு, மனக ஆற, வேறு என்ன செய்யலாம் என்று யோசியுங்கள்" என்று முடித்தார் பெரியவர்.

அவரது சொல்லுக்கு மாறு சொல்லிப் பழக்கம் இல்லாததால், மற்றவர்களும் அந்தப் பேச்சை அப்படியே விட்டுவிட்டனர்.

ஆனால், கிட்டத்தட்ட விபாகரன் கேட்ட மாதிரியான ஒரு சம்பந்தம் கிடைத்து, கிட்டிமுட்டி முடிகிற நிலைக்கு வந்து, இல்லாமல் போவதை, சந்தானத்தால் ஒத்துக் கொள்ள முடியவில்லை.

அவரைப் பொறுத்தவரையில் அவருடைய நண்பருடைய பிள்ளைகள் நல்லபடியாக வாழ வேண்டும், அதற்கு, உரிமையுள்ள பெண் துணை வேண்டும்.

கூடவே அவனாகத் திருமணத்தை நிறுத்திய விதத்தில், விபாகரனிடம் மதிப்பும் பிரியமும் ஏற்பட்டு இருந்ததால், அவனது வாழ்வும் பட்டுப் போகாமல், நன்றாக இருக்க வேண்டும் என்று மிகவும் விரும்பினார்.

இத்தனையோடு, துன்புற்று நலிந்த ஒரு பெண்ணின் வாழ்வும் மலரக் கூடும் என்றால், அதை நழுவ விட்டுவிட அவருக்கு மனமில்லை.

திருமணம் என்றதும் அவ்வளவு ஆவலாக விசாரித்தவர்கள். விபாகரனை பற்றிய தகவல்களை அத்தனையையும் ஆவலாகத் திரட்டியவர்கள், திடுமெனக் கிணற்றில் போட்ட கல் மாதிரி, ஏன் சத்தமற்றுப் போனார்கள்? மேற்கொண்டு திருமணம் பற்றி பேச ஏன் வரவில்லை?

விஷயம் என்ன என்று அறிவதற்காகவும், விபாகரனைப் பற்றி



ஏதேனும். தப்பான கருத்துகள் ஏற்பட்டிருந்தால், உண்மையைச் சொல்லி அதைக் களைவதோடு, அந்தப் பெண்ணோடு, அவனது திருமணத்தை உறுதி செய்வதற்காகவும், அந்த முத்தரசின் ஊருக்கு, சந்தானம் கிளம்பிச் சென்றார்.

ஆனால் அங்கே சென்ற பிறகு, அவருக்கு, தான் பேசி முடிக்க வந்த திருமணம் பற்றிய நினைவே இல்லாமல் போயிற்று.!



## என்னவளே, காதல் என்பது.... 10

சந்தானத்துக்கு தேசிகனோடு பழக்கம் ஏற்பட்டது, சுமார் பத்து ஆண்டுகளாகத்தான். சரியாக சொல்வது என்றால், சாருமதிக்கு நிர்மல் பிறந்து, அவள் மருத்துவமனையில் இருந்தபோதுதான்.

அதே சமயத்தில் சந்தானத்துடைய மனைவிக்கு, சென்னையில் ஒரு விசேஷத்துக்கு வந்த இடத்தில் கருப்பையில் பெரிய பிரச்சினை ஏற்பட்டு, அதன் சிகிச்சைக்கென்று பெண்களுக்கான அதே மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள்.

வயதில் சுமார் பதினைந்து ஆண்டுகள் வேறுபாடு என்றாலும், உள்ளே பெண்கள் படுத்துக் கிடக்கையில், வெளியே காத்திருந்த இரண்டு ஆண்களுக்கும் இடையே ஓர் ஆழமான நட்பு உருவாயிற்று.

தேசிகனின் தொழில் ஆர்வம், சந்தானத்தை இன்னமும் கவர்ந்தது.

மனைவிக்குக் குணமாகி, ஊருக்குச் சென்ற பிறகும், தேசிகனோடு அவரது பழக்கம் தொடர்ந்தது.

தொழில் விஸ்தரிப்புக்காக தேசிகன் பங்குதாரர்களை ஏற்றபோது, அவரும் ஒரு பாகஸ்தர் ஆனார். தென்பாண்டி நாட்டின் வியாபாரத்தை அவர் பொறுப்பேற்று நடத்தினார்.

இப்படித் தொழில் உறவும் நட்புமாகப் பழகியபோதும், அவர்களது தொடர்பு, பெரும்பாலும் லாப்டாப், ஃபோனில்தான் இருந்தது. தேசிகனின் கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டதால், சாருமதியும் சகஜமாகப் பேசிப் பழகுகிற நிலையில் இருந்தாள்.

கணவன், மனைவி இரண்டு அருமையான குழந்தைகள் நல்ல குடும்பம். தனியாளான மைத்துனன் விபாகரன், பெரும்பாலும் கூட இருப்பான். இதுதான், தேசிகன் பற்றி சந்தானம் அறிந்தது.

அதற்குமேல், சொந்த விஷயங்களைப் பேசிக்கொண்டு உட்கார்ந்திருக்க, அவருக்கோ, தேசிகனுக்கோ அதிகமாக அவகாசம் இருந்தது இல்லை.

குடும்பம் என்கிற அளவில் இருவரும் அதிகம் பழகியது, சந்தானத்துடைய மகளின் திருமணத்தின் போதுதான். உடன் பிறந்த உறவு போல, அவ்வளவு கலகலப்பாகப் பழகினார்கள்.

ஆனால், அது உடனேயே துயரத்தில் முடிந்துவிட, விபாகரன், பிள்ளைகளின் இடையே உள்ள ஒட்டுறவு பற்றித் தேசிகன் கூறியதன் உண்மையை அவர் அறிந்ததும், அப்போதுதான். பார்த்துப் பழகிய அளவில், அவருக்கு அப்போதே, விபாகரனை மிகவும் பிடித்துப் போயிற்று.

பிறகு நடந்ததை எல்லாம், சென்னைக்கு சென்றபோது அறிந்ததும், அவனுக்கு உதவி செய்தே ஆக வேண்டும் என்ற உறுதி அவருக்கு உண்டாயிற்று.

அந்த உறுதியோடுதான், முத்தரசின் ஊரான மாதன்பட்டிக்கு அவர் பயணமானார்.

முத்தரசுடைய உறவினர் மூலம், அவரது வரவை முன்கூட்டியே தெரிவித்து இருந்ததால், அவரும், சந்தானத்தை வரவேற்று பண்ணை வீட்டய்யாவிடம் கூட்டிப் போனார்.

செல்லும் வழியிலேயே, எப்படிப் பண்ணையாரது சொல்லை யாரும் தட்டுவது இல்லை என்பது பற்றி எடுத்துச் சொன்னதோடு, விபாகரனின் சொந்த ஊர்தான், அவனையே விட்டுவிடக் காரணம் ஆயிற்று என்கிற விவரத்தையும் முத்தரசு எடுத்துச் சொன்னார்.

இது கிறுக்குத்தனமாகத் தோன்றியது சந்தானத்துக்கு.

ஏதோ ஒரிருவர் செய்த தப்புக்காக, அவர் ஊரார் அத்தனை பேரையும் கழித்துக் கட்டுவதே அசட்டுத்தனம். அதிலும், ஊரை விட்டு சென்று, இருபது ஆண்டுகளுக்கு பிறகு, அந்த ஊர்க்காரன் என்பதற்காக, ஒருவனுக்குப் பெண் கொடுக்க, யாராவது மறுத்தால்,



அது கிறுக்குத்தனம்தானே?

ஆனால், இந்தக் கிறுக்கனின் பேச்சுதான் இவர்களுக்கு வேதமாமே! இவனிடம் என்ன பேசினால் அவனது கிறுக்கு மண்டையில் உறைக்கும் என்று ஏளனமாக எண்ணமிட்டபடி சென்றவருக்கு பண்ணை வீட்டுக்காரரைப் பார்த்ததும் மனது மாறியது.

அப்படி ஒன்றும் அசட்டுக் கிறுக்கனாகவோ, கிழட்டு முசுடாகவோ அவர் தோற்றமளிக்கவில்லை. ஒரு கம்பீரம் தவிர, அவரை அவ்வளவு பெரியவராகக் காட்டவும், வயது, பந்தா எதுவுமில்லை!

வந்தவர் யார், எதற்காக வந்திருக்கிறார்? என்று அறிந்திருந்தும், வரவேற்று, உட்கார வைத்து உபசரித்தபோது, மரியாதை வந்தது.

வந்திருக்கும் வேலை இன்னதென்று அறிந்திருந்ததால், சுற்றி வளைக்காமல், மனிதர் நேரடியாகவே விஷயத்துக்கு வந்தார்.

"தம்பீ, உங்களுக்கு இது புரியாது. ஆனால், அந்த ஊர்ப் பெண்ணாலே, பெரிய துன்பம் அனுபவித்தவர்கள், நாங்கள். பொதுவாக விதை ஒன்று போட்டால், செடி வேறே முளைப்பதில்லை. முளைக்காது! அடி மரமாய் குடும்பத்தைத் தாங்க வேண்டியவள், பெண். அவளே அப்படி இருந்தால், அதே ஊர் ரத்தம், ஆண்பிள்ளை எப்படி இருப்பான்? அதுதான். அந்த ஊர்ச் சங்காத்தமே வேண்டாம் என்று முடிவு பண்ணினோம்" என்று சந்தானம், கேட்குமுன்னரே, விளக்கம் கொடுத்தார், ஊர்ப் பெரியவர் செல்வரங்கம்.

"நீங்கள் பார்த்த பெண், எப்படியோ தெரியவில்லை, அய்யா. ஆனால் பிறந்த ஊரின் பெயரையே விளங்க வைக்கக்கூடியவன், எங்கள் விபாகரன், பெயருக்கு ஏற்றபடி. அவன் மாசு மறுவற்ற சூரியன்தான். அவனைப் பற்றி, நீங்கள் விசாரித்து அறிந்தீர்களே, அத்தனையும் உண்மையே.

இன்றைய நிலையில், இதை உங்களிடம் சொல்வதில் தப்பில்லை என்று நினைக்கிறேன். அவனுடைய சகோதரியும், சகோதரி கணவரும் விபத்தில் உயிர் இழக்குமுன், அவனுக்கு கல்யாணம்

நிச்சயமாகி இருந்தது. ராமரும், சீதையும் போல அவ்வளவு பொருத்தம்! ஒருவருக்கொருவர் உயிராக இருந்தார்கள்.

"ஆனால் விருந்துக்கு பிறகு, தன் பொறுப்புகள், நிலைமைகளை எண்ணிப் பார்த்த விபாகரன், அந்த திருமணத்தையே நிறுத்திவிட்டான். அதற்கு, அவன் சொன்ன காரணம் என்ன தெரியுமா?" என்று தொடங்கி, அந்த விவரம் சொன்னார்.

"அந்தப் பெண்ணைப் பெற்றவர் என்னிடமே சொன்னார் பெற்றவனை, என்னைப் போல, அதே அன்போடு, என் மகளுக்காக யோசித்திருக்கிறார்' என்று. அவ்வளவு ஆசை உள்ளவன், அவளுக்காகப் பிள்ளைகளின் பொறுப்பை உதறவும் இல்லை! அதேசமயம் ஆசைக்காக அவளையே மணந்து, அவளைக் கஷ்டப்பட விடவும் இல்லை! கௌரவமாக ஒதுங்கிக் கொண்டான்"

"ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றார் பண்ணைப் பெரியவர், யோசனையாய்த் தன் பெரிய மீசையை வருடியபடி.

"அது மட்டுமில்லை. இப்போது பிள்ளைகளுக்காக திருமணம் செய்ய ஒப்பியபோதும், ஏற்கனவே ஒருத்தியை அந்த அளவு நேசித்துவிட்டு, ஒரு புதுப்பெண்ணை மணக்க, அவனுக்கு மனமில்லை. தனக்கும் இரண்டாவது போலவே எண்ணி, அதனாலேயே, விபாகர் என்ன மாதிரிப் பெண் தேடினான் என்று உங்களுக்கும் தெரியும்!"

"அந்தப் பிள்ளையைப் பெற்றவர்கள், அவனை மிகவும் சிறப்பாக, நியாயவாதியாக வளர்த்திருக்கிறார்கள்!" என்றார் செல்வரங்கம்.

"பெற்றவர்களா? விபாவுடைய எட்டு வயதில், அவனுடைய தந்தை இறந்து போனார். அடுத்த ஐந்து ஆண்டுகளில் தாயார் நோயாளியாகி, முடங்கிப் போனார்கள். இருபது வயதுக்குள், குடும்பச் சுமையை ஏற்று, தாயாருக்கு வைத்தியம் பார்த்து, தம்பியை வளர்த்து ஆளாக்கி.... எல்லாம் அவனுடைய அக்காதான், ஐயா! பொறுப்பும் பண்புமாக இந்தப் பையனை இந்த மாதிரி உருவாக்கியதே! அவள்தான்!

"அப்படிப் பார்க்கும்போது நீங்கள் வெறுக்கும் அதே ஊரில், ஆணும் பெண்ணுமாய் இரண்டு பேர், உன்னதமானவர்களாக



வளர்த்திருக்கிறார்களே! அதை எண்ணிப் பாருங்கள்!"

"ம்ம்ம்...' ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று எண்ணியது. இங்கே இடிக்கும் போலத் தெரிகிறதே!" என்றார் செல்வரங்கம்.

சரியான திசையில் யோசிக்கிறார் என்று உள்ளூர மகிழ்ந்தபடி, சந்தானம் தொடர்ந்தார், "பையனுடைய அக்கா கணவர்தான் என் நண்பர், அய்யா. அவரது காதல் திருமணம், மனைவியின் அழகை விட, அவளது பண்புதான், முதலில் அவரைக் கவர்ந்ததாக என்னிடம் ஒருமுறை சொல்லியிருக்கிறார். ஹூம், அந்த ஒரு தரம்தான். என் மகள் கல்யாணத்துக்கு வந்து. அந்த ஒரே நாள் உடன் பிறந்தான் மாதிரி ஒட்டுதலாக, சந்தோஷமாகப் பேசி பழகி இருந்துவிட்டு, அத்தோடேயே போய்ச் சேர்ந்து விட்டாரே... தன்னுடைய மூத்த மகனே விபாதான், பிள்ளைகளைத் தன்னை விட நன்றாகப் பார்த்துக் கொள்வான் என்று கூட, அன்று மனைவியோடு என் வீட்டில் தங்கிக்கொண்டு, பிள்ளைகளை அவனோடு அனுப்பும் போதும் தேசிகன் சொன்னார். அவ்வளவு தூரம் வீட்டிலும் உதவியாக இருப்பானாம்.

"அவர் சொன்னதே போல, விதி விளையாடிய அன்று பொறுப்பேற்ற விபாகர், அதை ஒருநாளும் சற்றும் தளர விடவே இல்லை!"

பண்ணை வீட்டாரிடமிருந்து தன் பேச்சைக் கேட்டதன் அறிகுறியாக, ஓர் 'ஊம்' கூட வராது போகவும் சந்தானம் அவரைக் கூர்ந்து பார்த்தார்.

ஏதோ இலக்கற்ற நோக்குடன் அசைவற்று இருந்தார், பண்ணையார். முகத்தில் மூப்பு தெரிந்தாற்போல ஒரு தோற்றம். அவ்வளவு நேரம், அவர் முகத்தில் இருந்த கம்பீரம் காணாமல் போயிருந்தது.

என்ன இவருக்கு? திடுமென என்ன ஆயிற்று? அசையக் காணோமே!

ஏதேனும் இதயக் கோளாறோ? அதுதானே, திடீரென்று வருவது என்று பயந்து "சார், சார். அய்யா" என்று செல்வரங்கத்தின் கையைத்

தொட்டு அழைத்தார் சந்தானம்.

லேசாகச் சிலிர்ப்புடன் கண்களை மூடித் திறந்தார் பண்ணை வீட்டார்.

அவரது கண்கள் கலங்கியிருப்பதைப் பார்த்த சந்தானத்துக்கு ஒன்றும் புரியவில்லை.

"தம்பீ, நீங்கள் சொன்னது, அத்தனையும் சத்தியம்தானே?" என்று கேட்டார் மற்றவர்.

"நூற்றுக்கு நூறு உண்மை! எந்தக் கோயிலில் வேண்டுமானாலும் வந்து சத்தியம் செய்கிறேன் அய்யா!" என்றார் சந்தானம்.

"அய்யா என்று அழைக்க வேண்டாம். என் கிட்டே வருகிறவர்கள் எல்லோருக்கும், நான் ஏதோ ஓர் உறவுதான். உங்கள் வயதைப் பார்த்தால்... சித்தப்பாவாக இருப்பேன் என்று நினைக்கிறேன். அப்படியே கூப்பிடுங்கள்" என்றவர், அந்த பரந்த தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்களை திரும்பிப் பார்த்தார்.

அவரது விழியசைவைப் பார்த்து, அவர்களில் ஒருவன் ஓடி வந்தான்.

"உள்ளார போய், அம்மாளைக் கூட்டி வா" என்றார்.

ஒன்றும் புரியாமல் "என்ன அய்... வந்து, சித்தப்பா?" என்று வினவினார் சந்தானம்.

"பதிமூணு வருஷமாக கண் மூடிக் கிடந்தேனப்பா. என் கண்ணைத் திறக்க கடவுளாகப் பார்த்து உன்னை அனுப்பி இருக்கிறார்!"என்று அவர் வருத்தமாக பெருமூச்சு விடும்போது, அவருடைய மனைவி வந்து சேர்ந்தாள்.

சந்தானம் வந்ததும், வேலையாள் தட்டில் கொண்டு வந்த சுக்கு வெல்லக் காஃபியை எடுத்துக் கொடுத்து குடிக்கும்படி உபசரித்துவிட்டுப் போன பெண்மணி.

"முதலிலே உட்கார்!" என்று மனைவியை ஏவியவர் சொன்னார் "நம்ம பலராமன் தங்கச்சி மகள் தங்கத்துக்கு ஒரு பையனைப் பார்த்தோமே, அந்தப் பையன்... அந்தப் பையன், நம்ம தேசியுடைய மச்சினன்...!"

அந்த பெண்மணி அதிர்ந்து விழிக்க, செல்வரங்கம் தொடர்ந்தார்



"இவர் தேசிக்கு ரொம்ப நெருங்கின சினேகம். உனக்குத்தான் விவரம் தெரியுமே, கல்யாணமானால் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ள வேணும் என்று அந்தப் பையனின் தரப்பிலே ஒரு 'கண்டிஷன்' போட்டது? அந்தப் பிள்ளைகள்... அவர்கள், நம் சொந்தப் பேரன் பேத்திகள்!" என்று பட்டென்று கூறி முடித்தார்.

காலடியில் கண்ணி வெடி வெடித்த உணர்வு சந்தானத்துக்கு!

தனக்கே இப்படி என்றால்... சட்டென அந்தப் பெண்மணியைப் பார்த்தார்.

துடித்த உதடுகளை இறுக மூடி, கலங்கிய கண்ணீரை சொரிந்து விடாமல், அகல விரித்துத்தட்டி தட்டி விழித்தபடி, அந்த அம்மாள் அமர்ந்திருப்பதைக் காணவும், அவருக்குக் கண்ணீர் வந்தது.

கூடவே "சும்மா அழுதுவிடு. இவர் யாரோ என்று நினைத்து அடக்காதே. எனக்கு அண்ணார் மகன் முறைதான். சித்தப்பா என்று கூப்பிடச் சொல்லியிருக்கிறேன்" என்றபோது, செல்வரங்கத்தின் குரலும் தழதழத்துவிட, சந்தானத்துக்கு இன்னமும் தாங்க முடியாமல் போனது.

மூவருமே உணர்ச்சி வசப்பட்டிருந்த நிலை மெல்ல மாறியது.

மூன்று பேரும், வீட்டினுள்ளே சென்று முகம் கழுவிக்கொண்டு, உட்கார்ந்து பேசினார்கள்.

பெரும்பாலும் பேசியது, பண்ணையார்தான்.

"ஊரில் எல்லோரும் நம் சொல்லைக் கேட்கிறார்கள். பெற்ற பிள்ளை, நம்மைச் சிறுமைப்படுத்தி விட்டானே என்கிற ஆத்திரம். என்னைத் தூண்டி விட்டிருக்கும்போல! மேலும் இங்கே நான் சொத்துக்காரன் என்றால், உலகத்துக்கே பெரிய ஆள் என்று எண்ணம் வந்துவிடுகிறது. அதிலும் மருமகளுக்கும் அவனுக்கும் ஓரளவு சம வயது என்றதும், நிச்சயமாக, அவள் ஜாலக்காரி., உலகம் தெரியாத மகன் ஏமாந்துவிட்டான் என்று மனதில் உறுதியாகிவிட்டது. எப்படியும் ஒரு நாள் மயக்கம் தெளிந்து வருவான். நாமாகப் போனால், அவனுக்கு இளக்காரமாகிவிடும் என்று நினைத்தேன். அன்றாட வேலைகளிலேயே நாள்தான் ஓடுகிறதே! விபத்து பற்றித் தெரிந்தபோது, அந்தப் பிள்ளைகள், எங்கள் பேரப்பிள்ளைகளாகத்

நம் மகனே இல்லை, அந்த ஜாலக்காரியுடைய தோன்றவில்லை. பிள்ளைகளுக்கா, இந்தப் பண்ணைச் சொத்து என்று ஆத்திரம்தான் வந்தது. தேசிகனும், விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டுப் போயிருந்தானா? போகட்டும்., எல்லாம் முடிந்தது என்று இருந்துவிட்டேன். மனைவி என்றைக்கும் என் சொல்லுக்கு மாறு சொன்னதில்லை? இப்படியே நாலு பேருக்கு நல்லது செய்தபடியே, காலத்தை கழித்துவிட வேண்டியதுதான் என்று நினைத்தேன். ஆனால்..." என்று எழுந்தவர், குறுக்கும் நெடுக்கும் நடந்து சற்று யோசித்துவிட்டு சொன்னார்.

"இப்போது நாம் சென்னைக்குப் போவோம். எங்கள் பேரன் பேத்தியால், அங்கே நடக்க வேண்டிய நல்லது கெட வேண்டாம். முதலில் அதை சீர் செய்வோம். நல்லவேளை எல்லாம் நிச்சயமாகத் தெரியுமுன், பெண்டு பிள்ளைகளிடம் ஒன்றும் சொல்ல வேண்டாம் என்று, பலராமனிடம் கூறியிருந்தேன். மற்றபடி, பலராமன் தங்கை மகளுக்கு, இது இன்னோர் ஏமாற்றமாகி, அது வேறு புது நோவாகிப் போயிருக்கும். போகட்டும். சீக்கிரமே அந்தப் பெண்ணுக்கு வேறே நல்ல இடம் பார்த்துக் கொடுப்போம். இப்போது... என்ன தம்பி, உங்களால் வேலையை ஒதுக்கி எங்களோடு சென்னைக்கு வர முடியும் அல்லவா?"

விடுவாரா சந்தானம்? வேறே என்ன வேலை இருந்தாலும், மூட்டை கட்டிப் போட்டுவிட்டு, விமானம் ஏறியேனும் சென்று விட மாட்டாரா?

சென்னையில், சுதர்சனத்தை அழைத்துப் பண்ணையாருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் சந்தானம்.

எல்லோருமாகச் சென்று பேசியபோது, விபாகரன் அப்படி ஒன்றும் உடனே தலையாட்டி விடவில்லை. கலக்கத்துடன் பண்ணையார் தம்பதியைப் பார்த்தான்.

வீட்டு மருமகளை ஒருபோதும் ஏற்காதவர்கள். பிள்ளைகள் பிறந்தபோது, பண்ணையார் எழுதிய வார்த்தைகள், இன்னமும் அவன் மனதிலிருந்து அழியவில்லை.

ஆனால், தன் காரணங்களைச் சொல்லி, அவன் தந்தையாக



மதித்த அத்தானுடைய தகப்பனார் மன்னிப்பை வேண்டியபோது, அவனும் இளகிப் போனான்.

கூடவே, அவருடைய மனைவி, பவித்ராவையும் நிர்மலையும் தொட்டுத் தடவிக் கொடுப்பதையும், முதலில் லேசாக ஒதுங்கிய பிள்ளைகள், மெல்ல அவளோடு ஒட்டி உராய்வதையும் அவன் கண்ணிலும் கருத்திலும் படாமலும் இல்லை.

ஆனாலும், அவனது தயக்கம் தீரவில்லை.

எதையும் நேரடியாக பேசும் தன் வழக்கம் போலவே, செல்வரங்கம் விபாகரனிடமும் பேசினார்.

அவனது தயக்கத்தின் காரணம் பற்றி, அவருக்கு ஓர் ஊகம் இருந்தது.

அதைத் தெளிவிப்பவராக "இதோ பாருப்பா, இந்தப் பிள்ளைகளுக்குத் தாத்தா பாட்டி என்றால், நாங்கள் கிழடு கட்டைகள், இவர்களுக்கு பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ள முடியாது என்று எண்ணிவிடாதே. எனக்கு வயது அறுபதுதான் ஆகிறது. என் மனைவிக்கு ஐம்பத்தி ஐந்துதான். மலை சார்ந்த கிராமம், அந்த சுத்தமான காற்றும், உணவும், பத்து வயது, குறைவாக உணர வைக்கும். நாங்கள் எவ்வளவு வலுவாக இருக்கிறோம், என்னென்ன செய்கிறோம் என்று, அங்கே வந்து பார்! வயலிலே டிராக்டர் ஓட்டுகிறது. உரமடிக்கிறது, எல்லாம் ஆளோடு சேர்ந்து நானும் செய்கிறதுதான். உன் அத்தையம்மா அதற்கு மேலே, ஊரிலே யாருக்கு என்ன என்றாலும், இடித்துப் பொடித்து மருந்து போட்டுக் கொடுக்கப் போய் விடுவாள்.

"அத்தோடு, பிள்ளைகளின் படிப்பைப் பற்றி கவலையே வேண்டாம். பக்கத்திலே ராஜபாளையத்திலே நல்ல பள்ளிக்கூடம் இருக்கிறது. கல்லூரிக்கும் நல்ல பேர்! காரிலே அனுப்பி படிக்க வைக்கிறேன்.

"பிள்ளைகளை நன்றாக வளர்த்து, படிக்க வைத்து விரும்புற மாதிரி, நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கவும் எங்களால் முடியும். அது வரைக்கும் திடகாத்திரமாகவே இருப்போம்! உரிமையில்லாமல் போகாதுப்பா.

"ம்ம்ம்... அட, அதற்காக உனக்கு

படிப்பு, திருமணம் எல்லாம் உன் விருப்பம் போலத்தான் நடக்கும்.
உன்னிடம் கேளாமல், எதுவுமே செய்ய இல்லை, போதுமா?" என்று
காலில் விழாத குறையாகக் குழையடித்துக் கேட்டார்.
விபாகரன் மறுத்து எதுவும் சொல்லாவிட்டாலும்
சந்தோஷத்தையும் முகத்தில் காட்டவில்லை. தீவிர யோசனைதான்.
சந்தானத்தையும், சுதர்சனத்தையும் ஒருதரம் பார்த்துவிட்டு,
செல்வரங்கமே,மறுபடியும்பேசினார். "தம்பி விபாகரா. உன்னையும்
பிள்ளை மாதிரியே தேசியும், அவன் மனைவியும் வளர்த்ததாகக்
கேள்விப் பட்டேன். ரொம்ப பாசமாக என்றும் சொன்னார்கள்.
அவர்களுடைய சொந்தப் பிள்ளைகளுக்காக நீ கலியாணம் காட்சி
இல்லாமல் தனி மரமாக நின்றால், உன் அக்கா, அத்தான் மனது
ஆறுமா? அதை நினைத்துப் பாரப்பா.

"தம்பி, இன்னும் ஒரு முக்கியமான விஷயமப்பா. ஒரு நல்ல
மருமகளும் பிள்ளையும் சந்தோஷமாக வாழுவதைப் பார்க்க, பார்த்து
மகிழ, இந்த மூட மனம் இடம் கொடுக்கவில்லை. பேரப் பிள்ளைகள்
விளையாட்டு, வளர்ச்சியில்கூட, இத்தனை வருஷங்கள்
அசட்டுத்தனமாக இழந்துவிட்டோம். இனிமேலாவது அந்த
சந்தோஷத்தை எங்களுக்கு கொடேன்? தயவு பண்ணிப்பா!" என்றார்
கெஞ்சுதலாக.

கண்களில் நீர் திரையோடு அவர் கேட்ட விதத்தில், அவனுக்குமே
தொண்டையை அடைக்கத்தான் செய்தது.

அதை லேசாகச் செருமிக்கொண்டே, பவி, நிர்மலைப்பார்த்தான்
"இதுபற்றி, அவர்களே முடிவு செய்யட்டும், மாமா" என்றான்
மெதுவாக.

மாமா என்ற அழைப்பைச் சம்மதமாகக் கொள்ள முடியாமல்,
பிள்ளைகளை முடிவு செய்யச் சொல்லிவிட்டானே!

அவர்கள் மாமாவைப் பிரிய மறுத்துவிட்டால்?

அச்சத்தில் இறுகி, செல்வரங்கம் பேச்சிழந்து சிலையாக
அமர்ந்திருக்க, பிள்ளைகளுடைய பாட்டி, அவர்களை அன்பாக
வருடி, மெல்லிய குரலில் ஏதோ சொல்லி அனுப்பினாள். இருவரும்
அருகே வந்து தாய்மாமனின் கைகளைப் பற்றி, அவன் முகம்



பார்த்தனர்.

நிர்மல் அவன் கழுத்தைக் கட்டிக்கொள்ள, பவித்ரா கேட்டாள்
"மாமா, நாங்கள் தாத்தா பாட்டிகூட போகட்டுமா? பாட்டி
தொடும்போது, அம்மா தொடுகிற மாதிரி நன்றாக இருக்கிறது.
தாத்தாவும் கொஞ்சம் அப்பா மாதிரி... ஆனால் உங்களுக்கு
கஷ்டமாக இருக்கும் என்றால், போகவில்லை, மாமா!" ஆனால்,
எனக்கு இங்கே தனியாக ரொம்ப கஷ்டமாக இருக்கிறது மாமா.
ஆனால் ஐயோ மாமா, நாங்கள் போய்விட்டால், நீங்கள் தனியாக
இருப்பீர்களே! எங்களோடு நீங்களும் வந்து விடுகிறீர்களா?" என்று
கெஞ்சுதலாகக் கேட்டாள்.

"ஐயோ, என்ன பாசம் பாரேன்! எப்படி வளர்த்திருக்கிறாள் என்
மருமகள்!" என்று சிலாகித்தார் செல்வரங்கம்.

ஆனால் பவித்ராவின் முகம் தெளியாதது கண்டு, சந்தானம்
அவளிடம் சொன்னார் "மாமா தனியாக இருக்க மட்டான், கண்ணு.
சுசிக்கா அத்தையாக வந்து, மாமா கூடவே துணையிருப்பாள்"
என்றார் சந்தோமான முறுவலோடு.

"சுசிக்கா அத்தையாக வருவது என்றால்... ஐ! அப்போ கலியாணம்
நடக்குமா?" என்று பவித்ரா மகிழ்ச்சியோடு கேட்க, "கலியாணமா?
ஐ ஜாலிப்பா!" என்று குதித்தான் நிர்மல்.

அப்போதும் திருமணம் பற்றி ஒப்புலாக, விபாகர் ஒரு வார்த்தை
பேசவில்லை.

இன்னமும் முகம் இறுகி நின்றவனை அழைத்து சுதர்சனம்
பேசினார் "மாப்பிள்ளை முதலில் திருமணத்தை நிறுத்த, நீங்கள் சில
காரணங்களை சொன்னீர்கள். நானும் என் மனைவியும் ரொம்ப
ஆச்சரியப்பட்டோம். தாய், தந்தையான எங்களைப் போல, சுசியின்
நலத்தை மட்டுமே கருத்தில் கொண்டு, சுயநலமே இல்லாமல்
யோசித்திருக்கிறீர்களே என்று, உங்கள்மேல் எங்களுக்கு மதிப்பும்
மரியாதையும் பல மடங்கு அதிகம்தான் ஆயிற்று. ஆனால் அந்த
மதிப்பும் மரியாதையும் மட்டும் வாழ்க்கையாக முடியாது என்று
உணர்ந்துதான் திருமண நிறுத்தத்தை ஒப்புக் கொண்டோம்.

"மாப்பிள்ளை, நாங்கள் பெரிய பணக்காரர்கள் அல்லதான்.

ஆனால் இருப்பதைச் சேர்த்துப் போட்டால் சமாளிக்க முடியும். அது
போல பண உதவி செய்யலாம் என்றுகூட எண்ணினோம். ஆனால்
வெறும் பணம் மட்டும் பிரச்சினை இல்லையே! கூடவே பணத்தை
ஏற்க, உங்கள் சுயமரியாதை இடம் தராது என்பதையும் உணர்ந்தே,
சும்மா இருந்தோம்.

ஆனால், பாருங்கள் மாப்பிள்ளை, கடவுள் அருளால், அன்று
நீங்கள் சொன்ன காரணங்கள் அத்தனையும், தானாகவே மிகவும்
நியாயமான முறையில், இன்று அடிபட்டுப் போயின. எந்தத்
தடையும், இல்லாத இந்த நிலையிலும் நீங்கள் ஏன் மாப்பிள்ளை,
தயங்குகிறீர்கள்? சம்மதம் சொல்லுங்கள், மாப்பிள்ளை.
உங்களுக்குத் தெரியுமா?, உங்களை மாப்பிள்ளை என்று
குறிப்பிடுவதை நானும் மனைவியும் ஒரு நாளுமே விட்டதே
இல்லை. சரி என்று சொல்லுங்கள் மாப்பிள்ளை" என்றார்.

அவர் முகத்தைக் கூர்மையுடன் நோக்கி "உண்மையாகவே
உணர்ந்துதான் சொல்கிறீர்களா?" என்று கேட்டான் விபாகரன்.

"ஆமாம் மாப்பிள்ளை! சத்தியமாக! எங்கள் எல்லோருக்கும் நல்ல
சேதி சொல்லுங்கள்!"

ஒரு வழியாக, "உங்கள் எல்லோருக்கும் இது ஒப்புதல் என்றால்,
எனக்கும் சம்மதம்" என்று திருவாய் மொழிந்தருளினான் விபாகரன்!

திருமணம் மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

ஆனால், தனிமையில் சந்தித்தபோது, சுசித்ரா முகத்தை திருப்பிக்
கொண்டு நிற்கவே "என்ன விஷயம்?" என்று கேட்டான் விபாகரன்.

"பின்னே? முடிவுக்கு வர, அவ்வளவு கஷ்டப்பட்டீர்களாமே?
அப்பா சொன்னாரே!" என்றாள் அவள் பிகுவோடு.

"ஓஹோ, அதுவா பிரச்சினை? என் தயக்கத்துக்கு நூறு சதவீதமாக
முழுக் காரணம் நீதான்" என்றான் அவன் இலகுவாக.

"நானா?"

"நீயேதான்" என்று அடித்துச் சொன்னான் அவன்.

"ஓஹோ, என்னைத்திருமணம் செய்ய நேர்ந்துவிடுமோ என்று,
பயந்து, கலங்கித் தவித்துத் தயங்கினீர்கள் போல!" என்றாள் அவள்
ஏளனமும் கோபமுமாக.

அவளை அருகில் இழுத்து "அப்படி இல்லை என்று உடனேயே
நிரூபித்து விடுவேன். ஆனால் அப்புறம் என் விளக்கத்தை,
இப்போதைக்கு சொல்ல முடியாது போகும் என்று பார்க்கிறேன்"
என்று இழுத்தான் அவன்.

அவனது பேச்சு, இனிய கற்பனையைக் கிளப்பியபோதும், "என்ன
பெரிய விளக்கம்?" என்று சிணுங்கினாள் சுசித்ரா. "எல்லா
வகையிலும் சரியான தீர்வு கிடைக்கும்போதும், பிடிக்காதது போல
நீங்கள் தயங்கியதாக அப்பா சொன்னபோது, என் மனது எப்படித்
துடித்தது, தெரியுமா? ஒருவேளை, முதலிலேயே நம்மைப்
பிடிக்காததால்தான் கிடைத்த முதல் வாய்ப்பில் திருமணத்தை
நிறுத்தினீர்களோ என்றெல்லாம் யோசித்து, மனம் நொந்து
போனேன்"

"ஆஹா! என்ன புத்தி கூர்மை! வெண்ணை, வாழைப்பழத்தை
கொடுத்தால் சரக்கென்று ஒரே வெட்டில், வெட்டித் தீர்த்து விடுவாய்
போல! ஹையோப்பா, என்னால் தாங்க முடியவில்லை சாமி! ஆமாம்
என்னமோ யோ... சித்ததாகச் சொன்னாயே, உண்மையாக உன்னைப்
பிடிக்காதவன்தான், அன்றைக்கு ஊரில் இருந்து மணிக்கணக்காக
அப்படிப் பேசுவேனா? அதை யோசிக்கவே
தோன்றவில்லையாக்கும்?"

"யோசித்தேனே" என்று முகம் சிவந்தாள் சுசித்ரா.

"என்னது, யோசித்தாயா? யோசித்த பிறகுமா, இப்படி நினைக்க
முடியும்?

"ம். முதலில் இல்லை. அப்புறம் இன்னும் யோசித்ததில், அதற்கும்
ஒரு விளக்கம் தெரிந்தது..."

"அதென்ன விளக்கம்!" என்று ஆச்சரியமாகக் கேட்டான் அவன்.

"வந்து... என்னைப் பிடிக்காவிட்டாலும், திருமணம் நிச்சயம்
ஆகிவிட்டதால், பிடித்த மாதிரி நடக்க முடிவு செய்து..."

"ஐயோ! போதும் தாயே, நீ இன்னும், இன்னும் யோசித்த
பெருமையை இத்தோடு நிறுத்திக்கொள். இதற்குமேல் நிச்சயமாகத்
தாங்காதும்மா!" என்று அடக்க மாட்டாமல் சிரித்தான் விபாகரன்.

அவன் சிரித்தது, அவளைப் பார்த்தல்லவா?

எனவே "சரி நான் யோசித்தது சரியில்லை என்றே, வைத்துக் கொள்வோம். உங்கள் சரியான காரணத்தை நீங்களும் எடுத்து விட வேண்டியதுதானே?" என்று ரோஷத்துடன் கேட்டாள் அவள்.

"என் சித்து..." என்று அவளது முகத்தை கைகளால் ஏந்தி, அவளது கண்களைப் பார்த்து, அவன் சொன்னான் "பழைய பாணியில் சொல்வதானால், இந்தக் கட்டழகுப் பெட்டகத்தை ரொம்பப் பிடித்ததுதான் காரணம். எல்லாவற்றுக்குமே, முதலில் மறுத்தற்கும் பிறகு தயங்கியதற்கும்"

"எப்படிப்பா?" என்று கொஞ்சலாகக் கேட்டாள் அவள்.

"ம்ம்ம், முதலில் குடும்பச் சுமையிலிருந்து இந்த அழகு முகம் வாடி வதங்கிப் போகுமோ என்ற அச்சம் கவலை.!"

"ஓ! அது புரிந்தது. அப்புறம்?"

"அதன் பிறகு, இந்த கட்டழகு பெட்டகத்தை அடையும் பேராசை, என்னை நிலை தடுமாற வைக்கிறதோ? கைவிட்டுப் போன செல்வம் மீண்டும் கிடைக்கக்கூடும் என்பது, என்னை நேராக யோசிக்க விடாமல், கிடைத்த வாய்ப்பை பற்றிக் கொள்ளச் செய்கிறதோ என்ற பயம்! அத்தானுடைய பெற்றோரை நம்பக் கூட தைரியமே இருக்கவில்லை. உன் அப்பாவே முன்வந்து பேசும்வரை... ஐயோ, அது என்ன மாதிரித் தவிப்பு தெரியுமா?" என்றவனின் அணைப்பு இறுகிப் போனது.

அந்த இறுக்கம், அவளது சஞ்சலங்களைப் போக்கி, சுகமான பதிலைத்தர அப்புறம் அங்கே பேச்சுக்கு இடமிருக்கவில்லை.!

முற்றும்